# ஞானச்சுடர்




மார்கழி 2016

228 ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்**
**பேரறி வாளன் திரு.**

**பொருள் :** உலகத்தார் நன்றெனக் கொண்டவற்றை விரும்பிச் செய்யும் அறிவாளியின் செல்வம் ஊரில் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம் நீர் நிறைந்தாற் போன்று பலருக்கும் பயன்படும். (215)

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்**
**நயனுடை யான்கட் படின்.**

**பொருள் :** உபகாரஞ் செய்வானிடத்தே செல்வம் உண்டாகுமாயின், அஃது ஊர் நடுவே நிற்கும் மரம் காய்த்துப் பழுத்தது போலாகும். (216)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை
## முத்தி நல்குமே
## ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



நந்தா விளக்கே ஞானச் சுடரே
இந்தா றணியு மிறையே முறையோ
வந்தாள் தருணம் மறையின் முடிவே
எந்தா யென்றுங் காப்பா யெனையே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 86

நாமார்க் குங்குடி யல்லோம் நாடிற்
தாமார்க் குங்குடி யல்லாச் சங்கரன்
கோமான் வைத்த குடியே நாங்கள்
ஏமாப் போம்பிணி யறியோ மென்றும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 87

நின்னா வார்பிற ரில்லை யெலாம்நீ
சொன்னார் முன்னோர் தோத்திரஞ் செய்து
பன்னா ளிப்படிப் பயிலப் பயில
என்னா யகமே யெமக்கறி வுண்டோ
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 88

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 228

2016 மார்கழி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சிதம்பர தரிசன மகிமை | கு. சோமசுந்தரம் | 01 - 07 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 08 - 11 |
| வினையே எமது பிறவிக்குக்... | பு. கதிரித்தம்பி | 12 - 13 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 14 - 18 |
| இறைவன் எழுதிய வாசகம் | குணாகரன் | 19 - 21 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 22 - 25 |
| முருகனும் ஔவையாரும் | வி. செல்வரத்தினம் | 26 - 29 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 30 - 32 |
| திருச்செந்தூர்ப்புராணம்... | ச. லலீசன் | 33 - 34 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 35 - 36 |
| ஞானச்சுடர் வளர்க! வளமுடன் | கு. சிவராஜசர்மா | 37 - 38 |
| சைவ சமய ஈடுபாட்டோடு... | திருவாரூரன் | 39 - 41 |
| அபரக் கிரியைகள் | இ. சரவணபவன் | 42 - 45 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 46 - 47 |
| சந்நிதியான் ஆச்சிரமமும்... | அ. சுப்பிரமணியம் | 48 - 51 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 52 - 57 |
| தமிழகத் திருக்கோயில் வரிசை | வல்வையூர் அப்பாண்ணா | 58 - 60 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்

# கார்த்திகைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் கார்த்திகைமாத மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆச்சிரமத்தோடு நீண்ட காலத் தொடர்பைப் பேணிவருபவரும் இளைப்பாறிய அதிபருமான திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள் ஆற்றியிருந்தார்கள்.

அவர் தமதுரையின்மூலம் ஆச்சிரமம் ஆற்றிவரும் பலவித சமய சமூகப் பணிகளின் செயற்பாட்டை சபையில் உள்ளோருக்கு கூறியதுடன், கடந்த பல வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடரின் வளர்ச்சி பற்றியும் அந்த வகையில் வருடம் ஒருமுறை இம்மலர் வெளியீட்டில் பங்குபற்றி வருவது பற்றியும் இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக விளங்கிக் கொண்டு இருக்கும் சந்நிதி வேற்பெருமானின் மீளா அடியவர்களாக நாம் விளங்கவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

மாதாந்தம் வெளிவந்துகொண்டிருக்கும் வகையில் 227ஆவது மலராக பிரகாசிக்கும் கார்த்திகைமாத மலருக்குரிய மதிப்புரையினை ஆச்சிரமச் செயற்பாட்டிற்கு ஊன்றுகோலாக விளங்குபவரும் அதிபராகக் கடமை புரிபவருமான திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் ஆற்றினார்கள்.

ஆச்சிரமம் ஆற்றும் பணிகளில் தலையானது நித்திய அன்னப்பணியாகும். அடுத்த சிறந்த பணியாக மிளிர்வது ஞானச்சுடர் வெளியீடாகும். கடந்த 16-17 வருடங்களாக ஒரு மலர் தொடர்ந்து அதுவும ஆன்மீக மலர் யாழ் குடாநாட்டில் வெளிவருவது ஒரு சாதனை என்றே கூறவேண்டும். இதனடிப்படையில் புதுவித ஆன்மீக எழுத்தாளர்களை உருவாக்கி அவர்களது கருத்துக்களை இம்மலரில் இடம்பெறச் செய்வதும் பாராட்டப்பட வேண்டும்.

இம்மலர் தொடர்ந்து வெளிவருவதனால் நாமும் வருடா வருடம் கார்த்திகைமாத மலருக்குரிய மதிப்புரையை ஆற்றும் செயற்பாட்டில் ஈடுபட வைத்த சந்நிதி வேற்பெருமானுக்கு நன்றி கூறியதோடு மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் பொதிந்துகிடந்த கருத்துக்களை சபையில் இருந்தோருக்கு கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நான் - எனது என்ற எண்ணங்களுக்கு அப்பால் எமது பிரதேசம், எமது இனம், எமது மொழி, எமது சமயம் என்ற கோட்பாட்டினை நிலைநிறுத்தி அதன்படி எவனொருவன் வாழ்கின்றானோ அவன் காலத்தால் அழியாத ஒரு பேற்றினை அடைகின்றான். அவ்வகையில் வர்த்தகராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் கடமை புரிந்த முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் அமரர் திரு தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் போற்றத்தக்கவர்.



அதனடிப்படையில் மகேஸ்வரன் அவர்கள் தான் வாழ்ந்த காலங்களிலெல்லாம் தான் வகித்த கடமைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். வர்த்தகராக இருந்தபொழுது அதனை ஈடுசெய்யும் வகையிலும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் மக்களின் குறைபாடுகளை நீக்குவதிலும், இந்து கலாச்சார அமைச்சராக பதவி வகித்தபோது அவரது தூய்மையான செயற்பாட்டின்மூலம் குறிப்பாக யாழ் குடாநாட்டு ஆலயங்களும், ஆலயம் சார்ந்த சபைகளும் ஏதோ ஒரு வகையில் பயனடைந்தன என்பதில் மிகையில்லை. அவர் சைவத்துக்கும், சமூகத்துக்கும் ஆற்றிய சேவைகள் என்றும் அவரை நினைவு கூரத்தக்கதாக அமைந்து விட்டது.

ஆம்! அமரர் மகேஸ்வரன் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த காலத்தில் எமது நாடு போர்ச் சூழலினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் தத்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. அக்காலத்தில் எமது ஆலயங்கள் அனைத்தும் இருள் சூழ்ந்த நிலை. அந்நிலை கண்டு அவர் தமது சமூகத்தின் தேவைகளை ஈடுசெய்ததின் மூலம் எல்லா ஆலயங்களும் ஒளி வெள்ளத்தில் திளைத்தன. அவரின் தன்னலம் கருதாத செயற்பாட்டின்மூலம் பயனடைந்தவர்கள் எண்ணற்றவர்கள். அதனடிப்படையில் நாம் அவர் ஆற்றிய சேவையினைப் போற்றவேண்டியவர்களாக உள்ளோம். அமரர் மகேஸ்வரன் மறைந்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்தாலும் அவர் ஆற்றிய சேவையை சந்நிதியான் ஆச்சிரமம் என்றும் நினைவுகூரும்.

# ஞானச் சுடரே நீ வாழி

செல்வச் சந்நிதி என்னும் பதியினிலே
நல்லாச் சிரமத்தில் மலர்ந்திடும் ஞானச்சுடரே
கல்லாதா ரையும் கனிய வைக்கும் நன்மலரே
எல்லார் இதயங்களையும் கவர்ந்திட்ட இனியமலரே.

சன்மார்க்க நெறிபரப்பும் சர்வகலா மலரே
தன்னால் தன்னை அறிய வைக்கும் தவச்சுடரே
தேன்போலத் தித்திக்கும் தீந்தமிழின் நறுமலரே
பன்னிருகை வேலவனின் பக்திச் சுவைதரும் சுடரே.

பக்திச் சுவையுடன் பண்பாட்டுச் சுவையும் தந்திடுவாய்
எத்திக்கும் சென்றே எதிர்கால வளம் தருவாய்
சக்தியும் புத்தியும் தந்தெம்மை வளர்த்திடுவாய்
சித்த சுத்தி தந்தே சிவமாக்கும் சிவச் சுடரே.

செய்ய தமிழும் சைவமும் வளமுடனே
வைய மெங்கும் வாழ வழிகாட்டும் நல்லொளியே
தையலார் பெற்றியையும் விளம்பிடும் சுடரொளியே
உய்விக்க வல்ல நல்உபாயந் தந்திடும் உயர்மலரே.

ஆன்மீக நெறிதழைக்க அரும் பணியாற்றும்
இன்னடியார் இதயம் மலர்ந்திட்ட பொன்மலரே
அன்பென்ற சொல்லிற்கு அர்த்தம் தந்த
நன்மலரே நாடியுன் வரவிற்காய் காத்திருக்கும் அடியர்நாம்.

ஆன்றோர் அமுத மொழிகள் அள்ளிவரும் அரும்சுடரே
தேன் மலரே தெவிட்டாத தெய்வச் சுடரொளியே
இன்னலுற்றோர் இடர்தீர்க்கும் இனிய மலரே
கன்மவினை களையும் கருத்தளிக்கும் கல்விச்சுடரே.

-திருமதி ப. நடராஜா அவர்கள்-

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)
**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)
**திருமதி ம. சுவாமிநாதன்**
(புத்தூர்)
**செல்வி க. பாமதி**
(கொக்குவில்)
**திருமதி திருச்செல்வம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)
**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)
**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)
**செ. சுரேந்திரா**
(சமூக சேவை உத்தியோகத்தர், அல்வாய்)
**சி. சந்திரசேகரம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**சி. தில்லைமணி**
(வட்டுக்கோட்டை)
**வ. அப்புத்துரை**
(வல்வெட்டித்துறை)
**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)
**ச. தமிழ்ச்செல்வம்**
(கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்)
**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)
**S. சிவலிங்கராசா**
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)

**வ. துரைராசலிங்கம்**
(சுண்ணாகம் கிழக்கு)

**கணேசராஜா நிர்மலராஜன்**
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)

**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)

**T. நாகராஜா**
(கரந்தன், நீர்வேலி)

**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)

**அ. பஞ்சாபகேசசர்மா**
(ஆவரங்கால்)

**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)

**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)

**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)

**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**S. சுப்பிரமணியம்**
(A.G.A. லேன், நெடியகாடு)

**சி. நீலையினார்**
(இடைக்குறிச்சி, வரணி)

**இராஜேந்திரம் கஜீபன்**
(சண்டிலிப்பாய்)

**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)

**தி. சிவபாதசுந்தரம்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)

**ந. சிவராஜா**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)

**சு. ஸ்ரீஸ்கந்தராசா**
(பலாலி வீதி, திருநெல்வேலி)

சி. இரத்தினசபாபதி
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
ஸ்ரீரஜனி அமரசிங்கம்
(அச்சுவேலி)
S.R. சரவணபவன்
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
க. வாமதேவன்
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
திருமதி ச. செல்வரஞ்சனா
(சுண்ணாகம் கிழக்கு)
S. மனோகரன்
(மாதா கோயிலடி, கோப்பாய்)
த. ஜெயவதனா
(அல்வாய்)
நடராஜா சறோஜா
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)
த. சுகந்தன்
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
சி. சோமகுலசேகரம்
(கரவெட்டி)
சி. சரவணப்பெருமாள்
(மாணிக்கவளவு, கரணவாய்)
சிவலிங்கம் தேவமலர்
(அச்சுவேலி)
S. நவரெட்ணம்
(கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு)
S. சத்தியமூர்த்தி
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
சு. சிவலிங்கம்
(குகன்குடிசை, பொலிகண்டி)
பா. பாலச்சந்திரன்
(சண்முகபவனம், மயிலணி)
செ. அரியானந்தம்
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
N. குணரெட்ணம்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
V. சிவனேசன்
(கமலை, மானிப்பாய் வீதி)

க. முருகானந்தன்
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
செ. உலகநாதபிள்ளை
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
செ. இராசதுரை
(வட்டுக்கோட்டை)
இ. பாஸ்கரன்
(சுதுமலை வடக்கு)
க. குமாரசாமி
(இணுவில்)
இ. நடராசா
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
பொ. செல்வகிருஷ்ணன்
(புலோலி தெற்கு, புலோலி)
சி. சிவசுப்பிரமணியம்
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
அ. பரமநாதன்
(தெல்லிப்பழை)
திருமதி கமலா குணரெத்தினம்
(வட்டுக்கோட்டை)
திருமதி சத்தியவாணி நந்தகுமார்
(நவாலி, மானிப்பாய்)
கந்தையா செல்வக்குமார்
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
மு. மகேந்திரன்
(யாழ்ப்பாணம்)
சு. சண்முகரட்ணம்
(புத்தூர்)
சோமசுந்தரம் செல்வசுந்தரம்
(மீசாலை கிழக்கு)

ஞானச்சுடர் வாசகர்களுக்கு
எமது இதயங்கனிந்த புதுவருட நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



# சிதம்பர தரிசன மகிமை

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –



சிவத்தலங்களில், "கோயில்" என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ள திருத்தலம், சிதம்பரம் ஆகும். கோ+இல், கோயில். கோ என்றால் அரசன், தலைவன்; இல் என்றால் இல்லம், வீடு எனப் பொருள் கொள்ளப் படுகின்றன. ஆகவே, கோயில் என்பது, எல்லா உயிர் களுக்கும் பதியாக, ஒப்பு உயர்வற்ற தலைவனாக விளங்குகின்ற இறைவன் உறையும் இல்லம் ஆகும்.

தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈச்சரங்கள் அமைந்துள்ளன. இவை, மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக் களுடன்; தொன்மைச் சிறப்பையும் பெற்றுள்ளன. இவற்றில் இருநூற்று எழுபத்தி நான்கு கோயில்கள், தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்கள் என்ற சிறப்பிற்குரியன. தற்காலத்தில், உலகின் பல பாகங்களிலும் சைவ ஆலயங்கள் பரந்து காணப்படுகின்றன.

சிதம்பரம், பூலோக கைலாயம் எனச்சிறப்பிக்கப்படுகிறது. சிதம்பரத்தைச் சிற்றம்பலம் என்றும்; பொன்னம்பலம் என்றும்; தில்லையம்பலம் என்றும் கூறுவர். அம்பலம் என்றால், வெளி என்று பொருள்படும். அதுவே ஆகாயப் பெருவெளியாகும். பேரம்பலம் என்பது கைலாயம் ஆகும்.

பஞ்சபூதத் தலங்களில் சிதம்பரம் ஆகாயத் தலமாக உள்ளது. கடவுள் இப்பிரபஞ்சம் மற்றும் அண்ட சராசரங்களைப் படைக்கும்போது, முதலில் தோன்றியது ஆகாயம் என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்தே, காற்று, நீர், நெருப்பு, நிலம் என்பன தோன்றின. அந்தவகையிலும், சிதம்பரம் முதல் தலம் என்னும் பெருமைக்குரியதாயிற்று.

சிதம்பரம் என்னும் சொல்லை, சித்+அம்பரம் என வகுத்துப் பார்க்கலாம். "சித்" என்பது உள்ளம் ஆகும். அம்பரம் என்பது வெளி அல்லது ஆகாயம் எனப் பொருள்படும். "உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம்" என்கிறார் திருமூலர். அண்டத்தில் உள்ளவை, பிண்டத்திலும் உள்ளன. அண்டம் என்பது உலகம்; பிண்டம் என்பது உடல். உலகம், உடல் இரண்டுமே நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் உருவாக்கமே ஆகும்.

சிவவழிபாடு செய்வதற்குத் தலயாத்திரை செல்பவர்கள், முதலில் சிதம்பர தரிசனம் செய்துவிட்டு, அதன்பின் யாத்திரையைத் தொடர்வதே முறையாகும் என்பர்.

*தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.*

சிதம்பரம் இப்பரந்த உலகின் இருதய ஸ்தானம் எனப்படுவதால் அத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இத்தலத்தில் இறைவன், நடராஜர் என்னும் திருநாமத்துடன், உருவ நிலையிலும், ஆகாயம் என்ற அருவமாகவும்; ஸ்படிக லிங்கம் என்ற அருவுருவம் ஆகவும் திருவருள் பாலிக்கிறார்.

இறைவனின் உருவத்திருமேனிகள் இருபத்தைந்து எனச் சொல்லப்படுகிறது. இவற்றுள் முதன்மையாகப் போற்றப்படுவது நடராஜர் வடிவமாகும். சிதம்பரத்தில் நடராஜப் பெருமான், ஆனந்த நடனம் ஆடிய படியே உள்ளார். அப்பெருமான் சதா ஆடல் புரிந்த வண்ணம் உள்ளமையினால்த்தான், இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. நடராஜர் ஆடல் வல்லான் என அழைக்கப்படுகிறார்.

ஆன்மாக்களின் பிறப்புக்குக் காரணம், கன்மவினைகளே ஆகும். நல்வினை, தீவினை என வினைகள் இருவகையாக உள்ளன. நல்வினைகள் இன்பத்தையும்; தீவினைகள் துன்பத்தையும் பயன்களாக வழங்குகின்றன செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் உண்டு. இறைநீதி அவற்றை வழங்கிய வண்ணம் இருக்கிறது. அவற்றை உயிர்கள் அனுபவித்தே தீர்க்க வேண்டும். அதற்காகவே, உயிர்களுக்கு, சிவபெருமான் தநு, கரண, புவன, போகங்களைப் படைத்து அருளியுள்ளார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும், அப்பெருமான் எப்போதும் செய்த படியே உள்ளமை குறிப்பிடத்தக்கது. நடராஜப் பெருமானின் திருவுருவம் இந்த ஐந்தொழில்களையும் உணர்த்துவதாகவே அமைந்துள்ளது. அதனால், இதனைப் பஞ்ச கிருத்திய நடனம் என நூல்கள் கூறும். ஆகாசம், இவ்வுலகின் தோற்றப் பொருள்கள் அனைத்திற்கும் மூலாதாரம் ஆகும். அது ஒலியுடன் தொடர்புடையது. நடராஜப் பெருமான் நான்கு திருக்கரங்களைக் கொண்டிருக்கிறார். ஒரு திருக்கரத்தில் டமருகம் எனப்படும் உடுக்கினை ஏந்தியபடியும்; மற்றொன்றில், அனல் எனும் நெருப்பை ஏந்தியபடியும் உள்ளார். உடுக்கு ஏந்திய திருக்கரம் படைத்தல் தொழிலையும்; அனல் ஏந்திய திருக்கரம் அழித்தல் தொழிலையும் குறிப்பனவாக உள்ளன. நடராஜப் பெருமானின் அபயகரம், "யாம் இருக்கப் பயம் ஏன்?" என்பதைக் குறிப்பால் உணர்த்திய வண்ணம் காத்தல் தொழிலை மேற்கொள்கிறது. ஆணவத்தின் வடிவமாக உள்ள முயலகன்மீது ஊன்றிய திருவடி, மறைத்தல் தொழிலையும்; தூக்கிய திருவடி அருளல் தொழிலையும் குறிப்பனவாக அமைந்துள்ளன என்று பெரியோர் விளக்கம் தந்துள்ளனர்.

சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானை வழிபடுகின்றவர்கள் இம்மையில் இன்ப சுகங்களும்; வளமான வாழ்வு நலங்களும் அடையப் பெறுவர். மறுமையில் பேரின்ப நலங்களும், மீண்டும் வந்து பிறவாத பேரின்ப முத்தியும் கிடைக்கப் பெறுவர்.

சிதம்பர தலத்தில் ஐந்து சபைகள் உள்ளன. அவையாவன: சித்சபை, கனக சபை, நடன சபை, தேவ சபை, ராஜ சபை என்பனவாகும். ஒவ்வொரு சபையும் தனிச் சிறப்புடையது.

ஆடல் வல்லான், இடைவிடாது, தொடர்ந்து ஆடல் புரியும் புனிதஸ்தானம், சிற்றம்பலம் ஆகும். இதுவே சித்சபை என்றும் அழைக்கப்படுகிறது. நடராஜப் பெருமான் இச்சபையில்த்தான் திருநடனம் புரிந்து ஐந்தொழில்களையும் ஆற்றுகிறார். சித்சபையில் நிகழுகின்ற ஆனந்தத் திருக்கூத்தினை, சிவகாம சுந்தரியார் இடைவிடாமல் கண்டு களித்தபடி உள்ளார். இவ்வாறு கண்டு

*தம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிஷ்டமாகும்.*

களிப்பதற்குரிய காரணம், ஆன்மாக்களின் பிறவிப் பிணியை நீக்கி, இறைவனோடு இணையச் செய்வதற்கே என்று, குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ளார்.

சிற்றம்பலம் என்னும் சித்சபையில், ஸ்படிக லிங்கம், மாணிக்கமயமான இரத்தின சபாபதி, சுவர்ண ஆகர்ஷண பைரவர், நித்திய உத்ஸவர் முதலானவர்கள் எழுந்தருளிக் காட்சி தருகின்றனர்.

சிற்றம்பலம் என்னும் சித்சபைக்கு முன் உள்ளது பொன்னம்பலம் என அழைக்கப்படுகின்ற கனகசபை. இச்சபையிலேயே, நடராஜப் பெருமானுக்கு, மகா அபிஷேகங்கள் நடத்தப்படுகின்றன. இதே சபையில், ஸ்படிக லிங்கத்திற்குத் தினசரி ஆறுகாலப் பூசையும்; பகல் இரண்டாம் காலத்தில் இரத்தின சபாபதிக்கு அபிஷேக, ஆராதனைகளும் நடைபெறுகின்றன. கனகசபையில் நின்று, நடராஜ தரிசனம் செய்யவும், சிதம்பர ரகசியத்தைத் தரிசிக்கவும்; அர்ச்சனைகள் செய்விக்கவும் பக்தர்களுக்கு அனுமதி உண்டு.

ஆடல் வல்லான் ஊர்த்துவ தாண்டவம் செய்தருளிய சபை; நிருத்த சபை அல்லது நடன சபை என அழைக்கப்படுகிறது. சுவாமிக்கும், அம்பாளுக்கும் நடனப் போட்டி நிகழ்ந்த அரங்கும் இதுவேயாகும். சுவாமி வெற்றி பெற்றார். சித்சபைக்கு நேரே; கொடிஸ்தம்பம், நந்திதேவர், பலிபீடம் என்பவற்றை அடுத்து, நடனசபை அமைந்துள்ளது. ஸ்ரீ சரபேஸ்வரர், இதே சபையில் எழுந்தருளியிருக்கிறார். இவரை வழிபாடு செய்தால் சகல தோஷங்களும் நீங்கும். ராகு காலத்தில் இவருக்கு நெய்விளக்கு ஏற்றி வழிபாடு செய்து வந்தால், கேட்ட நற்பலன்கள் கிடைக்கப் பெறுவர்.

தேவசபை என்னும் பேரம்பலத்தில், ஐந்து மூர்த்திகளும் எழுந்தருளியிருக்கின்றனர். இங்குதான் ஒவ்வொரு மாதமும் வருகின்ற திருவாதிரை நட்சத்திரத் திருநாளன்று, சோமஸ்கந்தமூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. பொது தீட்சிதர்கள், தேவ சபையில்த்தான் ஆலயப் பணிகள், வழிபாடுகள், மற்றும் கோயில் தொடர்பான விடயங்கள் குறித்துத் தீர்மானங்கள் எடுப்பதற்குச், சபையைக் கூட்டுவர். தில்லை வாழ் அந்தணர்கள், தீட்சிதர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களே சிதம்பரம் கோயில் பரிபாலகர்கள் ஆகவும் பூசகர்கள் மற்றும் உரிமையாளர்கள் ஆகவும் உள்ளனர்.

இராஜ சபையென்று அழைக்கப்படுவது ஆயிரங்கால் மண்டபத்தையேயாகும். இங்கு 999 தூண்கள் மாத்திரமே காணப்படுகின்றன. மீதமான ஒரு தூண், நடராஜப் பெருமானின் ஊன்றிய திருவடி என்று கூறப்படுகின்றது. ஆக, மொத்தம் 1000 கால் மண்டபம் இராஜ சபையாக விளங்குகின்றது.

இந்த ஐந்தாவது சபையில்த்தான்; ஆனி, மார்கழி மாதங்களில் நடைபெறுகின்ற மகோற்சவங்களின்போது, ஒன்பதாம் திருநாளில் இடம்பெறுகின்ற தேர்த் திருப்பவனியில், ஸ்ரீ நடராஜப் பெருமான், நான்கு வெளி வீதிகளிலும் உலா வந்த பின்னர், இரவில் இந்த ஆயிரங்கால் மண்டபத்தில் வீற்றிருந்து, விடியற்காலையில், அபிஷேகம் நடைபெற்று, பத்தாம் நாள் காலையிலிருந்து மாலைவரை, பல லட்சக்கணக்கான அடியார்கள், பக்தர்களுக்கு திருக்காட்சியளித்துத் திருவருள் பாலிப்பார். அதன்பின் ஆடல் வல்லான், முன்னதாகவும், சிவகாமி அம்பாள் பின்னதாகவும், நடனம் செய்துகொண்டு சித்சபைக்குச் செல்வர். இத் தெய்வீக நிகழ்வு கண்கொள்ளா அற்புதக் காட்சியாக விளங்கும். ஆனி உத்தர தரிசனத்தன்றும்; மார்கழித் திருவாதிரை ஆருத்தரா தரிசனத்தன்றும்

*உயர்ந்த பண்புக்கு அடிப்படை சிறு சிறு தியாகங்கள்.*

ஆடல்வல்லானின் திருநடனக் காட்சியைக் கண்குளிரக் கண்டு, திளைக்க முடிகின்றது. அடியார்களுக்கு அருள் விருந்து ஆகவும்; பாவ வினைகளைப் போக்கிக்கொள்ள, அரு மருந்தாகவும்; திருவம்பலத்தானின் ஆடல் நிகழ்வு விளங்குகின்றது. "அருமருந்தொரு, தனிமருந்து அம்பலத்தே கண்டேனே" சித்தர் ஒருவர் கூறிய தித்திக்கும் அமுதவாசகம்.

சிதம்பர தலத்தின் மகிமை உப நிடதங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத் துணை தொன்மையும் திருவருட்திறனும் கொண்டது. இங்கு, தேவர்கள், இருடிகள், முனிவர்கள், நாயன்மார்கள், அடியார்கள் எனப் பல திறத்தவர்களும் வந்து ஆடல் வல்லானைத் தரிசித்து அருள் பெற்றுள் ளனர். "தரிசிக்க முத்தி தரும் தலம் சிதம் பரம்" என அநுபூதிமான்கள் கூறியுள்ளனர். அப்பர் அடிகள், சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருநடனக் காட்சியைக் கண்குளிரக் கண்டுகளித்துக்கொண்டு, "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்; பனித்த சடையும், பவளம் போல் மேனியிற்பால் வெண்ணீறும்; இனித்த முடனே எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று வாயூறிப் பாடி, இறைவனுக்கு விண்ணப்பிக்கிறார். ஆடல் வல்லானின் திவ்விய தரிசனத்தைக் கண்டு, மனம், மொழி, மெய்யினால் களிப்புறுவதற் காகவே, மனிதப் பிறவியும் வேண்டுவதே என்று மனமுருகிப் பாடுகின்றார்.

இராஜ சபையிலேயே, எல்லா வகை யான திருநூல்களும், புராணங்களும், இதி காசங்களும் அரங்கேற்றம் செய்யப்பெற்றன. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமும் (பெரியபுராணம்) ஒரு சித்திரைத் திருவாதி ரைத் தினத்தில் அரங்கேற்றம் செய்யப் பெற்றது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் நால்வரும், சிதம்பர தலத்தைத் தரிசித்துத் தேவார, திருவாசகத் திருப்பாடல்களை, மனமுருகிப் பாடி, துதித்து முத்திப்பேறு பெற்றனர்.

சிதம்பரம் கோயிலில், புதைந்து கிடந்த தேவாரப் பதிகங்களை, நம்பி யாண்டார் நம்பியின் துணையுடன்; திருநாரை யூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்று; தேவாரப் பதிகங்கள் எங்குள்ளன என்பதை பிள்ளையார் நம்பிக்குத் திருவாய் மலர்ந்தருளியபடி; சிறந்த சிவபக்தனான, தஞ்சையில் இருந்து அரசாட்சி செய்து வந்த சோழமன்னன்; சிதம்பரம் சென்று நம்பி யாண்டார் நம்பியின் வழிகாட்டலில், மூவர் களுக்கு விழா நடத்தி, பொன்னம்பலத்தின் அருகே, மூவர் திருக்கர முத்திரையோடு, புதைந்து கிடந்த தேவாரப் பதிக ஏடுகளை மீட்டெடுத்து, சைவ உலகிற்கு வழங்கிப் பெருமை கொண்டனர்.

தெய்வத் தமிழையும், தமிழர் பண் பாட்டையும் சைவநெறி கலாசாரத்தையும் பாதுகாத்த சிறப்பும் சிதம்பர ஆலயத்திற்கு உண்டு. அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றுக் குறிப்புகள் கொண்ட பெரிய புராண நூல் இங்குதான் பாதுகாப்பாக வைக் கப்பட்டிருந்தது. அதனாலேயேதான் சிவனடி யார்கள், தொண்டர்கள் ஆகியோரின் வர லாறுகளை நாம் இன்றும் அறிந்துகொள்ள முடிகின்றது.

மாணிக்கவாசகர், நந்தனார், கணம் புல்லர், திருநீலகண்டர் ஆகிய சிவத் தொண்டர் பெருமக்கள், சிதம்பரத்தில் முத்தி பெற்றனர். சிதம்பரத்தில் நடைபெறும் திருவிழாக்களில், மார்கழித் திருவாதிரை ஆருத்திரா தரிசனம் முக்கியமானது. அன்று நடேசப் பெருமானுக்கு நிவேதனஞ் செய்த திருவாதிரைக் களி, ஒரு வாயாவது சாப்பிட

*ஒரு கணத்தில் இழந்த மானத்தை ஓராயிரம் ஆண்டுகளானாலும் பெற்றுவிட முடியாது.*

வேண்டும் என்று கூறுவர். சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை தினத்தன்று, களிக்கிண்டி அதனை நிவேதனமாக நடராஜப் பெருமானுக்கு படைக்கும் வழக்கம் இருந்து வருகின்றது. களி என்பது பொதுவாக ஏழைகளின் உணவு. இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டது என்பதற்கு ஒரு வரலாறு உள்ளது.

சேந்தனார் என்பவர், பட்டினத்தாரின் கணக்காளராகப் பணியாற்றி வந்தவர். பட்டினத்தாரின் பணிப்பின்படி, சேந்தனார் மனைவி மக்களுடன் சிதம்பரம் சென்று வாழ்ந்து வந்தார். அங்கு வறுமை ஏற்பட, விறகு விற்று அதில் வரும் சிறிய வருமானத்தில் சீவியம் நடத்தி வந்தார். ஏழ்மை நிலையிலும் சேந்தனார், தினமும் ஒரு அடியாருக்காதல், அமுது அளித்து அதன் பின்னரே தாம் உணவு உண்ணுகின்ற முறைமையை விரதமாகக் கொண்டு வாழ்ந்து வரலானார். ஒரு முறை கார்த்திகையில் தொடங்கிய மழை, மார்கழி இறுதிவரை விடாது பெய்து வந்தது. சேந்தனாரின் விறகு வியாபாரத்திற்கும் இடையூறு ஏற்பட்டது.

மழையில் நனைந்த ஈர விறகை எவரும் விலைகொடுத்து வாங்க முன் வரவில்லை. வருவாய் குறைய, வறுமை மிகுந்தது. வறுமைபற்றிச் சேந்தனார் துன்பப்படவில்லை. சிவனடியாருக்கு உணவு வழங்க முடியவில்லையே என்பதுதான் அவர் மனதை வருத்தியது.

மார்கழித் திருவாதிரைத் திருநாளன்று என்ன பாடுபட்டோ தன்னிடமுள்ள ஈர விறகுகளை ஒருவரிடம் கொடுத்துப், பண்டமாற்றாகச் சிறிய அளவு அரிசிமாவை வாங்கிவரவேண்டுமென்ற சங்கற்பத்துடன், வெளியே சென்றார். ஒருவாறு, எல்லா விறகுகளையும், ஒருவருக்குக் கொடுத்து பண்டமாற்றாக சொற்ப அரிசிமாவை அவரிடம் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினார் சேந்தனார். அந்த மாவைக் கொண்டு சிறிது களியைச் சமைத்தபின்னர், வெளியிற் சென்று சிவனடியார் ஒருவரைத் தேடி அலைந்தார். மழை அடைத்துப் பெய்து கொண்டிருந்தது. சிவனடியார் ஒருவரையும் அவரால் கண்டுகொள்ள முடியவில்லை. சிவனடியார் வீடுதேடி வந்தபோது, உணவு தம்வசம் இல்லையே என்று தவித்த சேந்தனார், அன்று உணவு சமைத்திருந்தும், அதனை உண்பதற்கு அடியார் எவருமின்றித் தவித்தார்.

ஈற்றில், சேந்தனார் வீட்டிற்கு வயது முதிர்ந்த பிராமணர் ஒருவர், மழையில் நனைந்தபடி வந்து சேர்ந்தார். சேந்தனாரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே விருந்தினரை வரவேற்று, உரிய உபசாரங்கள் யாவும் செய்து, ஆசனத்தில் அமர வைத்து சமைத்து வைத்திருந்த களியை அன்புடன் பரிமாறினார். அடியார் களியை உண்ட பின்னர், மிகுதிக் களியைச் சேந்தனார் குடும்பத்திற்கு வைக்காமல் தாம் எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார். சேந்தனார் தமக்கு உணவில்லையே என்று சிறிதும் வருந்தவில்லை. அன்று மாலை, தில்லை நடராஜப் பெருமானுக்குப் பூசை செய்வதற்கு, தில்லை வாழ் அந்தணர்கள், அங்கு சென்றபோது, பொன்னம்பலத்திலும், அங்கிருந்து சித் சபைக்குள் செல்வதற்கான, பஞ்சாட்சரப் படிகளிலும், களி சிந்தியிருக்கக் கண்டார்கள். இப்பொழுது, ஒரு பேருண்மையை உணரமுடிகின்றது. தில்லை நடராஜப் பெருமான்தான், கிழப் பிராமணர் வடிவத்தில் சேந்தனாரின் இல்லம் புகுந்து அவரிடம் களி உணவு உண்டிருக்கிறார்; பின் மிகுதிக் களியையும் எடுத்துக்கொண்டு வெளியேறியுள்ளார். சேந்தனாரிடம் களியுணவு பெற்று உண்டதையும், மிகுதிக் களியையும் தாமே எடுத்துச் சென்றமையையும்,

*வெறும் அதிஷ்டத்தைத் தேடி ஓடும்போதுதான் நாம் கால்கள் இடறி விழுந்துவிடுகிறோம்.*

சேந்தனாரின், சிவனடியார்களுக்கு உண வளிக்கும் திருத்தொண்டினையும் பலரும் அறியச் செய்வதற்கும் திருவுளங் கொண்டு தான் தில்லை நடேசப் பெருமான் பொன்னம் பலத்திலும் பஞ்சாட்சரப் படிக்கட்டிலும் களி யைச் சிந்தியுள்ளான். இதுவே அந்தப் பேருண்மையாகும்.

இத் தெய்வீக நிகழ்வினை நினைவு கூரும் முகமாகவே நடேசப் பெருமானுக்குத் திருவாதிரைத் தினத்தன்று ஆண்டுதோறும் களி நிவேதனம் செய்யப்படுகின்றது.

பக்தர்களில் அநேகமானோர் சிதம் பரம் திருக்கோயிலின் மூலவர், நடராசப் பெருமான் என்றே எண்ணுகின்றனர். ஆனால் இத்தலத்தின் மூலவர், இலிங்க வடிவில் தனிக்கோயிலில் ஆதிமூலர் என்னும் திரு நாமம் கொண்டு திருவருள் பாலிக்கிறார்.

திருவாரூரிலே பிறக்க முத்தி; காசி யில் இறக்க முத்தி; சிதம்பரத்தில் நடராசப் பெருமானைத் தரிசித்த மாத்திரத்தே முத்திப் பேறு உறுதியாகிவிடுகிறது என நூல்கள் தெரிவிக்கின்றன. பிறப்பும் இறப்பும் எமது எண்ணப்படி நிகழ்வன அல்ல. சிதம்பரம் சென்று, திருநடனம் புரியும் ஆடல்வல் லானை, தரிசனம் செய்வது நமக்கு இயலக் கூடியதேயாகும். தரிசித்த மாத்திரத்தே திரு வருள் கிடைக்கும் உரிய கால எல்லை வரும்போது முத்தியும் சித்திக்கும் தலம் சிதம்பரம். வாழ்நாளில் ஒருமுறையாதல் சிதம்பரம் சென்று நடராச தரிசனம் செய்து மீளுதல் சைவர்கள் ஒவ்வொருவரினதும் சமயக் கடமையாகும்.

மாணிக்கவாசகர் பல சிவத்தலங் களைத் தரிசித்துத் தீந்தமிழ்ப் பாக்களை இறைவன்மீது திருவாய் மலர்ந்தருளினார். அவையே திருவாசகம், திருக்கோவையார் ஆக மிளிர்கின்றன. ஈற்றில் சிதம்பரம் வந்தார். ஆடல் பெருமானைத் தரிசித்தார்; பரவசம் ஆனார். அங்கேயே தங்கிவிட்டார். ஒருநாள் அந்தணர் ஒருவர் மாணிக்கவாசகர் தங்கி இருந்த இடத்திற்கு வந்து அவரிடம் "நீர் பாடிய திருப்பாசுரங்களை ஓத விரும்பி, அவற்றை உம்மிடம் கேட்டு எழுதுவதற்கு வந்துள்ளேன்" என்றார். மாணிக்கவாசகரும் அதற்கு இணங்கிப் பாடல்களைப் பாட, அந்தணர் கேட்டு எழுதினார். பின்னர் கோவை பாடும்படி கேட்டார். திருக்கோவை யார் பாடினார். அந்தணர் அப்பாக்களையும் எழுதினார். பின் அவ்விடத்தை விட்டு நீங்கி விட்டார்.

அடுத்தநாட் காலை சிதம்பரம் கோயில் படியில் ஏடு ஒன்று இருக்கக் காணப்பட்டது. பூசை செய்ய வந்த அந்தணர் கள், ஏட்டை எடுத்துப் பார்த்தபோது, திருவாசகப் பாடல்களும், திருக்கோவை யாரும் எழுதப்பட்டிருந்தன. முடிவில், "வாதவூரன் விளம்பிட, அம்பலவன் எழுதி யது" எனப் பொறிக்கப்பட்டும், "அழகிய சிற்றம்பலமுடையான்" என ஒப்பமிடப்பட்டும் இருந்தது.

தீட்சிதர்கள் மாணிக்கவாசகருக்கு இதனைத் தெரிவித்து, அவரை அழைத்து வந்து, காண்பித்து, பாடல்களுக்குப் பொருள் கேட்க; நடராசப் பெருமானைக் காட்டி, "அவரே அவற்றின் பொருள்" எனக் கூறிய வாறு கருவறைக்குட் புகுந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து சாயுச்சிய முத்தியெனும் அதியுயர் பரமுத்தியை அடைந்தார். பன்னிரு திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாக வைக்கப்பட்டுள்ள திருவாசகம் கல் மனத் தையும் கனிவித்து; வன் நெஞ்சத்தையும் நன்னெஞ்சமாக மாற்றம் செய்யும் ஆற்றல் உடையது.

மாணிக்கவாசக சுவாமிகள் புறச் சமயிகளை வாதில் வென்று சைவத்தின் தனிப் பெருஞ் சிறப்பை நிலைநாட்டியது,

சிதம்பரத்திலேயாகும். ஆதிசங்கரர், சிதம் பரம் வந்து, சிதம்பர சக்கரம் ஒன்றையும் ஸ்தாபித்து படிகலிங்கமாகிய அழகிய சிற்றம்பலமுடையாரையும், வழங்கியதாகச் சரித்திரக் குறிப்பு உள்ளது.

சிதம்பரத்தில் திருநடனம் புரிகின்ற நடராஜப் பெருமானின் அழகிய "குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, பனித்தசடை, பால்வெண்ணீறு, பவள மேனி, எடுத்த பொற்பாதம் என்பவற்றை மீண்டும் மீண்டும் கண்குளிரக் கண்டு களிப் பதற்காகவே "மனிதப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே" என்று அப்பர் பெருமான் உள்ளமுருக இறைவனை வேண்டி நின்றார். திருஞானசம்பந்தர், அஞ்ஞான்று சிதம்பரத்தில் காணப்பெற்ற எழில்மிகு செல்வ நெடுமாடங்களைப் பாடிப் பரவினார். உயர்ந்த உள்ளங்களையும் ஓங் கிய நோக்கங்களையும் வானளாவிய செல்வ நெடுமாடங்கள் எடுத்துக் காட்டுகின்றன என்று குறிப்பிட்டிருந்தார்.

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராண மும் (பெரியபுராணம்) சிதம்பரம் ஆயிரங் கால் மண்டபத்திலேயே அரங்கேற்றப்பட்டது.

பல்லவ மன்னர்களும், சோழ மற்றும் பாண்டிய மன்னர்களும் சிதம்பரத்தில் திருப் பணிகள் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது சைவத் தமிழ் கல்விப் பணிகளை மேற்கொள்வதற்குச் சிதம்பரத்தையே தலைமை நிலையமாகத் தேர்ந்தெடுத்தார். நாவலர் சிதம்பரத்தின் மூர்த்தி, தலம், தீர்த்த மகிமைகளை நன்கு அறிந்தவர் ஆவார்.

சைவர்களுக்குத் "திருச்சிற்றம்பலம்" ஒரு மந்திரச் சொல் ஆகும். பஞ்சாட்சரம் உச்சரிப்பது போன்று திருச்சிற்றம்பலம் என்று கூறுவதும் சைவ மரபு. தேவாரம் முதலிய பஞ்சபுராணம் ஓதப்படுவதற்கு முன்னும், ஓதி முடிந்த பின்னும், "திருச்சிற்றம்பலம்" சொல் வது சைவ முறைமை. சிதம்பரத்தின் சிறப்புப் பெயர் திருச்சிற்றம்பலம் என்பதாகும்.

வியாக்கிரபாதர், மன்று தொழுத பதஞ்சலி ஆகிய முனிவர்கள் தவம் செய்து, முத்திப்பேறு பெற்ற தலம், சிதம்பரம். திரு மூலர் வணங்கித் திருவருள் பெற்ற தலம். "எங்கும் திருமேனி; எங்கும் சிவசக்தி; எங்கும் சிதம்பரம்; எங்கும் திருநட்டம்" என்கிறது திருமூலர் திருமந்திரம்.

"சிதம்பர தரிசனம்" பல்கோடி புண் ணியம் என்னும் பேருண்மையை உணர்வோ மாக.

**திருக்கேதீஸ்வரம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையினரின்**

**29ஆவது வருடாந்த திருவாசக முற்றோதல்**

மேற்படி தொண்டர் சபையினரின் 29ஆவது வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு, 31A ஜானகி ஒழுங்கை, பம்பலப்பிட்டியில் உள்ள "திருவாசக இல்லத்தில்" 08.01.2017 ஞாயிறு அதிகாலை 5.00 மணிமுதல் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

"திருப்பணித் தவமணி" சி. தியாகராசா அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றிச் சிறப்பிக்க உள்ளார்.

ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையினர், அன்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறார்கள்.

*எரிகிற விளக்காக இரு. அப்போதுதான் மற்ற விளக்குகளை ஏற்றி வைக்கலாம்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

28. பேசிற்றாம் ஈசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப்பேசிப்
பூசிற்றான் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தாய் அந்தோ
என்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே.

**ப-ரை:**

மாசு அற்ற மணி குன்றே- குற்றமற்ற மாணிக்கமலையே, எந்தாய்- எங்கள் தந்தையே, தாம் பேசி- தாம் புகழ்ந்துரைக்கில், ஈசனே எந்தாய் எந்தை பெருமானே- உலகு உயிர்களை உடையவனே, எங்கள் தந்தையே, எங்கள் தந்தைக்கும் தலைவனே, என்று என்று பேசி பேசி- என்று என்று பலகாலும் புகழ்ந்து உரைத்தும், பூசில் எம்பெருமானே போற்றி என்று திரு நீறே நிறையப் பூசி- அணிந்துகொள்ளில் எங்கள் தலைவனே காத்தருள்க என்று கூறித் திருநீற்றையே உடல் முழுவதும் பரவப்பூசியும், பின்றா நேசத்தால் பிறப்பு இறப்பு கடந்தார் தம்மை ஆண்டானே- பின்னிடுதலில்லாது வளரும் மெய்யன்பினால் இனிவரும் பிறப்பையும் கடக்கும் தகுதியுடையாரை ஆட்கொண்டருளினவனே, அவா வெள்ளக் கள்வ னேனை- அவாப் பெருக்கினையுடைய கள்வனாகிய என்னை, நீ ஆட்கொண்ட வண்ணம்தான் என்னை- நீ அடிமைகொண்ட தன்னை என்னையோ? அந்தோ- என்ன அதிசயம்.

மாசற்ற மணிக்குன்றே எந்தாய் தாம் புகழ்ந்துரைக்கில் ஈசனே எந்தை எந்தை பெருமானே என்று என்று பலகாற் புகழ்ந்துரைத்தும், பூசில் எம்பெருமானே போற்றி என்று கூறித் திருவெண்ணீற்றையே நிறையப் பூசியும், பின்னிடாது வளரும் மெய்யன்பினாற் பிறப்பு இறப்பினைக் கடக்கும் தகுதியுடையாரை ஆட்கொண்டருளினவனே, நீ அவாவெள்ளக் கள்வனாகிய என்னை நீ ஆட்கொண்ட தன்மை என்னையோ, என்ன அதிசயம் என்பதாம்.

தாம் என்றது பிறப்பிறப்பைக் கடப்பவராகிய மெய்யடியாரைக் குறித்தது. அவர் பேசின் ஈசனே என்பது முதலிய இறைவன் திருப்பெயர்களைப் பலகாலும் பேசுவரேயன்றி வேறொன்றையும் பேசாராகலின் "பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை பெருமானே யென்றென்றே பேசிப் பேசி" என்றார். இறைவன் தமக்குத் தந்தையாதலே யன்றித் தம் தந்தைக்கும் தலைவனாயினான் என்பார். "எந்தாய் எந்தைபெருமானே" என்றார். "எண்ணார் தங்கள்

*உன் மனச்சாட்சியின் மறுபெயர்தான் கடவுள்.*

எயிலெய்த எந்தாய் எந்தை பெருமானே" எனத் தேவாரத்தும் (சுந் 52:6) "ஈசனே யெந்தா யிறைபோற்றி" எனப் பதினொராந் திருமுறையினும் (திருக்கைலாயஞான) வருவன காண்க. எந்தைக்கும் என்னும் நான்கனுருபும் எச்சவும்மையும் செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றன. என்றே என்புழி ஏகாரம் தேற்றப் பொருட்டு.

அவர் தமது உடலிற் பூசப்புகுவாராயின் "எங்கள் பெருமானே, காத்தருள்க என்று கூறி உடல் முழுவதிலும் நிறையத் திருநீற்றையே யன்றி வேறு எதனையும் பூசார் என்பது தோன்றப் "பூசிற்றான் றிருநீறே நிறையப் பூசிப் போற்றியெம் பெருமானே" என்றார். ஏகாரம்- தேற்றம். போற்றியெம்பெருமானே என்று நிறையப் பூசி என மாற்றிக் கூட்டிப் பொருளுரைக்க. போற்றி- வணக்கம். பின்றல்- பின்னிடுதல் "பெரிது நொந்தாற்றல் போகிப் பின்றினன் பெயர்ந்து போனான்" என்னும் கந்தபுராணத்தும் (சிங்கமுகாசுர 175) இப் பொருட்டாதல் காண்க. பின்றா நேசம் எத்துணை இடையூறு வரினும் பின்னிடுதலில்லாது வளரும் மெய்யன்பு.

ஈசன் புகழே பேசுதலும் திருநீறே நிறையப் பூசுதலும் பின்றா நேசத்தினையுடைய ராதலும் உள்ளவர்களே பிறப்பிறப்பினைக் கடக்குந் தகுதியுடையவராதலின் "பிறப்பிறப்பைக் கடந்தார்" என்றார். துணிவு பற்றிக் கடப்பாரைக் கடந்தார் என இறந்த காலத்தாற் கூறினார்.

அவா- விருப்பம். "ஆவியன்னார் மிக்கவாவினராய்க் கெழுமறகழிவுற்று" (திருக்கோவை 37) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அவாவெள்ளம்- அவாப்பெருக்கு. அவா பிறவிக்கேதுவாதல்- அவாவென்பவெல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள் 361) என்பதனாலுமறிக. பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை ஆண்டருளும் இயல்புடையவனாகிய நீ அவாவெள்ளக் கள்வனாகிய என்னை ஆண்டருளிய தன்மை வியக்கத்தக்கதென்பார் "பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை யாண்டானே அவாவெள்ளக் கள்வனேனை நீ ஆட்கொண்ட வண்ணந்தான் என்னை" என்றார். அவா வெள்ளக் கள்வனேனை என்றது அடிகள் தம்மைத் தாழ்த்திக் கூறும் முறைமைபற்றியாகும். அன்றி உண்மையியல்பு பற்றிக் கூறியதெனின் இறைவனால் ஆட்கொள்ளப்படுமாறில்லை யென்க.

"நான் உனக்கோர் அன்பன்" (சதகம் 23) என்ற அளவில் என்னை ஆட்கொண்டருளி னாய்; நான் கூறியது சொல்லளவன்றி உண்மையன்று; நானோ அவாவெள்ளக்கள்வன். அத்தகைய என்னை நீ ஆட்கொண்ட வண்ணம் என்னை என அடிகள் வியந்துரைத்துக் கூறியவாறு. அந்தோ- அதிசயக்குறிப்பு பூசிற்றான்; வண்ணந்தான் என்பவற்றில் தான் அசை.

இதன்கண் "அவாவெள்ளக் கள்வனேனை ஆட்கொண்ட வண்ணந்தான் என்னை" என்பதனால் ஆட்கொண்டருளிய இறையியல்பு சுட்டியுணரப் படாமையின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

29. வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகன்ஏகன் அணுவணுவில் இறந்தா யென்றங்
கெண்ணந்தான் தடுமாறி யிமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தாய் உன்றன்

வண்ணந்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறாவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே.

**ப-ரை:**

எம்பெருமான்- எங்கள் தலைவனே, வண்ணம்தான் சேயது அன்று- நினது நிறந்தான் செந்நிறமுடையதன்று; வெளிதுஅன்று- வெண்ணிறமுடையது அன்று; அநேகன்- ஏகனாகிய நீயே பலவகைத் திருமேனிகளையுடையையாவாய்; ஏகன்- அன்றி ஒருவனாகிய முழுமுதல்வனுமாவாய்; அணு- நீயே அணுவாயுமுள்ளாய்; அணுவில் இறந்தாய்- அவ்வணு உருவத்தையுங் கடந்த நுண்மையுடையையுமாவாய் என்று இங்ஙனம் பலவாறு கூறி, அங்கு எண்ணந்தான் தடுமாறி- நின்னையறியும் அவ்விடத்தில் நினைவு மயங்கி, இமையோர் கூட்டம் எய்தும் ஆறு அறியாத எந்தாய்- தேவர்களது கூட்டம் நின்னை அறியுமாறும் அடையுமாறும்- அறியமுடியாத எங்கள் தந்தையே, வழி அற்றேனை- உய்யும் நெறியை அறியாத அடியேனை, உன் வண்ணம் அது காட்டி- உனது உண்மையான அந்நிறத்தைக் காட்டியும், வடிவு அது காட்டி- உண்மையான அத்திருவுருவத்தைக் காட்டியும், மலர் கழல்கள் அவை காட்டி- தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காட்டியும் அருள்செய்து, திண்ணம்தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்- உறுதியாக இனிப் பிறவாமற் பாதுகாத்து ஆட்கொண்டருளினை; என்சொல்லி சிந்திக்கேன்- அத்தகைய நின்னை எங்ஙனம் புகழ்ந்துரைப்பேன்.

எம்பெருமானே உனது நிறந்தான் செந்நிறமுடையதன்று; வெண்ணிறமுடையதன்று; ஏகனாகிய நீயே பலவகைத் திருமேனிகளையும் உடையையாவாய், ஒருவனாகிய முழு முதல்வனுமாவாய்; நீயே அணுவாயுமுள்ளாய்; அவ்வணுவுருவையுங் கடந்த நுண்மையுடை யையுமாவாய் என்று இங்ஙனம் பலவாறு கூறி, நின்னை அறியும் அவ்விடத்தில் எண்ணந் தடுமாறித் தேவர்களது கூட்டம் நின்னை அறியுமாறும் அடையுமாறும் அறியமுடியாத எங்கள் தந்தையே, உய்யுநெறியை அறியாத அடியேனை உன்தன் உண்மையான நிறத்தைக் காட்டியும் திருவுருவைக் காட்டியும திருவடிகளைக் காட்டியும் அருள்செய்து உறுதியாக இனிப்பிறவாமல் காத்து ஆட்கொண்டருளினை; அத்தகைய நின்னை எங்ஙனம் நினைந்து புகழ்ந்துரைப்பேன் என்றவாறு.

வண்ணந்தான் சேயது என்றது செம்மேனி யெம்மானின் திருமேனி எங்கும் திருவெண்ணீற்றைப் பரவப் பூசியிருப்பதனாலாகும். "ஒண்மையனே திருநீற்றை உத்தூளித் தொளிமிளிரும் வெண்மையனே" (நீத் 22) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. "தழலார் மேனித் தவள நீற்றர்" எனத் தேவாரத்து (ஞான 71:7) வருதலுங் காண்க. "வெளிதன்று" என்றது வெண்ணிறம் திருவெண்ணீற்றுப் பூச்சாகிய செயற்கையான் அமையுந் தன்மையால் இயற்கை நிறம் அதுவன்று என்பது. இவ்விரண்டினையும் ஒருங்கு சேர்த்து உணருங்கால் இறைவன் நீறுபூத்த செந்தழல் வண்ணன் என்பது போதரும்.

*சான்றோருக்கு அளிக்கும் கௌரவம் கடவுளுக்குச் செய்யும் மரியாதையாகும்.*

"துடிகொள்நே ரிடையாள் கரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே" (அருட் 5)

என அடிகள் அருளியமையுங் காண்க.

அநேகன் என்றது ஏகனாகிய இறைவன் பல்லுயிர்களுக்கும் அருள் செய்யவேண்டிச் சிவம் சத்தியாயும், பஞ்ச சாதாக்கிய வடிவமாயும், இருபத்தைந்து மாகேசுவர வடிவங்களாகியும் ஐவகைக் காரணேசுவர வடிவங்களாகியும் இன்னும் அளப்பில்லாத திருவுருவங்களாகியும் அமைந்தமை பற்றியாகும். ஏகன் என்றது இவ்வாறு பலவகைத் திருவுருவங்களைக் கொண்ட இறைவன் ஒருவனே என்பது பற்றியாகும். "ஏக னனேக னிறைவனடி வாழ்க" (சிவபுரா) என அடிகள் அருளியமையுங் காண்க.

நூலுணர்வால் அறியமுடியாத நுண்ணியனாகலின் "அணு" என்றும், அவ்வணுவும் சுட்டியறியப்படுமாதலின் அவ்வணுவுருவத்தையும் கடந்த நுண்மையுடையனாதலின் "அணுவில் இறந்தாய்" என்றும் கூறினார். ஈண்டு "நூலுணர்வுணரா நுண்ணியோன் காண்க" (49) என வும், அணுத்தருந் தன்மை யிலை யோன் காண்க" (45) எனவும் திருவண்டப் பகுதியில் வருவன நோக்கத்தக்கன.

அங்கு என்றது தேவர் பலரும்கூடி நின்னை அறியும் அவ்விடத்தில் என்றவாறு. இமையோர் கூட்டம் எண்ணந்தான் தடுமாறி என்றது தேவர்கள் பலருங் கூடித் தாந்தாமறிந்த வாறு கூறுதலின் அது எல்லோருக்கும் ஒப்பமுடியாமையின் விவாதம் உண்டாக அதனால் நினைவு தடுமாறி என்றவாறு. எய்துமாறறியாத என்றது நினைவு தடுமாறியமையால் இமை யோர் கூட்டம் இறைவனது உண்மைத் தன்மையை அறிய முடியாமலும் அடையும் வழியை அறியமுடியாமலும் இருந்தமை பற்றியாகும்.

உன்றன் வண்ணந்தான் அதுகாட்டி என்பதில் அது என்னும் சுட்டு இறைவனது உண்மை நிறத்தினைச் சுட்டியதாகும். அச்சுட்டினை வடிவு அதுகாட்டி எனவும் கூட்டுக; மலர்க்கழல்கள் தாமரை மலர்போன்ற திருவடிகள். "செழுங்கமலத் திரளனநின் சேவடி" (அடைக்கலப் 1) எனவும், "தாளதாமரைகள்" (அச்சப் 6) எனவும் வருவன காண்க. திரு வடிகள் இரண்டாகலின் "கழல்கள் அவை" எனப் பன்மைச் சுட்டுக் கொடுத்தார். கழல் என்றது இறைவன் திருவருட்சக்தியை.

வழியற்றேனைத் திண்ணந்தான் பிறவாமற் காத்தாட்கொண்டாய் என்றது உய்யும்வழி யறியாதிருந்த என்னை உறுதியாகப் பிறவாதிருக்கும் வண்ணம் பாதுகாத்து ஆட்கொண்டமை பற்றியாகும். தான் நான்கும் ஏ இரண்டும் தன்னும் அசை. என் சொல்லிச் சிந்திக்கேன் என்ற தனை என் சிந்தித்துச் சொல்லுகேன் என விகுதி பிரித்துக் கூட்டி நின்னை எங்ஙனம் நினைந்து புகழ்ந்துரைப்பேன் எனப் பொருளுரைக்கப்பட்டது. என்னை? நினைவின் வழிச் சொல்லும் செயலும் நிகழ்தலின்.

இதன்கண் "என்சொல்லிச் சிந்திக்கேன்" என்பதனால் இறைவன் மனமொழி மெய்களுக்கு எட்டாமை கூறுதலின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க.

(தொடரும்...

*தற்பெருமை கொள்ளும் மனிதனுக்கு வேறு விரோதிகள் தேவையில்லை.*

# வினையே எமது பிறவிக்குக் காரணம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

பரமபிதாவாகிய இறைவன் உயிர் களிடம் பேரன்பு பூண்டவர். ஆன்மாக்கள் யாவரும் வினையை ஒழித்து தனது பாதத்தை அடைய வேண்டுமென்று பூமிக்கு அனுப்புகின்றார். ஆன்மாக்கள் அனுபவிக்க வேண்டிய பஞ்சமா பூதங்களையும் படைத்து உள்ளார். ஓரறிவு தொடக்கம் ஆறறிவுள்ள உயிரினங்களுக்கு சுகமாக வாழ வழிவகை களையும் காட்டியுள்ளார். இதை நன்கு உணர்ந்த நாயன்மார்களும் அடியவர்களும் இறைபணி செய்து இறைவனடி சேர்கின்றனர். சிற்றின்ப வாழ்வில் திளைத்த ஆன்மாக்கள் நல்வினை செய்யாது, இறைபணி செய்யாது பிறவிக் கடலில் வீழ்ந்து அல்லல் உறுகின் றனர். வினை ஒழியவும் பிறவிக் கடலைக் கடக்கவும் சிறந்த வழி ஆலயவழிபாடாகும்.

பூமியில் பிறந்த ஆன்மாக்கள் வினையை அனுபவிக்க வேண்டும். பிராரத் தம், ஆகாமியம், சஞ்சிதம் என்னும் மூவ் வினைகள் உள்ளன. முன்செய்த வினை பிராரத்த வினையாகும். பிராரத்த வினையின் பயனாகவே இராமர் நாடு இழந்து நகர் இழந்து மரவுரி தரித்து பதினான்கு வருடங்கள் காட்டில் தவஞ் செய்தார். அது மட்டுமன்றி சீதை இராவணனால் பன்ன சாலையுடன் தூக்கிச் செல்லப்பட்டு, இலங் கையில் சிறை வைக்கப்பட்டாள். இதனால் யுத்தம் ஏற்பட்டு இராமன் அம்பினால் இரா வணன் கொல்லப்பட்டு, சீதை மீட்கப்பட்டதும் பிராரத்த வினையின் செயலன்றோ? பஞ்ச பாண்டவரும் பிராரத்த வினையினால் நகர் இழந்து, துரியோதனன் ஆகியோருடன் போர் செய்து, அவர்களைக் கொன்று அழித்து திரும்பவும் நாட்டை ஆண்டதும் பிராரத்த வினை என்பர். முன்வினையின் பயனாக பட்டினத்தடிகள் கள்வனென குற்றஞ் சாட்டப் பட்டு கழுமரத்தில் ஏற்றும்படி அரசன் பணித் தான். அப்பொழுது பட்டினத்தடிகள் "என் செயலாவதொன்றில்லை இனித் தெய்வமே உன்செயலே யென்று உணரப் பெற்றேன்..... பிறப்பதற்கு முன் செய்த தீவினையே இங் ஙனம் மூண்டதுவே" எனப் பாடக் கழுமரம் தீப்பற்றி எரிந்தது என்பது வரலாறு. பிராரத்த வினையிலிருந்து யாரும் தப்பமுடியாது என்ற உண்மையைப் பாடல்மூலம் விளக்கியுள் ளார். பிராரத்த வினையினால் நளன் நாட்டை யும் மனைவி பிள்ளைகளையும் கைவிட்டு கானகம் சென்றான் என்பதைச் சரித்திரம் இயம்புகின்றது. முன்வினைப் பயனாக திருநாவுக்கரசரும் பல துன்பங்களை அனு பவித்து இறைவனடி சேர்ந்தார் என்பதைப் புராணங்கள் கூறுகின்றன.

ஆறறிவு இல்லாத சிலந்தியும், யானை யும் முத்தியடைந்த வரலாற்றை அறிந்தும் ஆறறிவுள்ள மனிதன் உணராது, சிற்றின்ப வாழ்வில் திளைத்து அல்லற்படுகிறான். மாந்தருள்ளும் தெய்வமாகப் போற்றப்பட்ட கலாநிதி புற்றுநோய் வைத்தியர் அவர்கள் தன்னலம் கருதாது புற்றுநோயாளர்களை அன்பாக அரவணைத்து, இன்பமாகப் பேசிச் சிகிச்சை அளித்த யாழ் போதனாசாலையில் இன்றும் அவரை நினைவு கூருகிறார்கள். ஆனால் அவர் அதே நோயினால் இறை வனடி சேர்ந்ததை எண்ணிக் கலங்காத நெஞ் சங்கள் இல்லையென்றே கூறலாம். அவர் பெயரையோ, அவர் ஊரையோ கூற மனம்

*எவரால் மனித இனத்திற்கு நன்மை ஏற்படுகிறதோ அவரே மனிதரில் சிறந்தவர்.*

மறுக்கின்றது. நெஞ்சம் வெடிக்கும்போல் இருக்கின்றது. பிராரத்த வினையிலிருந்து யாரும் தப்பமுடியாதென்ற உண்மை புலப் படுகின்றது. நாம் அனுபவிக்கும் வினை பிரா ரத்தமென்றும், இப்போது செய்யும் வினை ஆகாமியம் என்றும் அழைப்பர். எஞ்சி இருக் கும் வினையை சஞ்சிதம் என அழைப்பர்.

பிறவி தொடர்ந்து செல்வது. நாம் செய்யும் வினைக்கேற்ற பிறவி கிடைக்கின் றது. மாணிக்கவாசக சுவாமிகள் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி...... எல்லாப் பிறப் பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என பிறவிகளின் தன்மைகளையும் எடுத்துக்கூறி, பிறவி எடுத்தே தாம் இழைத்து விட்டதாகக் கூறுகின்றார். பிறவியாகிய கடலை யார் நீந்துவார் யார் நீந்தமாட்டார் என்பதை "பிறவிக்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடி சேரா தார்" என வள்ளுவர் குறள்மூலம் விளக்குகின்றார். இறைவனடி சேர்ந்தவர் நீந் துவர் என்ற உண்மையை வெளிப்படுத்து கின்றார். எமது வினையை ஒழித்து முத்திப் பேறைத் தர வல்லவன் சிவபெருமான். அவனை மனம் வாக்குக் காயங்களால் கசிந்து கண்ணீரமல்க வேண்டினால், வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் கடவுள் முத்திப்பேற்றைக் கொடுப்பான் என்பது திண்ணம். எமக்கு அருள் செய்ய முருகன் உதித்தானென்று பின்வரும் பாடல் விளக்குகின்றது. அருவமும் உருவமுமாகி அநாதியாய்..... கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் வந்தாங்குதித் தனன் உலகமுய்ய" என இன்னும் நாம் தவறாது கலியுகவரதன் செல்வச்சந்நிதியான் ஆலயத்தைத் தினமும் மனமுருகி வழிபட்டு வந்தால் நாளும், வினைகளும் ஒன்றும் செய்யாதென்பதை,

"நாளென் செய்யும் வினைதான் என்செய்யும்
எனை நாடி வந்த
கோளென் செய்யும் கொடுங் கூற்றென் செய்யும்
குமரேசன் தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே தோன்றிடுமே"

என்ற பாடல்மூலம் கச்சியப்பர் விளக்குகின்றார்.

எமது வினையை ஒழித்து, பிறவிக்கடலைக் கடக்க செல்வச்சந்நிதியான் வேலும் மயிலுடனும் எழுந்தருளி அருள்புரியக் காத்திருக்கிறான். அவனைக் கண்டு தொழ நாலாயிரம் கண்கள் பிரமா தனக்குப் படைக்கவில்லையென பின்வரும் பாடல்மூலம் விளக்குகின்றார். "மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை..... நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே" எனக் குமுறுகின்றார். செல்வச்சந்நிதி முருகனை அடியார்கள் "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என வேண்டுங்கள். சந்நிதி வேலவன் தவறாது நல்லருள் தருவான். அடியார்கள் வினை ஒழித்து பிறவிப் பிணியை நீக்கியருளுவான். காரைக்கால் அம்மையாரும் இறவாத இன்ப அன்பு வேண்டி..... அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்கவென்றார்" என வேண்டியிருப்பது அடியார்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அடியார்கள் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று வழிபட்டு வினை நீங்கி வீடுபேற்றை அடைவீராக.

[தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 51. அறியும் நெறிக்கு உரியவர்

நீடும் இருவினைகள் நேராக நேராதல்
கூடும் இறைசத்தி கொளல்.

**பொருள்:**

முன்னே செய்து கொண்ட இருவினைகளின் பயன்களாய் வருகின்ற இன்ப துன்பங்கள் ஆன்ம அறிவில் சமமாய் உணரப்படும் நிலை வருங்காலத்தில் அந்த ஆன்மா இறைவனது திருவருளைப் பெறுதல் கூடும்.

**சொற்பொருள்:**

நீடும்இரு வினைகள்- மேன்மேல் தோன்றி முடிவின்றிப் பெருகி வருகின்ற இரு வினைகளது பயன்களாகிய இன்ப துன்பங்களை, நேராக- (அவற்றை நுகர்வோன்) சமமாக உணர்ந்து, நேராதல்- விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலையாய் நிற்பானாயின், இறைசக்தி- இறைவனது திருவருளை, கொளல் கூடும்- அவன் பெறுதல் கூடும்.

**விளக்கம்:**

**நீடும் இரு வினைகள்:**

வினைகள் மேன் மேல் தோன்றி முடிவின்றிப் பெருகி வரும். அவை தோன்றிப் பெருகும் முறையைச் சிறிது விளக்குவோம்.

பழ வினையின் பயனாக ஒருவருக்கு ஒரு நன்மை வரவுள்ளது என வைத்துக்கொள் வோம். அஃதாவது அவருக்கு எதிர்பாராத வகையில் ஒரு பதவி உயர்வு கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை அறிந்த அவர் வாளா இருப்பாரா? அது வரும் வரையில் பொறுமை காத்து இருக்க முடியுமா? அப்படியிருந்தால், தனக்கு வேண்டாதவர் யாரேனும் இடையில் புகுந்து தனக்குக் கிடைக்காதபடி செய்துவிட்டால் என்ன செய்வது? ஆதலால் விரைவுபடுத்தி அதனைப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார். அதன் பொருட்டு இரவு பகலாக அலைகிறார். மேலிடத்தில் உள்ளவர்களை "அணுகவேண்டிய முறையில்" அணுகுகிறார். ஆகாத வழிகளைக் கையாளவும் அவர் அஞ்சவில்லை. இவ்வாறு ஒரு நன்மையை விரைவில் பெறுவதற்கு அவர் தமது மனம் மொழி மெய்களால் செய்யும் முயற்சிகள்தாம் எத்தனை!

*உண்மையை மறைப்பது பொய் சொல்வதற்கு ஒப்பாகும்.*

இதுபோலப் பழவினைப் பயனால் ஒரு பெரிய துன்பம் தனக்கு வரப்போகிறது என்பதைச் சில அறிகுறிகளால் உணர்கிறார். அவர் ஒரு பெரிய அதிகாரி. கோடிக் கணக்கில் பணம் புரளும் துறையில் பணிபுரிகின்றவர். அவர் மேலிடத்தில் உள்ளவர்களின் சொல்லைக் கேட்டுச் சில முறைகேடுகளைச் செய்ய நேர்கிறது. அத்தவறுகள் இப்பொழுது வெளியாகி விடுமோ என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஏதாவது செய்தே ஆக வேண்டும். இல்லையென்றால் சிறைக்குச் செல்ல வேண்டிய அவமானம் தனக்கு ஏற்படும் என்று அறிகிறார். வருவதை எப்படித் தடுத்து நிறுத்துவது? பணத்தினால் மூடி மறைக்க முடியுமா? என்று பார்க்கிறார்; குற்றத்தை வேறு யார்மீதாவது திருப்ப முடியுமா என்று முயற்சி பண்ணுகிறார். செல்வாக்கு உள்ளவர்களின் தயவை நாடிப் பின் செல்கிறார். இப்படித் தனக்கு வரவிருக்கும் துன்பத்தை விரையப் போக்குவதற்கு அவர் தமது மனம் மொழி மெய்களால் செய்யும் முயற்சிகள்தாம் எத்தனை?

இந்நிகழ்ச்சிகள் போல நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பல நிகழ்கின்றன. நல்வினைப் பயனாகிய இன்பம் வரும்போது அதை அடையத்தக்கதாக உணர்ந்து விரும்புகின்றோம்; தீவினைப் பயனாகிய துன்பம் வரும்போது அதை விலக்கத்தக்கதாக உணர்ந்து அதன்மேல் வெறுப்புக் கொள்கிறோம். நல்வினையும் தீவினையும் ஆகிய இரு வினைகளையும் செய்து கொண்டவர்கள் நாம்தானே. அங்ஙனமாக, அவற்றுள் ஒன்றன் பயனை மட்டும் விரும்புதலும், மற்றொன்றின் பயனை வேண்டாது வெறுத்தலும் எப்படி முறையாகும்?

நல்வினையானது இன்பம் தருங்காலை மேற்கூறியவாறு விருப்பத்தால் அவ்வின்பத்தை விரையப் பெற முயல்கிறோம்; பெற்ற பின்னரும் அவ்வின்பத்தை நீங்காமற் காக்க முயல்கிறோம். தீவினையானது துன்பந்தருங்காலை, வெறுப்பினால் அத்துன்பத்தை வரவொட்டாமல் தடுக்க முயல்கிறோம்; வந்துவிட்டால் அத்துன்பத்தை விரையப் போக்க முயல்கிறோம். இவ்வகையில் நாம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் செய்யும் முயற்சிகளே புது வினைகளாய்த் தோன்றி நிலைபெறுகின்றன. அவை அடுத்த பிறவிக்கு வித்தாய் அமைகின்றன. இவ்வாறு வினைகள் முடிவின்றிப் பெருகி வருதல் பற்றியே "நீடும் இருவினைகள்" என்றார் ஆசிரியர்.

**மலபரிபாகம்:**

ஞானவேட்கை உடையோர் ஒரு சிலராகவும், உலக நாட்டம் உடையோரே மிகப் பலராகவும் உள்ளனர். பல இலட்சம் பேர் வாழும் பெரு நகரில் மாலை நேரத்தில் திரையரங்குகளில் கூட்டம் நிரம்பி வழிதலையும், சாத்திரச் சொற்பொழிவு நடைபெறும் இடங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே விரும்பி அமர்ந்து கேட்டலையும் காணும்போது இவ்வுண்மை தெற்றெனப் புலனாகும்.

ஞானத்தில் வேட்கை செல்லாதபடி தடுப்பது ஆணவ மலமேயாகும். அது "யான் செய்தேன்" பிறர் செய்தார் என்னும் தற்போத உணர்வை உண்டாக்கி விருப்பு வெறுப்புக்களைத் தோற்றுவிக்கிறது. அவ் விருப்பு வெறுப்புக்களோடு செய்யும் முயற்சிகளே வினை அல்லது கன்மம் எனப்படுகின்றன. இதனால், ஆணவ மலத்தின் வழியாக வருவது கன்மம் என்பது புலனாகும்.

*பலவீனர்கள் பிறரை மன்னிக்கமாட்டார்கள். மன்னிப்பது வலிமையுடையோரின் குணம்.*

ஆணவ மலம் விருப்பு வெறுப்புகளைத் தோற்றுவித்து உயிருக்கு நுகர்வோனாம் தன்மையைக் கொடுக்க, கன்ம மலம் உயிருக்கு இன்ப துன்பமாகிய போகத்தைக் கொடுத்து நுகர்விக்க, உயிர் இன்ப துன்ப உணர்வுகளில் அழுந்தி நிற்கிறது. இவ்வாறு உயிர் இன்ப துன்பமாகிய உலக போகத்தில் மயங்கி நிற்கையில் அது ஞானத்தை விழைவது எங்கே! திருவருளை நோக்குவது எங்கே? இதனால் ஆணவமும் கன்மமும் உயிரறிவை வன்மையாகப் பிணித்திருக்கின்ற வரையில் உயிருக்கு ஞான நாட்டம் வராது என்பது தெளிவாகும்.

உயிர் பலப்பல பிறவிகளில் சென்று சென்று உலக வாழ்வில் ஈடுபட ஈடுபட, அத்தனை பிறவிகளிலும் அதனறிவை மறைத்து வந்த ஆணவ மலம் தனது செயற்பாட்டினால் சிறிது சிறிதாகத் தன் சத்தி மெலிந்து வரும். அதனால் நாளடைவில் உயிரை மறைக்க மாட்டாமல் அதன் பிணிப்பு நெகிழ்ந்து வரும். இவ்வாறு ஆணவ மலத்தின் ஆற்றல் தேய்ந்து நீங்கும் நிலையை அடைவதையே மலபரிபாகம் என நூல்கள் குறிப்பிடும்.

## இருவினையொப்பு:

ஆணவ மலம் தேய்ந்து போகுமானால், உயிருக்கு உலக நாட்டம் குறையும் என்பது சொல்லாமலே விளங்கும். உலக நாட்டம் குறையுமானால், இன்ப நுகர்ச்சியில் முன்புபோல விரைவு இருக்காது. துன்பம் வருமானால் அவ்வளவாகக் கவலை ஏற்படாது. இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பின்றி இரண்டையும் சமமாகக் கருதும் பக்குவநிலை உயிருக்கு வரும். இன்பத்தை அடையத்தக்கதாகவும், துன்பத்தை விலக்கத் தக்கதாகவும் வேறுபட உணர்ந்த பழைய மனநிலை போய் இரண்டையும் ஒன்றாக நோக்கும் மனநிலை உண்டாகும். இவ்வாறு இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலையாய் நிற்கும் தன்மையே "இருவினையொப்பு" என்று சொல்லப்படும்.

"எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும் எய்துக; இனிப் பிறப்பில் நான் எய்தாமை எய்துகினும் எய்துக; இன்பம் எய்தினும் எய்துக; எழுவகைத் துன்பம் வந்திடினும் வருக; வறுமை வருகினும் வருக; மதி வரினும் வருக; அவமதி வருகினும் வருக; உலகில் மற்று எதுவரினும் வருக; எது போகினும் போக; இறைவா! உன் இணையடிகள் மறவாத மனம் ஒன்று மாத்திரம் எனக்கு அடைதல் வேண்டும்" என்று ஒருவர் வேண்டுவாரானால் அவர் இருவினையொப்பு வாய்த்தவர் என்று சொல்லி விடலாம்.

முன் சொன்ன மலபரிபாகத்தின் அறிகுறியே இந்த இருவினையொப்பாகும். அகத்தில் உள்ள ஆணவ மலம் தேய்ந்த நிலையைப் புறத்தில் காணமுடியாது. ஆனால், தன்னைப் பாராட்டும்போது அதற்காக மகிழாமல், பழிக்கும்போது அதற்காக வருந்தாமல் ஒருவர் இருப்பதை யாவரும் காணமுடியும். மலபரிபாகத்தின் வெளிப்பாடுதான் இந்த இருவினை யொப்பு. எனவே, இருவினையொப்பு ஒருவருக்கு வாய்த்துள்ள அளவை வைத்து அவரது மலபரிபாக நிலையைத் தெரிந்து கொள்ளலாம்.

## சத்திநிபாதம்:

மலபரிபாகத்தோடு உடன் நிகழ்கின்ற மற்றொரு நிகழ்வும் உள்ளது. அதுவே சத்திநிபாதம் என்பது.

*வாழ்க்கையில் நீங்கள் அதிகம் பெறவிரும்பினால் முதலில் நீங்கள் அதிகமாகக் கொடுங்கள்.*

ஆணவ மல சத்தி தேய்ந்து நீங்கும் நிலையை அடைந்தால் அதற்கேற்ப, உயிரோடு உடனாக இருந்து அம்மலத்தைச் செயற்படுத்தி வந்த இறைவனது திரோதான சத்தியும் தன் தன்மை மாறும். முன்பு மறைத்தலைச் செய்து வந்த அதே சத்தி இப்பொழுது அருளலைச் செய்ய முற்படும். அதற்கேற்பத் திரோதான சத்தி என்ற பெயர் நீங்கி, அருட்சத்தி என்ற பெயர் பெறும். உயிரில் மறைந்து நின்ற முன்னைய நிலை மாறி உயிரில் விளங்கித் தோன்றும். இந் நிகழ்ச்சியே சத்திநிபாதம் எனப்படுகிறது.

நிபாதம் என்பதில் உள்ள பாதம் என்னும் சொல்லுக்கு வீழ்ச்சி என்பது பொருள். நி என்பது மிகுதியை உணர்த்துகிற ஒரு சொல். எனவே சத்தி நிபாதம் என்றால் இறைவனது சத்தி மிகுதியாக அல்லது விரைவாக வீழ்தல் என்பது பொருளாகும்.

அருட்சத்தி ஆன்மாவின் அறிவில் பதிதலையே சத்தி வீழ்தல் என்று குறிப்பிட்டார்கள். இறைவனது சத்தி வேறிடத்திலிருந்து வீழ்தல் இல்லை. அஃது எக்காலத்திலும் ஆன்மாவோடு உடனாகியே உள்ளது. அவ்வாறிருக்க, சத்தி வீழ்தல் என்று பெயர் வைத்தது ஏன் என்று கேட்கலாம்.

மக்கள் பலர் கூடியுள்ள இடத்தில் எதிர்பாராமல் துடுமென ஒரு கல் வந்து விழுந்தால், அவ்வீழ்ச்சி அம் மக்களிடத்திலே ஓர் அதிர்ச்சியை உண்டாக்கும். அவர்கள் அக்கணமே அவ்விடத்தைவிட்டு அஞ்சி அகன்று விடுவர். அதுபோல இறைவனது சத்தி ஆன்மாவில் பதிந்தால் உலகியலில் நின்ற அவ் ஆன்மாவிடத்தில் ஓர் அதிர்ச்சி உண்டாகும். எதிர்பாரா நிலையில் ஒரு மாற்றம் உண்டாகும். அவ்வான்மா அக்கணமே உலகியலினின்றும் நீங்கும். இக் கருத்து பெயரிலேயே புலப்படும் வகையில் வீழ்ச்சி எனப் பெயரிட்டனர் முன்னோர். சத்தியினது தோற்றம், சத்தி புலப்பாடு என்றாற்போல வேறு வகையில் பெயரிட்டிருந்தால் அப்பெயர்கள் மேற்கூறிய கருத்தைப் புலப்படுத்த மாட்டா என்பது தெளிவு.

மலபரிபாகமும், சத்தி நிபாதமும் ஒரு காலத்தில் ஒருங்கே உடன் நிகழ்வனவாகும். மலபரிபாகம் ஏற்பட ஏற்பட, அதனோடு சத்தி பதிதலும் உடன் நிகழ்ந்து வரும். விடியலில் ஞாயிற்றின் ஒளி வரவர இருளும் விலகி விலகிச் செல்கிறது. ஒளி வரவு, இருள் விலகல் என்ற இரண்டில் எது முன்னே, எது பின்னே என்று சொல்ல முடியாது. முன் பின் என்பதின்றி அவை இரண்டும் ஒரே காலத்தில் ஒருங்கே நிகழ்கின்றன. அதுபோல ஆன்ம அறிவில் அகவிருளாகிய ஆணவமலம் தேயத் தேய, உள்ளொளியாகிய திருவருள் ஒளி உடன் ஓங்கிவரும். இவற்றின் அறிகுறியே இருவினையொப்பு என்பதை அறிதல் வேண்டும்.

சத்தி நிபாதம் தொடக்கத்தில் அதிக மந்தமாய் நிகழும்; பின்பு ஓரளவு மந்தமாய் நிகழ்ந்து அதன் பின்பு தீவிரமாய் கடைசியில் அதி தீவிரமாய் முடியும். இந் நால்வகைச் சத்தி நிபாதநிலைகளும் முறையே மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்று சொல்லப்பெறும். கடைசி நிலையாகிய தீவிரதரத்தை அதிதீவிரம் என்றும் குறிப்பிடுவர்.

நாலாம் சத்தி நிபாதமாகிய அதிதீவிர நிலையிலேயே ஆன்மாவுக்கு மெய்ஞ்ஞான நாட்டம் வரும். ஞானாசிரியர் உபதேசித்த பொருள் உள்ளவாறு விளங்கித் தோன்றும். நமது ஆசிரியராகிய உமாபதி சிவனார் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியையே இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

*வாழ்க்கை என்பது ஒரு துணிவுமிக்க வீரச்செயல்.*

உமாபதி சிவனார் வாழ்வில்:

தில்லை நடராசப் பெருமானுக்கு வழிபாடு செய்துவிட்டு சிவிகையில் வந்து கொண்டிருந்தார் உமாபதியார். பகல் வேளை அது. அவர் அமர்ந்திருந்த சிவிகைக்கு முன்னே கைவிளக்கை ஏந்தியவாறு ஏவலர் சென்றனர். இக்காட்சியைக் கண்டார் மறை ஞானசம்பந்தர் என்ற நல்லாசிரியர். அவர் உமாபதியாரின் பக்குவநிலையைப் பார்த்தருளினார். அவர்க்கு உபதேசம் செய்தற்குக் காலம் வந்துற்றது என்பதையும் உணர்ந்தார். அவர் கேட்குமாறு "பட்ட கட்டையில் பகற் குருடு போகிறது" என்று கூறியருளினார்.

பட்டகட்டை என்பது உமாபதியார் ஊர்ந்து வந்த பல்லக்கு. பகலிலேயே விளக்கு முதலிய பரிவாரங்களுடன் வந்தமையால் அவர் "பகற்குருடு" எனப்பட்டார். இது வெளிப்படையான பொருள். இதன் பின்னே மற்றொரு உட்பொருளும் மறைந்திருந்தது. இந்த உலகம் நிலையற்ற தன்மையுடையது; அறிவற்றது; பட்டகட்டை போன்றது. இப்படிப் பட்ட உலக நிலையில் இவருக்கு உவர்ப்புத் தோன்றவில்லையே, வெற்று ஆடம்பரத்தில் இவருக்கு விருப்பம் போகவில்லையே. வேதம் ஆகமம் முதலிய கலை நூல்களை எல்லாம் படித்திருந்தும் உண்மை ஞானம் பெறாமையினால் இவர் பகற் குருடு போன்ற வரே. இந்த உட்பொருளும் மறைஞான சம்பந்தர் சொற்களில் அமைந்திருந்தது.

அதி தீவிரம் என்னும் பரிபக்குவ நிலையில் இருந்தமையால், உமாபதி சிவம் இந்தச் சொற்களின் பொருளை உணர்ந்து கொண்டார். அவருக்கு உலகியலில் இருந்து பற்று ஒழிந்தது; ஞானம் பெற வேண்டும் என்ற வேட்கை பிறந்தது. அவருக்கு உண்மையை உணர்த்த வந்த ஞானாசிரியர் இவரே என்ற தெளிவு பெற்றார். மறைஞான சம்பந்தரின் மலரடிகளில் வீழ்ந்து அவருக்கு ஆட்பட்டார். அதி தீவிரசத்திநிபாதமே ஞானம் பெறுதற்கு ஏற்ற பக்குவநிலை என்பதை இந்நிகழ்ச்சி வாயிலாக நாம் அறியலாம்.

இனி, இச்செய்யுளின் பொருளுக் கேற்ப, நீடும் இரு வினைகள் நேராக நேரா தற்கண் இறை சத்தி கொளல் கூடும் எனச் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

நேராக- சமமாக; நேராதற்கண்- நிகழ் தற்கண், நிகழுங் காலத்தில்.

இருவினைகள் நேராக நேராதல் என்றதனால் இரு வினையொப்பினையும், இறை சத்தி கொளல் என்றதனால் சத்தி நிபாதத்தையும் குறித்துள்ளார் ஆசிரியர்.

இருவினையொப்பினால் அறியப்படு கின்ற மலபரிபாகம் வந்த பொழுதே உயிர் உலகியலை விடுத்து இறைவனது திரு வருளை நோக்கத் தலைப்படும். அந் நிலையே சத்தி நிபாதம் எனப்படும் என்பது கருத்தாயிற்று.

குருநாதர் உபதேசித்த உண்மை களைச் சிந்தித்து உணரும் முறையே அறி யும் நெறியாகும். அவரது உபதேசத்தைக் கேட்டதற்கும் சிந்தித்ததற்கும் உரியவர் யார் என்பதை இம் முதற் செய்யுளில் உணர்த்தி உள்ளார் ஆசிரியர். இருவினையொப்பும் மலபரிபாகமும் வரப்பெற்ற, சத்தி நிபாதத்து உத்தமராகிய மாணாக்கரே குரு மொழி யைக் கேட்டுச் சிந்தித்துப் பயன் பெறுதற் குரியர். ஏனையோர்க்குக் குருமொழி பயன் தருதல் இல்லை என்பது குறிப்பாய் உணர்த் தப்பட்டது.

(தொடரும்....

*உங்களுக்கு உதவக்கூடிய கரங்கள் வேறெங்குமில்லை. அது உங்கள் தோள்களின்மீதுதான் இருக்கின்றன.*

# இறைவன் எழுதிய வாசகம்

– திரு குணாகரன் அவர்கள் –

மனிதன் மனிதனுக்காக எழுதியது திருக்குறள்.
மனிதனுக்குக் கடவுள் உபதேசித்தது கீதை.
மனிதன் சொல்லச் சொல்ல கடவுள் எழுதியது திருவாசகம்.

இவற்றுள் எது சிறந்தது? மனிதன் சொல்ல இறைவன் எழுதியதே. ஏன்? அது சாதாரணமானதல்ல. அது தெய்வ வாசகம்.

திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் ஞானாசாரியர் ஒருவர் கையில் ஒரு நூல், முன்னே நால்வருக்கு உபதேசம் நடக்கிறது. பொன் பொருளோடு குதிரை வாங்கச் சென்ற வாதவூரரை ஞானாசாரியரின் அருள் நோக்கு கவரவே தானும் உபதேசம் கேட்க விரும்புகிறார். ஆசிரியரின் அருகே சென்று, "குருவே தாங்கள் யார்? கையில் உள்ள நூல் யாது? அதன் பொருளை விளக்குவீராயின் நானும் அடியார் கூட்டத்தில் ஒருவராவேன். கைகட்டி, வாய் பொத்தி சிரம் தாழ்த்தி நிற்கின்றார். சிவம் என்றால் யாது? ஞானம் என்றால் என்ன? போதம் என்றால் அதன் தெளிவு. அதை விளக்கும் நூல்தான் இது. "சிவஞானபோதம்" என்று பெயர். வாதவூரர் உடல் பொருள் ஆவி மூன்றையும் குருவிடம் ஒப்படைத்து சரணாகதி அடைந்து விட்டார். கணப் பொழுதில் ஞானாசாரியரும் கூட்டமும் மறைந்து விட்டனர்.

முன்னை நல்வினைப் பயன்தான் இறைவன் தானே வலிய வந்து என் உள்ளம் புகுந்து என்னை ஆட்கொண்டான் என்ற மெய்யுணர்வு வர இறைவனை எங்கும் காணவில்லையே! அடியாருடன் நானும் போகவில்லையே என்ற கவலையால் புலம்பிய பாடல்களான திருவாசகம் கல்லையும் உருக்கும் தன்மை கொண்டது.

இறைவனைக் காணவில்லையே! ஆயினும் சிவன் அவன் என் சிந்தையில் குடிகொண்டிருப்பதால் அவன் சிறப்புக்களைப் பாடுவேன். தொடங்குகிறார். நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க! என வாழ்த்தி வணங்கி எஞ்ஞானம் இல்லாதேன், பொல்லாவினையேன் நாயினும் கீழ்ப்பட்ட நாயேன் என தன்னிலையைத் தாழ்த்தி இறைவன் சிறப்புக்களையும் கூறி இப்பாடலை பொருள் உணர்ந்து படிப்போர் கேட்போரின் முந்தை வினைமுழுவதும் அழியும், மீட்டிங்கு வந்து பிறவாமல் சிவனடியையே அடைவர் எனச் சிவபுராணம் பாடி முடிக்கின்றார்.

திருப்பெருந்துறையில் சிவபுராணம் பாடிய திருவாதவூரர் திருவண்ணாமலை, சிதம்பரம், உத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம் ஆகிய தலங்கள் பல சென்று பல பதிகங்கள் பாடினார். திருவண்ணாமலையில் திருவெம்பாவை - திருஅம்மானை, திருப்பெருந்துறையில் திருப்பள்ளி எழுச்சி, உத்தரகோசமங்கையில் நீத்தல் விண்ணப்பமும் பாடினார். தவிர அடைக்கலப்பத்து, அச்சப்பத்து "அப்பன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டேன்" எனும் அதிசயப் பத்து, "அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன்", "உன் பழஅடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்" என ஆசைப்பத்து, "அடித்து அடித்து அக்காரம்

புகழ் என்பது தனிச்சொத்து. அதன் அருமை அதை இழந்தபிறகுதான் தெரிகிறது.

தீட்டிய அற்புதம் கண்டேன்'' என அருட் பத்தும் பாடினார். இறைவன் தன் அடியானின் ஆவலை நீக்க திருக்கழுக்குன்றில் காட்சி கொடுத்தார். ஆனந்தம் மேலிட, "கணக் கிலாத் திருக்கோலம் காட்டினாய் கழுக் குன்றிலே", "காதலால் உனை ஓத நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே'' எனத் திருக் கழுக்குன்றப் பதிகமும் பாடினார்.

மணி மணியாக வாதவூரர் பாடிய பாடல்களைக் கேட்ட இறைவன் தன்னைப் பாட வேண்டுமென விரும்புகிறார். சில சந் தர்ப்பங்களில் உலக மக்கள் தன் பெரு மையை உணரவைக்க மானிட வடிவில் இறைவன் வருவதுண்டு. மானிட வடிவில் வந்த இறைவன் மணிவாசகரை நோக்கி, "நீ உன்னைப்பற்றி, இறைவன் உன்னை ஆட்கொண்டமை, அருட்செயல்கள் பற்றியே இதுவரை பாடினாய். ஆனால் இறைவனைப் பற்றிப் பாடவில்லையே! என்னைப் பாட வேண் டாமா? "பாவை பாடிய வாயால் கோவையும் பாடு" இது இறைவனின் வேண்டுதல். இப்போ மாணிக்கவாசகர் குரு- இறைவன் சிஷ்யன். கையில் ஏடும் எழுத்தாணியும் "நான் எழுது கிறேன் நீ பாடு".

வாசகரின் மனதில் ஒரு சிந்தனை. இறைவன் தானே வந்து என்னுள்ளம் புகுந்து விட்டான். அதனால் யான் அந்தமிலா ஆனந் தம் அடைந்தேன். உலகோர பெறுவது சிற்றின்பம். யான் பெற்றது பேரின்பம். அந்த இனிமையான உணர்வை எப்படி என் வாயால் சொல்ல முடியும்?

"மகளுக்கு தாய் தன் மணாளனுடன் ஆடிய சுகத்தைச் சொல்லெனில் சொல்லுமா றெங்கனே!" வெல்லம் கற்கண்டைச் சுவைத் தவன் அதன் இனிமையை உணர்வானே தவிர எப்படியென்று சொல்ல அவனால் முடி யாது. இறைவன் விடுத்த வேண்டுகோளை ஏற்று நெஞ்சில் நிறைந்த இன்ப உணர்வைக் கோவையாகப் பாடினார். எழுதி முடிந்ததும் வாதவூரன் சொல்ல பொன்னம்பலவன் எழு தியதென கைச்சாத்தும் மைக்காப்புமிட்டு துண்ணென மறைந்து விட்டார் இறைவன்.

மாணிக்கவாசகர்தான் திருவாசகம் பாடினாரா? என்ற சந்தேகம். எதனால்? திரு வாசகம் திருக்கோத்தும்பி பாடல் (12ம்)

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்'' என வாசகர் பாடியமையால், வாச கரின் உள்ளத்தில் நிறைந்த சிவனே வாச கரைக் கொண்டு பாடுவித்து தானே அதை எழுதியிருக்கலாம் எனக்கொள்ளலாம்.

மாணிக்கவாசகரைக் குருவாகக் கொண்டு சிஷ்யனாக இருந்து திருவாசகம் எழுதிய இறைவன் முன்னொருகால் திருப் பெருந்துறையில் குருந்தமர நிழலில் ஞானா சாரியராக எழுந்தருளி திருவாதவூரர்க்கு (மணிவாசகர்) சிவம் என்றால் யார்? ஞானம் என்றால் என்ன? போதம் என்றால் யாது? என சிவஞானபோதப் பொருளை உணர்த்தி யவர். சிவம்- இறைவன், ஞானம்- சிவனைப் பற்றிய அறிவு, போதம்- அறிந்தவை பற்றிய தெளிவு. (இறைவனே முதலும் முடிவு மானவன்)

யாவும் அறிந்த இறைவன் தன் செல்வக்குமாரனாகிய முருகனையே குரு வாக ஏற்று, பிரமா அறியாத பிரணவ மந்திரப் பொருளைக் கேட்டார். முருகன் "ஓம்" எனும் மந்திரத்தை செவியில் ஓதினார். ஏன் அப்படிச் சொன்னார். அதையும் அறி வோம். மந்திரம் என்பது மறை பொருள். அ+உ+ம்= ஓம். அ- இறைவன், உ- உலகம், ம்- ஒடுக்கம். இறைவனுள் உலகம் ஒடுங்கியுள்ளது என்பதே பொருள். நாம் மூச்சு விடும்போது ஓ என்ற ஒலி காற்றோடு வந்து ம் என அடங்கிவிடுகிறது. ஓம் என்ற சொல்லுக்கு உமாபதிசிவம் இப்படி விளக்கம் தருகிறார்.

*பிறர் முதுகுக்குப்பின்னால் நாம் செய்யவேண்டிய வேலை தட்டிக்கொடுப்பது மட்டும்தான்.*

"இறை சக்தி பாசம் எழில் மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்துள்"

இறை- இறைவன்- சி, சக்தி- சிவசக்தி- வ, ய- ஆன்மா, மாயை- ந (திரோதான சக்தி) ம- மலம், சிவ ய நம- பஞ்சாட்சரம் எனும் ஐந்தெழுத்தும் ஓங்காரத்துள் அடங்கியுள்ளது.

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தின் பெருமையை உலகோர்க்குத் தெரியப் படுத்தும் காலம் வந்துவிட்டது. ஏட்டுச் சுவடிகளைப் பஞ்சாக்கரப் படியில் வைத்துவிட்டு இறைவன் மறைந்துவிட்டார். காலையில் தில்லைவாழ் அந்தணர்கள் பஞ்சாக்கரப்படியில் எவ்வாறு ஏட்டுச் சுவடிகள் வந்தன? யாவரும் சென்றபின் நடை சாத்திவிட்டுப் போயினோம். யார் வைத்திருப்பர்? "மாணிக்கவாசகரைக் கேளுங்கள்" என ஓர் அசரீரி கேட்டது. வாசகரை அழைத்துவந்து பொருள் கேட்டபோது, வாருங்கள் என யாவரையும் அழைத்துச் சென்று தில்லை அம்பலக்கூத்தன் திருவடிகளைக் காட்டி "இதுதான் பொருள்" எனக் கூறிக் கொண்டு தில்லையுட் புக ஓர் சோதி தோன்றவே அச்சோதியுட் சோதியாகி மறைந்தார்.

மாணிக்கவாசகரின் திருவாசகம் தித்திக்கும் தேன் தமிழ் வாசகம். தெய்வத்தால் எழுதப்பட்ட ஓவியம். சைவசமய நூல்களான வேதம், சிவாகமம், மூவர் தேவாரப் பதிகங்கள், மெய்கண்ட சாஸ்திரங்கள், உபநிடதம், சேக்கிழார் பாடிய பெரியபுராணம், திருமந்திரம், திருக்குறள் ஆகிய நூல்களில் கூறப்படும் நூற் கருத்துக்கள் யாவும் திருவாசகத்தில் அடங்கும். இப்பாடலையும் படிப்போம்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென்றுணர்.

திருவாசகத்தை துறைபோகக் கற்று கரை கண்டவர் இராமலிங்க வள்ளலார். முக்கனி, சர்க்கரை, கற்கண்டு, தேன், பால் கலந்த பஞ்சாமிர்தம், தித்திக்கத் தித்திக்க தெவிட்டாத இன்பம் தருவது திருவாசகம் என்பதை பின்வரும் பாடலாகப் பாடுகிறார்.

வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தேன் சுவைகலந்து (என்)
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனித்ததுவே.

இத்தகைய திருவாசகத்தை படிப்பதால் எமது முந்தைவினை முழுவதும் அழியும். அல்லற் பிறவி அறும். மீட்டிங்கு வந்து பிறவோம், இறைவன் பாதத்தை அடைவோம்.

## கடவுளின் கைகள்

பணக்காரர் ஒருவர் தன்னைத் தேடி வருபவர்களுக்கெல்லாம் இல்லை என்று சொல்லாமல் வாரி வழங்கிக்கொண்டே இருந்தார். ஆனாலும் அவரது செல்வம் குறையாமல் வளர்ந்துகொண்டே இருந்தது. அதைப் பார்த்த அவரது நண்பர் கேட்டார் "இப்படி அள்ளி அள்ளிக் கொடுத்தும் உன்னிடம் செல்வம் சேர்ந்துகொண்டே இருக்கிறதே, எப்படி? "நண்பா... நான் என் கைகளால் ஏழைகளுக்குப் பொருளைத் தரும்போது இறைவன் தன் கரங்களால் என்னிடம் பொருளை அளிக்கிறார். என் கைகளைவிட கடவுளின் கைகள் பெரியனவாக இருப்பதால் என்னிடம் பொருள் சேர்ந்துகொண்டே இருக்கிறது..!" அடக்கத்துடன் சொன்னார் செல்வந்தர்.

-பக்தி-

*பிரார்த்தனைகளைவிட மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

மகான்களாகிய பெரியவர்கள் வந்தால் (அறிவு, ஞானம், வயது முதலியவைகளில் பெரியவர்கள்) அவர்களை வரவேற்று, ஆசனம் கொடுத்து, அவர்களின் பாதங்களைக் கழுவி சுகம் விசாரித்து பின் அக்கறையுடன் உணவளித்து உபசரிக்க வேண்டும்.

மருத்துவன், ஆயுதம் செய்பவன், தாரம் இழந்தவன், திருடன், கொடியவன், மது அருந்துபவன், கருச்சிதைவு செய்தவன், கூலிக்காகப் போரிடுபவன் (அடியாள்) வேதத்தை விற்பவன் முதலான இவர்கள் அன்பிற்குரிய விருந்தினராக இருந்தாலும் பாதபூசை முதலியன செய்வதற்கு உரியவர்கள் இல்லை.

## துறவி

கோபமில்லாதவன், ஓட்டையும் பொன்னையும் சமமாக நினைப்பவன், பேதம் இல்லாதவன், நட்போ, பகையோ இல்லாதவன், இகழ்ந்தாலும், புகழ்ந்தாலும் அதனால் பாதிக்கப்படாதவன், விருப்பு வெறுப்புக்களை விட்டவன், பற்றற்று இருப்பவன் இவ்வளவும் கொண்டவன்தான் துறவி.

மூங்கிலரிசி, கிழங்கு, கீரை முதலியவைகளைச் சாப்பிட்டுக்கொண்டு வாழ்க்கை நடத்துபவன்; மனதைத் தன் வசப்படுத்தியவன், அக்னி ஹோத்தரம் முதலானவற்றை தவறாமல் செய்து வருபவன், காட்டில் வசித்தபோதும் வந்த விருந்தினர்களை அன்பு செலுத்தி உபசரிப்பவன்- இப்படிப்பட்டவனே புண்ய ஆத்மா ஆவான். மகாதபசி ஆன வானப்பிரஸ்தனும் ஆவான்.

புத்திமானுக்கு தீங்கு செய்துவிட்டு "நான் தொலைவில் இருக்கின்றேன், என்னை ஒன்றும் செய்துவிட முடியாது" என்று சமாதானம் அடையக் கூடாது. ஒருவனுக்குத் தீங்கு செய்தால் அதற்குரிய தண்டனை ஏதோ வடிவில் வந்தே தீரும்.

நம்பக்கூடாதவனிடம் நம்பிக்கை வைக்கக்கூடாது. நம்பக்கூடியவனிடமும் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. நம்பிக்கையில் பயம் வந்தால் அது மூலத்தையும் அழித்துவிடும்.

## பெண்ணின் பெருமை

பெண்கள் வணக்கத்திற்குரியவர்கள். மிகுந்த பாக்கியம் உடையவர்கள். மிகவும் தூய்மையானவர்கள். வீட்டை விளங்கச் செய்பவர்கள். வீட்டிற்கு அஷ்டலக்சுமிகளாகப் புகழப்படுபவர்களும் அவர்களே. ஆகையால் பெண்களை நன்கு காப்பாற்ற வேண்டும்.

ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணம் செய்யும்பொழுது, பொறாமை இல்லாதவனாக இருக்கவேண்டும். மனைவியரை பாதுகாப்பவனாக இருக்க வேண்டும். வருவாயை அவர்களுக்கு நியாயமான முறையில் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். அனைவருடனும் அன்பாகப் பேசவேண்டும். (அந்தக் காலத்தில் பல தார மணம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது)

*வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்.*

## ஆட்சியாளர்கள் எப்படி இருக்க வேண்டும்?

நாட்டை ஆளக்கூடிய மன்னன், தன் இரகசியமான விவரங்களைத் தன்னுடைய அந்தரங்கத் தூதர்கள் கூட அறிந்துகொள்ளாதபடி இருக்க வேண்டும். எல்லாத் திசைகளிலும் பார்வையைச் செலுத்தக்கூடியவனாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட மன்னன் பல காலம் எல்லாவிதமான செல்வங்களையும் அனுபவிப்பான்.

மலைகளின் பின்னாலோ, அரண்மனை மாடியின் உச்சியிலோ, காட்டில் செடி கொடி புதர்களின் மறைவில்லாத இடத்திலோ- மன்னன் தனது மந்திர ஆலோசனையை நடத்த வேண்டும்.

அந்தப்புரப் பாதுகாப்பைத் தந்தையிடமும் சமையல் கட்டு நிர்வாகத்தைத் தாயாரிடமும், பசுக்களின் பாதுகாப்பை தனக்குச் சமமானவர்களிடமும் ஒப்படைக்க வேண்டும். உயிர்த் தொழிலான பயிர்த் தொழிலையோ யாரிடமும் ஒப்படைக்காமல் தானே பார்த்துக் கொள்ள வேண்டும்.

நல்லவர்கள்- நற்பண்பு கொண்டவர்கள் எப்போதும் பொறுமை உள்ளவர்களாக இருப்பார்கள். எப்போதும் அமைதியாக அடங்கி இருப்பார்கள்.

அறம், பொருள், இன்பம் முதலியவைகளுக்காகக் காரியங்கள் செய்யப்போகும்போது அதை வெளியே சொல்லக்கூடாது. காரியம் முடிந்த பிறகுதான் வெளியே சொல்ல வேண்டும்.

நண்பனாக இல்லாதவன், நண்பனாக இருந்தாலும் அறிஞனாக இல்லாதவன், அறிஞனாக இருந்தாலும் அடக்கம் இல்லாதவன் - இவர்களெல்லாம் ஆலோசனையின் முடிவை அறியத்தகாதவர்கள் ஆவார்கள்.

## மன்னன் செய்யவேண்டிய சோதனை

அரசாங்கத்தின் வரவு, செலவு, சொத்துக்கள் (செல்வம்), அரசியல் இரகசியங்கள்- முதலானவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு, முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்படுகிறது. ஆகவே, மன்னன் (ஆட்சி செய்பவர்கள்) நன்றாகச் சிந்தனை செய்து, ஆராய்ந்து பார்த்து முதலமைச்சரைத் தெரிவு செய்ய வேண்டும். அறம், பொருள், இன்பம் (குறள்வழி நெறிகள்) முதலிய விடயங்களில் நல்ல தெளிவான சிந்தனைகளைக் கொண்ட, கல்வி கேள்விகளால் ஞானமுடையவர்களாக இருப்பவர்களைத் தெரிவு செய்து மந்திரக் கிழவர்களாக (மந்திர ஆலோசனைச் சபை) நியமிக்க வேண்டும். இப்படிச் செய்யும் மன்னனே (ஆட்சியாளர்களே) மன்னர்களில் சிறந்தவன் ஆவான்.

தன் ஆலோசனைகளை இரகசியமாக வைத்திருக்கும் மன்னனுக்குச் சந்தேகமில்லாமல் செயலில் வெற்றி கிடைக்கும்.

அறிவு மயங்கித் தீய காரியங்களைச் செய்தவன், அதன் விளைவால் வாழ்வையே இழக்கிறான். நல்ல காரியங்களைச் செய்பவன் மிகுந்த சுகத்தை அடைவான். அப்படிச் செய்யாவிட்டால் பின்னால் வருந்தவேண்டிய நிலை வரும்.

வேதங்களை நன்றாகப் பயிலாத அந்தணன் சிரார்த்த கர்மாவிற்குத் தகுதியில்லாதவன். அதுபோல, இணைத்தல், பிரித்தல், பெயர்ச்சி, இருத்தல், இருமுனைப்படுதல், சார்ந்து அடைதல்- என்னும் ஆறு குணங்களையும் தெரிந்து கொள்ளாதவன் மந்திர

ஆலோசனையில் கலந்து கொள்ளத் தகுதி இல்லாதவனாவான். இந்த ஆறு குணங்களிலும் வல்லமை, இராஜ்ஜியத்தின் நிலையான தன்மை, வளர்ச்சி குறைவு- முதலியவைகளை அறிவது, நல்ல ஒழுக்கம் முதலானவைகளைக் கொண்ட ஆட்சியாளருக்கே உலகம் சொந்தமாக இருக்கின்றது.

மன்னன் தன்னை மக்களுக்குச் சேவை செய்பவனாகவே எண்ண வேண்டும். பொருளை, வேலைக்காரர்களுக்கு திருப்தி ஏற்படும் வகையில் பகிர்ந்து கொடுக்க வேண்டும். ஒருவனாகவே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்பவனாக இருக்கக் கூடாது. பகையை முற்றிலும் அழித்துவிட வேண்டும். இல்லாதுபோனால் பய உணர்வே மிஞ்சும்.

தெய்வங்கள், அரசர்கள், அந்தணர்கள், முதியவர்கள், சிறுவர்கள், நோயாளிகள்- ஆகியவர்கள் விடயத்தில் கோபத்தை எப்போதும் முயற்சி செய்து அடக்கவேண்டும். கோபத்தைக் காட்டவே கூடாது.

மூடர்கள் காரணமில்லாமல், பயனுமில்லாமல் கலகம் செய்வார்கள். அறிவாளி இதை விலக்க வேண்டும். அப்படிச் செய்தால் உலகில் புகழ் அடைவான். தீங்கும் அவனைச் சேராது.

எந்த மன்னனுடைய அன்பும் கோபமும் பலன் இல்லாமல் போகுமோ, அவனை, அலியைப் பெண்கள் விரும்பாததுபோல் மக்கள் விரும்ப மாட்டார்கள்.

அறிவாளிக்குத்தான் செல்வம் கிட்டும்; முட்டாள்களுக்கு வறுமைதான் கிட்டும் என்பது உலக நியதி இல்லை. அறிவாளிகள்தான் உலகியலின் தன்மைகளை அறிய முடியுமே தவிர மற்றவர்களால் முடியாது.

மூடன்,

கல்வியில் சிறந்தவர்களையும்
ஒழுக்கத்தில் சிறந்தவர்களையும்
வயதில் மூத்தவர்களையும்
அறிவில் சிறந்தவர்களையும்
செல்வத்தில் பெரியவர்களையும்
குலத்தில் உயர்ந்தவர்களையும்
எப்போதும் அவமதிக்கிறான், மதிப்பதில்லை.

மட்டமான செய்கை உடையவன் அறிவில்லாதவன், பொறாமை உடையவன், தர்மத்தை மறந்தவன், கடுமையான வார்த்தைகளைப் பேசுபவன், கோபமுடையவன்- இப்படிப் பட்ட மனிதர்களைத் தீமைகள் விரைந்து வந்து சேருகின்றன.

சொன்ன சொல் தவறாமல் கொடுப்பது, காலம் தவறாமை, இனிமையாக நன்மை தரும் வார்த்தைகளைப் பேசுவது இம்மூன்றும் உடையவன் எல்லோரையும் தன்வசப் படுத்துகின்றான்.

யாரையும் ஏமாற்றாமல் இருப்பது சாமர்த்தியம், நன்றியறிதல், கூர்மையான அறிவு, நேர்மை இவைகளைக் கொண்டவன், செல்வம் அனைத்தையும் இழந்தாலும் உதவும் உதவியாளர்களைப் பெறுவான். தைரியம், சமமாகக் காண்பது, புலனடக்கம், தூய்மை, இரக்கம், கடுமை இல்லாத வார்த்தை, நண்பர்களுக்குத் துரோகம் செய்யாமை என்னும் இந்த ஏழும் செல்வத்தை நன்றாக வளர்ப்பவையாகும்.

*நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.*

தன்னை அண்டியவர்களுக்கு முறைப்படி செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்காதவன், தீய மனம் கொண்டவன், நன்றி மறந்தவன், வெட்கம் இல்லாதவன் இப்படிப்பட்ட மன்னனை விலக்கிவிட வேண்டும்.

தான் குற்றம் உள்ளவனாக இருந்துகொண்டு தன்னைச் சேர்ந்த குற்றமில்லாத மனிதனுக்குக் கோபம் வரும்படி செய்பவன் எவனோ, அந்த மனிதன் பாம்புள்ள வீட்டில் வசிப்பவன்போல இரவில் சுகமாகத் தூங்கமாட்டான். பெண்களிடமும், மிகவும் கர்வம் கொண்டவர்களிடமும், ஒழுக்கமில்லாதவர்களிடமும், கெட்டவர்களிடமும், எவன் செல்வம் முதலானவைகளை ஒப்படைக்கிறானோ அவன் வாழ்க்கை சந்தேகப்படத் தக்கதாகும்.

மன்னா! பெரிய வில்லாளிகளும், பலம் மிகுந்தவர்களுமான பாண்டவர்களை விடுத்து இந்தப் பெரிய இராஜ்ஜியத்தைத் துரியோதனனிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள். துரியோதனன் செல்வத்தினால் கர்வம் மிகுந்தவனாக இருக்கிறான். மூவுலக சாம்ராஜ்ஜியத்திலிருந்து மகாபலி கீழே விழுந்ததைப்போல், துரியோதனன் இராஜ்ஜியத்தை இழக்கப் போவதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள் என்று விதுரர் கூறினார்.

(தொடரும்...

## கண்ணீர் அஞ்சலி

## ஆறுமுகம் சரஸ்வதி அம்மையார்

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் அறங்காவலர் சபையின் தலைவரும், சிவபூமி அறக்கட்டளை நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளருமான திரு ஆறு. திருமுருகன், திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களின் தயாரும் விருந்தோம்பல்மூலம் பெருமை பெற்ற ஆறுமுகம் சரஸ்வதி அம்மையார் சிவபதம் அடைந்த செய்தியறிந்து சந்நிதியான் ஆச்சிரம சமூகம் பெரும் துயரமடைகிறது.



திரு ஆறு. திருமுருகன் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் நீண்டகாலத் தொடர்புள்ளவர். ஆச்சிரமத்தின் விசேட விழாக்களில் பங்குகொண்டு- சொற்பொழிவுகள் நிகழ்த்தி வரும் பெருந்தகையாளர். தாயாரது மறைவினால் துயருற்றிக்கும் திரு ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் - குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அம்மையாரின் ஆத்மா அம்பாளின் திருவடிக் கமலத்தில் சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

ஆச்சிரம சுவாமிகளும்


சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும்.

*வருத்தமோ துன்பமோ இன்றி எவராலும் எளிதில் வெற்றிபெற முடியாது.*

# முருகனும் ஔவையாரும்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

ஒருநாள் பழமுதிர்சோலை வழியாகத் தமிழ்ப்பெரும் மூதாட்டி ஔவையார் மதுரைக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் திருமுருகனின்மேல் அளவற்ற பாடல்களைப் பாடியுள்ளார். தமிழ்க் கடவுளான முருகனைத் தன் தமிழால் வாழ்த்தி வணங்கி வந்தார் ஔவையார்.



ஔவையார் வரும் வழியில் முருகவேள் மாட்டுக்காரச் சிறுவனைப் போன்ற வடிவுடன் வழியில் உள்ள ஒரு நாவல் மரத்தின்மேல் ஒரு கிளையில் அமர்ந்து இருந்தார். களைப்புடன் வந்துகொண்டிருந்த மூதாட்டி வெயிலின் கொடுமை தாங்க முடியாததால் அந்த நாவல் மரத்தின் நிழலில் சற்றுநேரம் இளைப்பாறினார்.

மரத்தில் அமர்ந்து இருந்த சிறுவன் ஔவைப் பாட்டியை அழைத்துக் களைப் பைப் போக்க நாவற் பழங்கள் வேண்டுமா எனப் பரிவுடன் வினவினான். இதைக் கேட்ட ஔவையாரும் வேண்டுமெனக் கூறவே, "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்ற கேள்வி சிறுவனிடமிருந்து வந்தது. கேள்வி ஔவையாரைச் சிந்திக்கச் செய்தன. ஆனால் பதில் ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் அச்சிறுவனை அண்ணாந்து ஆச்சரியத்துடன் பார்த்து சுட்டபழமாகத் தரும்படி வேண்டினார். சிறுவன் மரக்கிளையை குலுக்கவே பழங்கள் தரையில் உதிர்ந்தன. கீழே விழுந்த பழங்களில் மண் ஒட்டிக் கொண்டிருக்கவே ஔவையார் ஒவ்வொன்றாக எடுத்து மண்ணைப் போக்க வாயினால் ஊதி ஊதிப் பழத்திலிருந்த மண்ணைப்போக்கி பிறகு சாப்பிட்டார். இதை எல்லாம் மேலே கிளையில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் கேட்டான், ""பாட்டி பழம் மிகவும் சுடுகிறதா? நன்றாக ஊதி ஊதி ஆறியபின் சாப்பிடு" என்று கூறிச் சிரித்தான் மாட்டுக்காரச் சிறுவன். சிறுவன் மதிநுட்பத்தை எண்ணி ஆச்சரியப்பட்டார்.

இனியும் ஔவையாரோடு தன்னைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பது சரியில்லை என்று எண்ணிய முருகன் மாட்டுக்காரச் சிறுவனாக இருந்த உருவத்தை விடுத்து ஆறுமுகப் பெருமானாக நீல மயிலில் அமர்ந்து ஔவையாருக்குக் காட்சி அளித்தார்.

ஔவையார் முருகனின் திருவிளையாடலை நினைத்து மகிழ்ந்து, முருகனை வணங்கி நின்றார். இத்திருவிளையாடலில் இறைவன் ஒரு தத்துவத்தை உணர்த்துகின்றார். அதாவது

*உயிரே போகும் நிலை வந்தாலும் உன் தைரியத்தைக் கைவிடாதே.*

இவ்வுலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் உலகப்பற்று என்னும் மண்ணால் ஒட்டப்பட்டிருக் கிறது. கல்வியறிவால் உலகப் பற்றாகிய அம்மண்ணை உதறி எறிய முடியாது. இவ்வுலகை ஆளும் இறைவனை உணருவதற்கு மெய்யறிவு இருந்தால்த்தான் பற்று என்னும் மண்ணை அகற்றமுடியும் என்பதே இத்திருவிளையாடலின் தத்துவம் ஆகும். இம் மெய்யறிவை இறைவன் தானே அருள முடியும். அருணகிரிநாதர் பாடுகிறார்.

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னி லொன்றா
விதித்தான் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமருகா மயிலேறிய மாணிக்கமே.

-கந்தரலங்காரம்

பின் முருகப்பெருமான் ஔவையாரிடம் சில வினாக்களைக் கேட்கிறார்.
முதலாவது வினா "கொடியது" எது?
ஔவையாரின் பதில்

கொடியது கேட்கின் நெடிய வெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனிலும் கொடிது இளமையில் வறுமை
அதனிலும் கொடிது ஆற்ற ஒணாக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது இன்புற அவர் கையில் உண்பதுதானே!"

அதாவது வறுமை கொடியது. அதனைக் காட்டிலும் தீராத கொடிய வியாதியைக் காட்டிலும் அன்பில்லாத மனைவியின் கையால் உண்பது மிகக் கொடியது என்கிறார் ஔவையார்.

உயிர்களிடத்தில் அன்பு செலுத்தாதவர்கள் ஆண்டவனை அடைய முடியாது என்பதை அருணகிரிநாதர் இப்படிக் கூறுகிறார்.

"நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங்கேனு மெழுந்திருப்பார்
வேற்கும ரற்கன் பிலாதவர் ஞான மிகவு நன்றே"

(கந்தரலங்காரம்- பாடல் 66)

இரண்டாவது கேள்வி முருகப் பெருமான் கேட்கிறார்.

இனியது எது?

ஔவையாரின் பதில் பாட்டிலிருந்து.

"இனியது கேட்கின் தனி நெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினைச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளாரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

*தேவையும் துன்பமும் ஒருபொழுதும் விட்டுப்பிரியாத நண்பர்கள்.*

அருணகிரிநாத சுவாமிகளும் இப்படிப் பாடுகின்றார்.

"வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகை கொண்டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கத் விக்ரம வேலா யுதந் தொட்ட நிர்மலனே"

-கந்தரலங்காரம் 88.

மூன்றாவதாக பெருமான் கேட்கிறார்.

"பெரியது எது?"

இதற்கு ஔவையார் பதில்

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது!
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவன் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சாற்றவும் பெரிதோ"

என்கிறார் ஔவையார்.

அருணகிரிநாதர் இப்படிப் பாடுகின்றார்.

"சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே"

-கந்தரலங்காரம் 49.

நான்காவது கேள்வியாக முருகப் பெருமான் கேட்கிறார்.

கேள்வி: "அரியது எது?"

ஔவையாரின் பதில்,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிது அரிது மானிடராதல் அரிது!
மானிடராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது

ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயல் அரிது
தானமும் தவமும் தான் செய்வர் ஆயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே!"

என்று ஔவையார் கூறினார்.

எண்ணிய பிறவிதனில் மானுடப்பிறவிதானாயினும் அரிது அரிது காண்" என்று தாயுமான சுவாமிகள் கூறுகின்றார்.

இறைவனது திருவுருவைக் கண்டு, கசிந்துருகிப் பாடவும் பூஜைகள் செய்யவும் வாய்ப் புள்ள இம்மானிடப் பிறவி வீணாகக் கழிந்து போகலாகாது எனப் பாடுகிறார் பட்டினத்தடிகள்.

"கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க ஈசன் இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்த மானிடமே"

மேலும்,

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரச வல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே"

-கந்தரலங்காரம்- 67.

"மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியபின்
நிலையான மாதவஞ் செய்குமி னோரும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங் கண்டீர்
குலையாயினும் வெந்ததோ யினும்பகிர்ந் தேற்றவர்க்கே"

-கந்தரலங்காரம்- 51.

இப்படி தனது இரு பாடல்களிலும் எடுத்துக் கூறுகின்றார்.

**கண்ணீர் அஞ்சலி**

**திருமதி செல்லையா சோதிப்பிள்ளை**

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி செல்லையா சோதிப்பிள்ளை அவர்கள் 18.12.2016இல் சிவபதமடைந்தார் எனும் செய்தி பெருந்துயரானதாகும்.

அன்னார், சந்நிதியான் ஆச்சிரமத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவரும், ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் உறுப்பினரும், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபருமான திரு செ. பரமேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயாராவார்.

திரு செ. பரமேஸ்வரன் அவர்களின் குடும்பத்தாரின் துயரினில் நாமும் பங்கு கொள்வதுடன், திருமதி செல்லையா சோதிப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்திபெற செல்வச்சந்நிதி வேலவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**-ஆச்சிரம சுவாமிகளும்**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும்.**

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆச்சிரம சுவாமிகள், "இன்று எம் பெருமான் அருளால் நாங்கள் திட்டமிட்டபடி அனைத்துக் கடமைகளையும் நிறைவு செய்து விட்டோம். எனவே போதிய அவகாசமிருப்ப தால் ஒருமுறை கதிர்காமத்தானிடம் சென்று வருவோம்" என்றாரே பார்க்கலாம். எம்முடன் வந்தவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. எவரும் எதிர் பாராத வேளையிலே கதிர்காமம் போவோம் என்ற செய்தி எம்மிலும் பார்க்க எம்முடன் கூட வந்திருந்த ஓர் அடியவர்க்கு மிக மிக ஆனந்தமாகவும் அருளூட்டமாகவும் இருந் தது. காரணம் அவர் ஓர் ஓய்வுபெற்ற அரச ஊழியராக இருந்தபொழுதிலும் ஒரு நாள்கூட இவ்வளவு காலமும் கதிர்காம மண்ணில் காலடி வைத்தாரில்லை. மிகவும் குதூகலமாக எல்லோரும் கதிர்காமத்தை நோக்கிச் சென்றவேளை புட்டளை என்ற இடத் தில் எமது வாகனத்தில் ஏற்பட்ட கோளாறை யும் அதற்கு உதவியாக இரு இளைஞர்கள் வந்து உதவியதையும் முருகனின் சமகாலத் திருவருளின் சான்று என்ற வகையில் இத் தொடரில் எடுத்தாண்டதை இச்சந்தர்ப்பத்தில் ஞானச்சுடர் வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விளைகின்றேன். இப்படியாக கதிர்காமம் சென்று முதலில் மாணிக்ககங்கையில் நீராடி மாணிக்க விநாயகனைத் தரிசித்து பின் கதிர்காமக் கந்தனைத் தரிசித்து அங்கிருந்து யாழ் நோக்கிய எமது பயணத்தைத் தொடர்ந்து மறுநாட்காலை சந்நிதியானை வந்தடைந்து அவரவர் ஊர் ஏகினோம்.

மாதமொருமுறையான சந்நிதியானின் குடாநாடு கடந்த மலையக மக்களின் நலனோம்பணியாக இம்முறை ஓர் சரித்திர சம்பவ நிகழ்வுக்காக எம்மை அழைத்த அழைப்பிற்கிணங்க 19.06.2015 வெள்ளி இரவு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு 8.30 மணி யளவில் முருகனை வணங்கி எமது பய ணத்தை ஆரம்பித்தோம். இம்முறை எமது பெரிய பேருந்து எமது வாகனமாக அமைந் தது. மொத்தம் 29பேர் அடங்கியிருந்தனர். சைவ மகா சபைத் தொண்டர்களில் 10-15 இளைஞர்களும் அடங்கியிருந்தனர். வழமை போல இடையில் எங்கும் தங்காது நேரடி யாக பதுளைக்கே சென்றோம். ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தை அடைந்து எமது இரவுப் பயணக் களைப்பைப் போக்கி ஆயத்தமாவோம் என எண்ணி அவர்களை அணுகியபொழுது அவர்களுடைய உதவி கிட்டவில்லை. எனவே அங்கிருந்து எமது காலைக் கடன்களை முடித்து ஆயத்தமாவ தற்காக 4கி.மீ தொலைவில் உள்ள ஓர் ஆற்றங்கரைக்குச் சென்றோம். இப்பயணங் கூட இச்சந்தர்ப்பத்தில் எமக்கு ஓர் அனுபவப் பகிர்வை ஏற்படுத்தியமையை அடியார் களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இதுவரையான எமது பயணங்களில் எமது காலைக் கடன்களை முடித்துத் தங்குமிட வசதி தந்த இடமாக பதுளை ஸ்ரீ கதிர்வேலா யுத சுவாமி தங்குமிட விடுதி அமைந்திருந் தது. ஆனால் இம்முறை இவ்வசதி கிடைக்க வில்லை. எனவே அப்பகுதி மக்கள் தினசரி அனுபவிக்கும் வசதிகளில் ஒன்றான குளி யல்முறை எமக்கு கிடைக்க வாய்ப்பாக

இப்பயணம் அமைந்ததைக் குறிப்பிட்டேயாக வேண்டும். அக்காலை வேளையில் ஆற்றோரக் குளியல் எமக்கு ஆனந்தமாகவே இருந்தது. ஆற்றோரம் என்றபொழுது எங்கள் சந்நிதி யானின் வேற்கரணியான தொண்டைமானாற் றங்கரைபோலல்ல நாம் சென்றது. ஒரு காப்பெற் பெருந்தெரு. இது ஆற்றோரமாகவே செல்கிறது. 20-30' ஆழச் சரிவில் பாதை தொடர்கிறது. ஆறு ஓடுகிறது. ஆங்காங்கே இச்சரிவுகளினூடான படிக்கட்டுக்களும் இறங் கினால் குளிப்பதற்குரிய வசதியான கரை யோரங்கள் உண்டு. அப்பகுதிகளில் மட்டுமே குளிக்கமுடியும். அப்படியான ஒரு பகுதியில் எம்மவர்கள் நீராட ஆயத்தமாகின்றார்கள். அக்கரையிலும் இதே போன்ற ஓர் பகுதி அங்கும் ஆண்களும் பெண்களுமாக நீராடிக் கொண்டிருக்கிறார்கள். இத்தெருவின் மறு புறத்தில் மலைமீது குடியிருப்புகள், தேயி லைத் தொழிற்சாலைகள். எமது குளிக்கும் பகுதிக்கு நேரே சற்று உயரத்தில் ஓர் முரு கன் ஆலயம். அதன் ஒரு பகுதியாக மலசல கூட வசதியிருந்தது.

மலைநாட்டிற்கேயுரிய ஜில்லென்ற நீர் பிரயாண நித்திரைக் களைப்புத்தீர அனைவரும் ஆனந்தமாக குளித்து காலைக் கடன்களை நிறைவேற்றியதும் அந்த முரு கனைத் தரிசித்தோம். சென்றமுறை வந்த பொழுது இந்த ஆலய அறநெறிப் பாட சாலைக்கு உதவியமையையும் அறிய முடிந்தது. அப்பயணத்தின்பொழுது அடி யேன் பங்குபற்றவில்லை. இது அதிகாலைப் பொழுதாக இருந்தபடியால் நாம் அவர்களுக் குப் புதியவர்களாகவுமிருந்தபடியால் பலர் தங்கள் வீடுகளில் இருந்தபடி குளிர் உடுப் புக்களுடன் எம்மைப் பார்த்தவண்ணம் இருந் தார்கள். பின்னர் நேரடியாக பதுளை மகளிர் இல்லத்திற்குச் சென்றோம். அவர்களது வழமையான உபசரிப்பில் இம்முறை பல் வேறு வகையான உணவு வகைகளை வைத்திருந்தனர். இட்லி, தோசை, சம்பா பச்சையரிசிச் சாதம் அருமையான சாம் பாரும் சம்பலும். இதில் அவரவர் தேவைக் குரியதாக விரும்பியதைத் தட்டில் எடுத்துச் சாப்பிட்டார்கள். இம்முறை சுவாமிகள் இப் பிள்ளைகளுக்காக எம்மூர் நல்ல பலாப்பழங் களைக் கொண்டு வந்திருந்தார். அவற்றை அவர்களுக்கு வழங்கி அவர்களது கற்றல் நடவடிக்கைகள் பற்றி விசாரித்து அறிந்தபின் பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணி யர் தேவஸ்தான கலாசார மண்டபத்திற்குச் சென்றோம். இங்கிருந்து 28 கி.மீ தொலை வில் இம்மண்டபம் அமைந்திருந்தது. அந்த மண்டபத்துடன் அருகில் கோவில் இருந்தது. கோவில் பாலஸ்தாபனம் பண்ணியிருந்த பொழுதிலும் பூசைகள் வழமைபோல் நடை பெற்றுக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. நாங்கள் சென்ற நாள் சனிக் கிழமை ஆக இருந்தபொழுதிலும் அடியார் கள் வந்து அர்ச்சனை செய்து கொண்டிருந் தனர். அர்ச்சனைத் தட்டுக்களையும் பொருட் களையும் பார்த்தபொழுது அதே கதிர்காமக் கந்தனின் பாணியில் கெக்கரிப்பழம், வாழைப் பழம், அப்பிள், திராட்சை என்பவற்றைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் ஒரு வித்தியாசம் அங்கு அர்ச்சித்த பொருட்களை அடியார்களுக்கே பகிர்ந்தளித்து விடுவார்கள். ஆனால் இங்கு எமது பாணியில் மிகப் பவ்வியமாக ஐயாவிடமிருந்து வாங்கி அடி யார்கள் தம்மோடு கொண்டு சென்றதைப் பார்வையிட முடிந்தது.

கோவில் வீதியும் போக்குவரத்துச் சாலையும் ஒன்றாகவே அமைந்துள்ளதுடன் மலைநாட்டுக்கேயுரிய ஏற்ற இறக்கங்களுடன் இருந்தது. சாலை ஓரங்களில் கடைகளும் குடியிருப்புகளும் காணப்பட்டன. ஆலய பரி பாலனத்திற்கு அருமையான ஓர் நிர்வாகம்

*பலமே வாழ்வு; பலவீனமே மரணம்.*

இருப்பதை அறியமுடிந்ததுடன் அதன் நிர்வாகிகளுடனும் அளவளாவும் வாய்ப்புக் கிட்டியது. தங்களுக்கு ஓர் அருமையான ஆலயகுரு அமைந்துள்ளதாகவும் அவரும் மிகவும் படிப்பறிவுள்ள ஆத்மீக ஞானகுரு வாக இருந்து தம்மையும் ஆலயத்தையும் மிகத் திறம்பட நடாத்துவதற்கு முழு அனு சரணையாக இருப்பதையும் குறிப்பிட்டனர்.

அத்துடன் அக்குருவுடன் அளவளா வும் வாய்ப்புக் கிடைத்தது. எங்களது அந்த ணச் சிவாச்சாரியார்களுடன் மிகவும் நெருக்க மான உறவுக்காரராக இருப்பதுடன் தமக்கே உரிய ஓர் பெரிய நவீன காரில் வந்திருந் ததையும் அவதானிக்க முடிந்தது.

பாலஸ்தாபனம் பண்ணியிருந்த நிலை யில், நாமும் முருகனைத் தரிசித்தபின் கலா சார மண்டபத்திற்குச் சென்றோம். அங்கே அபரிமிதமான மண்டப நிகழ்வு ஒழுங்குகளு டன் சுவாமிகளின் வருகையை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். நாம் மண்டபத்தினுள் நுழைகிறோம்.

(காட்சி தொடரும்...

**அன்னை சிவத்தமிழ்ச் செல்வி**

**பண்டிதை, கலாநிதி**

## தங்கம்மா அப்பாக்குட்டி J.P

**அவர்களின்**

**92ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா**

**காலம்:** 07.01.2017 சனிக்கிழமை காலை 08.30 மணி

**இடம்:** அன்னபூரணி மண்டபம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்



பேரன்புடையீர்,

வணக்கம்.

எதிர்வரும் 07.01.2017 எங்கள் தேவஸ்தானத்தின் தெய்வநிலை எய்திய, பெருந்தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் 92ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா துர்க்கா தேவியின் திருவருளால் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் அன்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

**வணக்கம்**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

**(தலைவர்)**

*கடமையைச் சரிவர நிறைவேற்றினால் உரிமை தானாகவே வந்துசேரும்.*

# திருச்செந்தூர்ப்புராணம் மீளவும் நீர்வேலியில் வெளியீடு

–திரு ச. லலீசன் அவர்கள்–

உலகெங்கும் வாழும் முருக பக்தர்கள் நினைந்துருகி வழிபாடாற்றும் தலமாக விளங்குவது திருச்செந்தூர். வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில். நெடுவேள் நிலை இய காமர் வியன் துறை- என்று புறநானூறும், சீர்கெழு செந்திலும் செங் கோடும் வெண் குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்- என்று சிலப்பதிகாரமும் திருச் செந்தூரைப் போற்றுகின்றன.

கடல் அலைகள் வருடுவதால் திருச் சீரலைவாய் என்றும், முருகப்பெருமான் சூர பதுமனை வென்ற தலமாதலால் ஜெயந்தி புரம் என்றும் அழைக்கப்படுகிறது. கபாடபுரம், அலை வாய், கந்தமாதன மலை, திருச்செந் தில் என்ற வேறு பெயர்களும் உண்டு.

முருகப் பெருமான், சூரபத்மன்மீது போர் தொடுத்தார். வழியில் எதிர்ப்பட்ட தாரகா சுரனையும், கிரௌஞ்ச மலையையும் அழித்து விட்டு, வீரவாகுதேவர் மற்றும் தன் படை களுடன் திருச்செந்தூரில் வந்து தங்கினார். அவர் அசுரரை வெற்றி கொண்ட பிறகு ஈசனை வழிபடுவதற்கு வசதியாக தேவ தச்சன் மயனை அழைத்து கோயில் ஒன்றை எழுப்பினார். அதுவே இன்று நாம் காணும் திருச்செந்தூர் கோயில் என கோயில் வரலாறு குறிப்பிடுகின்றது.

சிதம்பரம், இராமேஸ்வரம் திருச்செந் தூர் ஆகிய தலங்கள் மீது நம்நாட்டவர்கள் அளவுகடந்த பக்தியைக் கொண்டுள்ளனர். திருச்செந்தூர்மீது வடபுல மக்களைக் காட்டி லும் கிழக்கிலங்கை மக்கள் அதிகளவு ஆர் வத்தைக் கொண்டுள்ளனர்.

திருச்செந்தூர் பற்றி அதிகளவான நூல்கள் எழுந்துள்ளன. ஓரெழுத்தந்தாதி, திரிபு அந்தாதி, பதிற்றுப்பத்து அந்தாதி, யமக அந்தாதி, வெண்பா அந்தாதி, நீரோட் டக யமக அந்தாதி, சுப்பிரமணிய அந்தாதி, முருகன் கலித்துறை அந்தாதி, திருச் செந்தில் உலா, திருச்செந்தூர் மாதாந்தக் கலித்துறை, திருச்செந்தூர் வழிநடைச் சிந்து, திருச்செந்தூர்க்கோவை, திருச்செந்தூர் ஷண் முக சதகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம், தசாங்க வகுப்பு, வழி நடைப்பதிகம், திருச் செந்தில் பதிகம், திருச்செந்தில் நவரச மஞ் சரி, திருச்செந்தில் சந்த விருத்தம் திருச்செந் தூர்ப் புராணம், திருச்செந்தூர் முருகன் பிள் ளைத் தமிழ் என்பன அவற்றுள் சிலவாகும்.

நீர்வை மண்ணுக்குப் புகழ் சேர்க்கும் வகையில் வாழ்ந்த பெருந்தகையும் புராண விற்பன்னருமாகிய ச. சிவப்பிரகாச பண்டிதர் வெற்றிமாலைக் கவிராயர் எழுதிய திருச்செந் தூர்ப் புராணத்திற்கு உரை வகுத்துள்ளார். பண்டிதரின் காலம் 1864 - 1916 ஆகும். 1907ஆம் ஆண்டில் சைவபரிபாலன சபையார் இந்நூலை வெளியிட்டனர். இதன் இரண்டாம் பதிப்பு 1969ஆம் ஆண்டில் மீண்டும் அவர் களால் வெளியிடப்பட்டது. இரண்டு தடவை கள் இந்நூலைப் பதிப்பிக்கும் தேவை எழுந்துள்ளதென்பதனால் இந்நூலுக்கான தேவை எங்கள் மண்ணில் சிறப்புற்றிருந்தது எனக் கொள்ள முடிகின்றது. நீர்வை மண் ணின் புராணபடனப் பாரம்பரியத்திற்குப் பெருமை சேர்ப்பதாகவும் சிதைவுறும் நிலை யில் உள்ள நூலை மீளப் பதிப்பித்துச் சைவ

*அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்.*

உலகோருக்கு வழங்கும் நன்முயற்சியாகவும் ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ சா. சோமதேவக்குருக்கள் அவர்கள் சிவப்பிரகாச பண்டிதரின் குடும்பத்தாரது நிதிப்பங்களிப்புடன் இந்நூலை மீளப்பதிப்பாக்கம் செய்து வெளியிட்டுள்ளார்.

திருச்செந்தூர்ப் புராணத்தை இயற்றிய வென்றிமாலைக் கவிராயர் குறித்தும் கர்ன பரம்பரைக் கதை ஒன்று உள்ளது. இவர் திருச்செந்தூர் ஆலயத்தின் மடைப்பள்ளியில் பரிசாரகராக விளங்கினாராம். உரிய நேரத்திற்கு சமையல்செய்து வழங்காததால் அவரை ஆலயத்தில் இருந்து புறந்தள்ளினர் என்றும் இதனால் அவர் செந்தில்வேலவர்மீது பாடிய திருச்செந்தூர்ப் புராணத்தை அன்று ஆலயத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகின்றது. இதனால் மனவிரக்தியுற்றவர் தான் எழுதிய புராண ஏடுகளை கடலில் வீசி எறிந்தாராம். கடலில் சேர்ந்த ஏடுகள் இலங்கையின் கிழக்குக் கரையில் கரையொதுங்கின. கிழக்கிலங்கையில் அந்தப் புராணத்தை கண்டெடுத்தவர்கள் அதனைப் பயபக்தியுடன் படிக்கத் தொடங்கினர். அதனைப் படிக்குந்தொறும் முருகன் பேரருள் ஓங்கியது. இதனால் கிழக்கிலங்கையில் உள்ள ஆலயங்களில் பக்தி பூர்வமாக இப்புராணப் படிப்புப் பிரபலம் பெற்றது.

வடக்கிலும் பிரபல ஆலயங்களாகிய மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் கோவில், அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோவில் முதலிய பிரபல ஆலயங்களில் இப்புராணம் கந்தசஷ்டி காலத்தில் படிக்கப்பட்டு பயன்சொல்லும் வழக்கம் இருந்தது. புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவைப் பிள்ளையார் கோவிலில் இப்புராணம் கையெழுத்துப் பிரதி வடிவில் நீண்டகாலமாகப் பேணப்பட்டு வருகின்றது. ஆயினும் இடையில் ஏற்பட்ட இடப்பெயர்வு மற்றும் நூற்பிரதிகளின் சிதைவு காரணமாகவும் புராண படன முறையில் ஏற்பட்ட தொய்வுநிலை காரணமாகவும் இப்புராணத்தைப் படிக்கும் வழக்கம் அருகிவிட்டது.

அருகிவரும் நூல்களை மீளப்பதிப்பித்து வெளியிடும் ஆர்வம் மேலோங்கிவரும் பின்புலத்தில் இத்தகைய வெளியீட்டையும் நோக்க முடிகின்றது. நூலில் உள்ள பாடல்களைப் பதப்பிரிப்புச்செய்து வெளியிட்டிருப்பின் படிப்போர் பலர் பயனடைந்திருப்பர். கடுமையான தமிழ்நடை நூலின்பால் வாசகரை நாடச் செய்வதற்குத் தடையாக அமைந்திருக்கிறதென்பதும் மறுக்கமுடியாத உண்மை.

# வருடாந்த திருவாசக விழா 2016



பேரவையினால் வருடா வருடம் நடாத்தப்பட்டுவரும் திருவாசக விழா 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை சந்நிதி வேற்பெருமானின் அபிஷேக பூசை வழிபாடுகளோடு, பண்ணிசை, பட்டிமன்றம், திருவாசக உரைகள், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வு முதலிய கலை நிகழ்வுகளோடு, திருவாசக ஏடுகளும் ஆலயத்திலிருந்து ஆச்சிரமத்துக்கு எடுத்துவரும் செயற்பாடுகளும் இடம்பெறும்.

*தோல்வியை நேசி. வெற்றியின் விளிம்பு உன் விழி வழியே தெரியும்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 04

## எல்லை இல்லாததை அடைவதற்கான போராட்டம்

### 23. ஆசைகளின் அடுக்குகள்.

எமது ஆவல்கள் பல மட்டங்களில் வெளிப்படக்கூடியனவாக இருக்கின்றன. எனினும் மேல்மட்டத்தில் உள்ள ஆவல்களே ஓரளவாவது காணக்கூடியனவாயும், புரிந்துகொள்ளக் கூடியனவாயும் இருக்கின்றன. ஆழமான மட்டங்களில் உள்ள ஆவல்கள் எமக்குத் தெரியாதனவாகவே உள்ளன. உளவியலாளரும், உளப் பகுப்பாய்வாளரும் மனித மனத்தின் ஆழ்ந்த மட்டங்களைப் புரிந்துகொள்வதற்குத் தம்மால் ஆனமட்டும் முயற்சித்துள்ளார்கள். எல்லா மட்டங்களிலும் உள்ளனவே ஆசைகளின் உலகமாகும். அத்துடன் உணர்வு மட்டத்தில் தொழிற்படுகின்ற பிரதான ஆசையானது மற்றெல்லா ஆசைகளும் உள்ள கீழ்மட்டங்களை இல்லாதனபோலத் தோன்றச் செய்கின்றது. ஆனால் அந்த ஆழத்திலுள்ள ஆசைகளும் ஒருநாள் தலையை நீட்டி வெளிப்பட்டு எல்லாவற்றையும் தீர்மானிக்கக் கூடியவையாக வந்துவிடும். பிராய்டு முதலான உளவியல் பகுப்பாய்வாளர் உலக சமயங் கள் தோன்றுவதற்கான காரணங்களுள் ஒன்று வெறும் மாயம் என்றே கருதினர். சமூகப் புனிதம் என்ற வகையிலும், விழுமியங்களின் புறவயமான செம்மைப் படுத்தல் வகையிலும் ஆழ்மனத்திலுள்ள ஆசைகளை வெளிப்படுத்தும் ஒரு திருப்தியான மனப்பாங்கு மட்டுமே சமயம் ஆயின் சந்தேகம் இன்றி அந்தச் சமயம் ஒரு மாயம் ஆகவே தொடர்ந்தும் இருக்கும்.

### 24. உண்மைச் சமயம்.

தனி மனிதனுடைய வாழ்வுக்குள் அண்டத்தின் ஒரு சிறு பகுதியை ஆவது நுழைய வைப்பதே சமயத்திற்குப் பொருளாகும் என்றால் அதுவே உண்மையான சமயம் ஆகும். அந்த உண்மைச் சமயத்துக்கும் ஆசைகளோடு கூடிய உலகத்துக்கும் எவ்வித தொடர்பும் இருக்கமுடியாது. எனவே பெரும்பாலான மனிதரிடத்திலே காணப்படும் பிரபலமான ஒரு சமயமும் உண்டு. அந்தச் சமயம் சமூக உறவுகளின் வெளிச்சத்தில் புனிதம் என்று அழைக் கப்படுகிறது. ஆனால் அதைவிடக் கடவுள் பற்றிய உண்மையான சமயமும் உண்டு. அந்த உண்மைச் சமயத்தைப் பற்றியே பகவத்கீதை கூறுகின்றது. அதனாலேதான் கீதையின் செய்திபற்றிக் கூறுமிடத்து அது சாதாரண மனிதனுக்குக் கூறப்படவில்லை எனப்பட்டது. கீதையின் செய்தியை பிடித்துக்கொள்வதற்கு எமது முழு ஆளுமையையும் பெரிதும் விழிப் பாக வைத்திருக்கவேண்டியது அவசியம் ஆகும். ஏனெனில் கீதையின் செய்தி அகண்ட

*அழகானது எதனையும் கலை உணர்வுடனே காணவேண்டும்.*

வடிவினனான பரமாத்மாவினால் வழங்கப்பட்டுள்ளதாகவே நாம் உணருகின்றோம். அந்த அகண்ட வடிவம் எங்குமுள்ள எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி உள்ளது. நாம் அந்தச் செய்தியின் குறிப்புகளில் ஆழ்ந்து ஈடுபடவும், அதன் அர்த்தத்தைச் சரியான முறையில் புரிந்து கொள்ளவும், அப்படியான ஓர் அகண்ட வடிவத்துக்கு எம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டியவர்கள் ஆக இருக்கின்றோம். *(4ஆம் அத்தியாயம் முற்றிற்று)* (தொடரும்...

---

## முத்துக்குமரனின் முத்தமிழ் ஞானமே சந்நிதியில் செந்தில்வேல் மோகனதாஸ் சுவாமிகளின் விண்தொட்டகானமாகியது!

தெய்வத் தத்துவதீதமான நித்திய ஞானமானாய்!
தெய்வீக முழுமுதலே தத்துவ சொருப ஞானமே
தெய்வத்தாலவமின்றி தாத்துவ ஆன்மீகமானாய்
தெய்வத்தத்துவத்தறிவுக் கெட்டாத்தயங்கு பேரறிவே கொண்டாய்!

உடலினுக்குயிரேபோல வுயிர்க்குயிரானாய் நீயே!
உடலுயிர்க்கறிவு நல்கியுடலினை கழிப்பாய் நீயே!
உடலுயிரெனப் பிறவினீங்கா ஒற்றுமைப் பொருளே யானாய்!
உடனுறை யுயிர்க்கு மெட்டாஒளிர் பெரும் வேலோடிணைந்தாய்!

விரவுதத்துவத்தில் நீங்கு மேலென வேலோடு அமைந்தாய்!
வரமுற மரபு பூண்டு வந்தருள் சந்நிதி பூண்டாய்!
பரவுமைந்தொழிலே நீக்கியுயிரினைப் பணிப்பு கொண்டாய்!
பாரினில் உயிரைக்காக்கும் பரஞ்சுடர்க்கருணை சுவாமியானாய்!

பக்தர்கள் வழங்காநின்ற பலவுங்கைக் கொள்வாய் நீயே!
புத்திகள் போகத்தார்க்கு புனைந்தருள் வேலன் நீயே!
முத்தியை யோகத்தார்க்கு முடித்தருள் யோகியானாய்!
எத்தொழிலவர்க்கு மீந்தே பயனருள் கண்டாய்நீயே!

வேண்டிய அடியார்க்கெல்லாம் விக்கினமகலச் செய்தாய் நீயே!
வேலனை வேண்டாதார்க்கும் விக்கினம் களைவாய் சுவாமி!
வேண்டுவார் வேண்டிற்றெல்லாம் விளைத்தருள் விமலனானாய் நீயே!
வேதநெறிப்படாதாரும் வியந்து சந்நிதி பூண வைத்தாய் நீயே!

கருங்கடல் கங்கை புனைந்துற்ற சந்நிதியாச்சிரம சுவாமியானாய்!
ஒருங்கருள் தொண்டையூர் பாங்கருளுற்றுனையுணர்ந்த முருகனுடனின்றாயே!
மருங்கு செந்தில்பாலன் வரம்பெற்ற மயில்வாகன சுவாமிபணியை மந்திரமாக போற்றினாயே!
பெருங்கருணை பரிமளாதேவியூறு சேரச்சேய்களுடன் வித்தகர் விழாக்கண்ட மோகன்
-சுவாமிகள் அறங்கண்ட திரிசூலமே!

**-க. தெய்வேந்திரம்-**

*நாளை என்றால் தாமதமாகிவிடும். இன்றே வாழ்ந்து விடுங்கள்.*

# ஞானச்சுடர் வளர்க! வளமுடன்

– பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா அவர்கள் –

நாம் சந்நிதியான் ஆச்சிரம ஆரம்ப காலம் முதலாக தொடர்புகளைப் பேணி வருகின்றோம் ஆரம்பத்தில் ஓர் சிறிய இடத்தில் ஆச்சிரம நடவடிக்கைகளை மோகன தாஸ் சுவாமிகள் ஆரம்பித்தார். அன்று அன்னதானப் பணிகளை ஆற்றிவருகின்ற போது உணவுப் பண்டங்களை அடியார்கள் மனம் உவந்து வழங்கி வந்தார்கள். கந்தன் கருணையினால் யாரோ ஓர் அடியார்மூலம் அன்னதானப்பணி தடங்கல் இல்லாமல் நடைபெற்று வந்தது. இப்போது சந்நிதியானின் பெருங்கருணையினால் ஆச்சிரமக் களஞ்சியசாலை நிரம்பி வழிகின்றது.

ஆரம்பகாலம் முதல் இன்றுவரை சுவாமிகளின் கைவண்ணத்தில் அறுசுவை உணவு தயாராகி கந்தனுக்கு நிவேதனமாகி அடியார்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்டு வருகின்றமை மிகச்சிறந்த தொண்டாகும். சுவாமிகளே நளபாகம் என வர்ணிக்கப்படுகின்ற மிகச் சிறந்த சமையற்கலை வல்லுனராக சிறந்து விளங்குவது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

"செவிக்குணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கீயப்படும்" என்ற வாக்கிற்கிணங்க அன்னதானத்திற்கு வருகின்ற அடியார்களுக்கு தெய்வீக விடயங்களையும் வழங்க வேண்டும் என்கின்ற சுவாமிகளின் பேராவலால் "சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை" உருவாக்கப்பட்டது. ஆன்மீகம் சார்ந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டது. தெய்வீகப் பேருரைகள், ஆன்மீகக் கருத்தரங்குகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் பேரவையில் அரங்கேறியது. இந்நிகழ்வுகளுக்கு அடியார்களின் பூரண ஒத்துழைப்பு என்றும் கிடைத்து வரும் என்பதில் ஐயம் இல்லை. ஆரம்பத்தில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் சிரமம் இருந்தது. ஆனால் தற்போது ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு தமது ஆன்மீக நிகழ்வுகளை ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்த்துவதற்கு முன் வருகின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது மட்டில்லாத மகிழ்ச்சியாக உள்ளது.

இப்படியாக இங்கு நடைபெறுகின்ற தெய்வீகப் பணிகளை ஏனைய அடியார்களும் அறியவேண்டும். ஆன்மீகம் சம்பந்தமான விடயங்களை மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்கின்ற நல்ல சிந்தனையில் "ஞானச்சுடர்" என்கின்ற ஆன்மீக மலரை வெளியிட ஆச்சிரம சுவாமிகள் முயற்சி எடுத்தார். கார்த்திகேயனின் பூரண அனுக்கிரகத்தால் "ஞானச்சுடர்" தொடர்ச்சியாக வெளிவந்தவண்ணம் உள்ளது. ஆரம்ப காலத்தில் வெளியே அச்சிடப்பட்ட போதிலும், சிறிய அச்சுக்கூடமொன்று ஆச்சிரமத்திலே நிறுவப்பட்டபின் ஆச்சிரமத்திலேயே "ஞானச்சுடர்" அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகிறது. தற்போது தற்காலத்திற்கேற்ப வளர்ச்சி கண்டு கணனி அச்சுக்கூடமாக மாறி நால்வர்ண அட்டையுடன் 228ஆவது மலராக "ஞானச்சுடர்" மலர்ந்து இன்று உங்களிடம் வெற்றிநடைபோட்டு வருகின்றது.

சமயப்பணி மட்டும் இல்லாமல் சமுதாயப்பணியிலும் ஆச்சிரமம் அரும் பணியாற்றி வருகின்றது. பல்வேறு நிகழ்ச்சிகளையும்

*தன்னம்பிக்கையை இழந்தவன் தன்னையே இழக்கிறான்.*

வாராந்தம் நடாத்தி வருவதுடன், பங்கு கொள்ளும் கலைஞர்களையும் கௌரவித்து வருகின்றது. வறுமைப்பட்டவர்களை இனங் கண்டு அவர்களுக்கு எவ்வகையான உதவி செய்ய வேண்டும் என்பதைக் கருத்தூன்றிக் கவனித்து அதனை மேற்கொண்டு வருகின் றது. உதாரணமாக குடும்பத் தலைவன் இல்லாத குடும்பத்திற்கு தையல் இயந் திரத்தை வழங்கி அக்குடும்பம் தலை நிமிர்ந்து வாழ வகை செய்கின்றது. வசதி குறைந்த குடும்பத்தில் உள்ள நன்றாகப் படிக்கின்ற பிள்ளைகள் நீண்ட தூரம் நடந்து பாடசாலைக்குச் செல்கின்ற சிரமத்தைக் குறைப்பதற்காக துவிச்சக்கரவண்டிகளை வழங்கிவருகின்றது. நோயுற்றவர்களுக்கு மிகச்சிறந்த வைத்தியர்களைக்கொண்டு அவர்களுக்குச் சிகிச்சை வழங்கி வருகின்றது.

ஓர் பேட்டியில் யாழ் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவராக இருந்த திரு தில்லைநாயகம் போல்: "நான் ஓர் மாற்றுச் சமயத்தவராக இருந்தபோதும் 'திருக்கேதீஸ் வரத் திருவாசக மடம்'தான் என்னை வளர்த்து, மேன்மையடையச் செய்து, இந்நிலைக்கு வருவதற்கு ஊன்று கோலாக திகழ்ந்தது" என்று கூறியிருந்தார். இதே மாதிரியான கருத்தையே மிகச் சிறந்த பின்னணிப் பாடகர் திரு ஜேசுதாஸ் அவர்களும் கூறி இருந்தார். அந்தவகையில் எமது சந்நிதியான் ஆச்சிரம மேடை பள்ளி மாணவர்கள் முதல் பலவிதமான இயல், இசை, நாடக விற்பன் னர்கள் தமது திறமைகளை அரங்கேற்றும் ஓர் அரங்கமாகத் திகழ்ந்து வருவதை யாவரும் கண்டு மகிழலாம்.

எமது ஆண்டவன் சந்நிதிகள் சைவ பண்பாடு பழக்கவழக்கங்களுக்கு ஓர் காட்சியகமாக திகழ்ந்து வருகின்றது. சிற்பம், ஓவியம், நடனம், (மாலை சாமி) அலங்காரம், தேர் வடிவமைப்பு, கட்டடக்கலை போன்ற கலைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது. அந்த வகையில் தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்களுக்கு பாராட்டு விழாக்களை ஆச்சிரமம் நிகழ்த்தி உள்ளது. சந்நிதியில் தங்கியுள்ள கந்தன் அடியார்களுக்கு உடுதுணிகள், புடவை களை வழங்கி வருகின்றது. அத்தோடு ஆன் மீக தலயாத்திரைகளையும் நிகழ்த்திவரு கின்றது.

இப்படியாகப் பல்வேறு துறைகளி லும் ஆச்சிரமம் தமது பணிகளை தமக்கே உரித்தான பாங்கில் நிகழ்த்தி வருவதை யிட்டு சைவப் பெருமக்கள் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். சைவ நன்மக்கள் சார் பில் எம்மால் முதன் முதலில் "ஞானச்சுடர்" ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவின்போது சமூக சேவை ஆற்றும் மதிப்பிற்குரிய மோகன தாஸ் சுவாமிகள் அவர்களுக்கு "அமிர்தகலா யோகி" என்கின்ற சிறப்பு விருதினை வழங் கிக் கௌரவித்தோம். எவ்வித சுயநல நோக் கும் இல்லாமல் பணியாற்றும் மோகனதாஸ் சுவாமிகளை நாம் தொடர்ந்தும் பாராட்டி மகிழ்வோம்.

சந்நிதியான் ஆச்சிரமம் ஓர் நிறை வான ஆச்சிரமமாகத் திகழ்கின்றது. தெய் வீகப் பணிகள் ஆகிய பூஜை வழிபாடுகள், மகேஸ்வர பூஜை, ஆன்மீக உரைகள் (இயல், இசை, நாடகம்) பல்வேறு துறைகளில் இலட் சுமி கடாட்ஷம் குறைந்தவர்களுக்கு தம்மால் ஆன உதவிகள், நோயுற்றவர்களுக்கு வைத் தியநாதனாக செயற்பட்டு வருகின்றமை போன்ற செயற்பாடுகளினால் சைவப் பெரு மக்கள் பெருமகிழ்ச்சியடைகின்றார்கள். "ஆச்சிரமம் என்றும் பெரு விருட்ஷமாக வளர மனதார வாழ்த்தி" சந்நிதி முருகனை வணங்கி மகிழ்கின்றோம்.

# சைவசமய ஈடுபாட்டோடு வாழ்வோம்

(தொடர்ச்சி...

– திருவாரூரன் –

**திருமுருக கிருபானந்த வாரியாரின் கருத்து**

சிவத்துடன் தொடர்பு கொண்டது சைவம்; சிலா- கல். கல்லின் தொடர்புடையது சைலம். (சைலம்மலை) திலத்தின் தொடர்புடையது தைலம். திலம்- எள் இதேபோல, சிவ சம்பந்தமுடையது சைவம்.

எல்லாச் சமய நெறிகளையும் தன்னகத்தே கொண்டு, அவற்றைப் பகுமுறையாகக் கொண்டு, அவைகளுடன் பிணங்காமல் இணங்கி, பாதசரத்தால் கரைந்து மறையும் மற்றைய உலோகங்களைப் போலன்றி, நின்று நிலைத்துத் தங்கும் பத்தரை மாற்றுத் தங்கம்போல், தன் இயல்பு என்றும் குன்றாது, இயமம் முதலிய அட்டாங்கயோக, நெறிகளைக் காட்டி, இன்பத்தை அருளவல்லதும், மற்றைச் சமயங்கள் அனைத்தும் தனக்குப் பரிகாரமாக விளங்க, சிட்சை, வியாகரணம், சோதிடம், சந்தஸ், கற்பம், நிருத்தம் முதலிய வேதாங்கங்கள் வணங்க, மௌனம் என்ற மகுடத்தைச் சிரத்தில் தரித்து, அரசு புரிவது வைதீக சைவசமயம் எனவுணர்க.

செப்பரிய சமயநெறி எல்லாம் தந்தம்
தெய்வமே தெய்வம் எனும் செயற்கையான
அப்பரிசா ளரும் அஃதேபிடித்தால் இப்பால்
அடுத்து அந்நூல் களும்விரித்தே அநுமானாதி
ஒப்பவிரித் துரைப்பர்! இங்ஙன் பொய் மெய் என்ன
ஒன்றிலைஒன் றெனப்பார்ப்பது ஒவ்வாதார்க்கும்
இப்பரிசாம் சமயமுமாய் அல்லவாகி
யாதுசம யமும்வணங்கும் இயல்பதாகி.

இயல்பு என்றுந் திரியாமல் இயமமாதி
எண்குணமும் காட்டி அன்பால் இன்பமாகிப்
பயனருளப் பொருள்கள் பரிவாரம் ஆகிப்
பண்புறவும் சௌபான பட்சங்காட்டி
மயலறு மந்திரம் சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி
அயல்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்த் துவை திகசமயம் அழகிது, அந்தோ.

இயமம் ஆதி எண்குணமும்- இயமம் முதலான எட்டு அங்கங்களையுடைய யோகமும், சௌபான பட்சம் காட்டி- படிப்படியாக மேல்நோக்கிப் போகும் உபாயத்தைக் காட்டி, மந்த்ர சிட்க்ஷை- வேதத்தில் உள்ள மந்திரமும் சிஷையுமாகிய பகுதிகள், ஜோதிபாதி- ஜோதிடம் முதலான அங்கநூலுடன் அமைந்த நூல், மௌன மோலி- மௌன நிலையாகிய கிரீடத்தினை,

அந்தோ ஈது அதிசயம் இச் சமயம்போல் இன்று
அறிஞ ரெல்லாம் நடு அறிய அணிமா ஆதி
வந்து ஆடித் திரிபவர்க்கும் பேசாமோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வேறு இல்லை; இல்லை
சந்தான கற்பகம் போல் அருளைக் காட்டத்
தக்க நெறிஇந் நெறியே தான்சன் மார்க்கம்.

(போக நலம்- இன்ப வாழ்வு. சந்தான கற்பகம். ஓயாமற் கொடுக்கின்ற கற்பக மரம்)

என்று அனுபூதி மகானாகிய தாயுமானப் பெருந்தகையார் அருளிச் செய்கின்றார். அட்டமாசித்தி கற்றாரும் இந்திராதி போக நலம் பெற்றாரும் இச்சைவ சமயத்தையே தமக்குத் தாயகமாகக் கொண்டு உய்கிறார் என்று கூறும் அருமையும் பெருமையும் பெற்றது சைவம்.

-கந்தர் அநுபூதி முன்னுரை.

**இந்து என்ற பதப்பிரயோகம்.**

இந்தியாவின் வடமேல் பகுதியில் ஓடியது சிந்துநதி. சிந்துவெளி நாகரிகம் தொன்மையானது. இங்கே சிவவழிபாடு இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. பேர்சிய மக்களுக்கு சிந்து என நாவில் வராது. எனவே அவர்கள் ஹிந்து எனப் பேசினர். சிந்து இந்துவான செய்தி இப்படியென்று பேசப்படும். இந்தியா என்று நாட்டைக் குறிக்கும் பெயர், சிந்து என்ற ஆற்றைக் குறிக்கும் பெயர்வழிப் பிறந்ததே. மழைத் துளிகள் சிந்தி உருவாகு வணவே ஆறுகள் குமரிக் கண்டத்தில் பண்டு ஓடிய ஆறு பல்துளி- ப.்றுளி ஆயிற்றெனக்கூறும் (தேவநேயப்) பாவாணர் சிந்துவை அதனோடு இணைப்பார். சிந்து ஆற்றைக் குறித்த பெயர் பின் சிந்துவை ஒட்டிய பகுதியைக் குறித்தது. ஆரியர் சிந்து ஆற்றங்கரையில் வந்து தங்கியபின்னர் ஆரிய நாகரிகம், இந்து நாகரிகம் ஆயது. இந்தச் சிந்துவே பிறகு பாரசீகர் நாவில் ஹிந்துவாக மாறியது. இந்த ஹிந்துவே ஆங்கிலேயர் காலத்தில் இந்து, இந்தியா என மாற்றம் பெற்றது. இன்று முழு இந்திய பரப்பையும் குறிக்கும் நாட்டுக்குரியதாயிற்று.

தமிழ்க்கப்பல் பக் 48, 49. முனைவர் கு. அரசேந்திரன்.

சிந்துவெளி நாகரிகம் தமிழ் நாகரிகம் என்றதுடன், அது தெற்கே இருந்து வடக்கே போன நாகரீகமேயன்றி. இந்தியாவைத்தாண்டி வேறெங்குமிருந்து இறக்குமதியான நாகரிகம் அல்ல. -ஹீராஸ் பாதிரியார்.

இந்த இந்து எங்கள் யாழ்ப்பாணத்தில் எப்படி நுழைந்தது என்பதையும் ஆழமாய்ச் சிந்திப்போம்.

"இந்துசமயம் என்று இன்று நாம் சொல்லிக்கொள்ளும் சமயத்தைப் புரிந்து கொள்ளுவதில் பல சிக்கல்கள் உண்டு. இந்தப் பெயரே வெளியில் இருந்து கொடுக்கப்பட்டது. இது மேலை நாட்டவரின் கீழைத்தேய வாதத்தால் உருவானது. யாழ்ப்பாணத்தில் இந்தச் சொல் உபயோகித்திற்கு வந்து சுமார் நூறு வருடங்கள்தான். இந்து சாதனமும் (1889) இந்துக் கல்லூரியும் (1890) ஆரம்பகால உதாரணங்கள்.

*நாம் உண்மையாக வாழ்வதென்பது கடமையைச் சரியாகச் செய்வதாகும்.*

ஒருமைத் தன்மையான சமய சிந்தனைக்குப் பழக்கப்பட்ட மேற்கத்தையார், அதே கண்களோடு தென்னாசிய சமய ஓட்டத்தைப் புரிந்துகொள்ள முயற்சித்து, அதற்கு ஒற்றைத் தன்மையான ஒரு பொதுச்சொல் கொடுக்கமுனைந்தபோது வசதியாக அகப்பட்டது ஆதிசங்கரர் உடைய வைதீகம், அவைதீகம் என்ற பிரிப்பு.

வேதத்தை முன்நிறுத்தி, அதற்கூடாகப் பிராமணியத்தை முன்னிறுத்திய சமய சிந்தனையே இந்து சமயத்தின் மூலம் என்ற கருத்தை, மேற்கத்தைய கீழைத்தேய வாதிகள் சொல்லப்போக, அவர்கள் கண்களுக்கூடாக எம்மை நாம் பார்ப்பதுதான் நாகரிகம் என்று நினைத்த எமது தேசியவாதிகளும் சேர்ந்து செய்த கற்பிதம்தான் இந்துசமயம் என்ற இன்றைய கருத்து.

வல்லியக்கனும் வல்லிபுரநாதரும் பக்கம்- 17.
கலாநிதி பொ. இரகுபதி 2006- மறுபிரசுரம்.

எனவே சைவர்கள் பிறமதத்துக்கு மாறுவது போன்றதே சைவம் இந்துவான கதை. ஆக நாம் நம் சைவம் பேணி சிவவழிபாட்டை மேற்கொள்வோமாக.

(முற்றும்)

## சிந்தனைக் கதை

கோயிலுக்கு அர்ச்சனைத் தட்டுடன் சென்ற பக்தர் ஒருவர் தட்டை அர்ச்சகரிடம் கொடுத்து, தனது பெயர் நட்சத்திரம் சொல்லி அர்ச்சனை செய்யும்படி சொன்னார். கருவைறயினுள் சென்ற அர்ச்சகர் தனது பெயரை உச்சரிக்கின்றாரா என்று மிக உன்னிப்பாகக் கவனித்தார். உச்சரிக்கப்படவில்லை என்று தெரிந்ததும் வெளியே வந்த அர்ச்சகரிடம் கோபத்துடன் "ஏன் இப்படிச் செய்தீர்கள்" என்று கேட்டார். அர்ச்சகரும் "மன்னிக்கணும் உங்களையும் சேர்த்தே பிரார்த்தனை பண்ணினேன். உலகத்தில் எல்லோரும் நல்லா இருக்கணும் என்று அர்ச்சனை செய்தேன். நீங்களும் இந்த உலகத்தில ஒருத்தர்தானே!" என்று கூற "இருந்தாலும் நான்தானே அர்ச்சனைத் தட்டு வாங்கி வந்தேன். உலகத்தவர் இல்லையே" என்றார் பக்தர். அர்ச்சகரும் "இதோ பாருங்கோ, ஒரு செடியினுடைய கிளைகளில் தண்ணீரை ஊற்றினால் அது வீணாகப் போய்விடும். ஆனால் அந்த நீரை செடியின் வேருக்கு ஊற்றினால் அது செடியின் கிளை, வேர் என்று எல்லாப் பகுதிக்கும் போய்ச்சேரும். அதுபோல நான் இந்தப் பூலோகத்திலுள்ள அனைவரையும் சேர்த்துப் பிரார்த்திக்கும்போது அதன் நன்மை உங்களுக்கும் வந்துசேரும். நீங்களும் இந்தப் பூலோகத்தில்தானே வாழ்கிறீர்கள்" என்றார். இவ்வாறு அர்ச்சகர் கூறியதும் "சரி உங்க விருப்பப்படி செய்யுங்கோ, ஆனால் அதன் பலன் என் பக்கத்துவீட்டு நண்பனுக்கு மட்டும் கிடைக்காமல் பார்த்துக்க முடியுமா?" என்று கேட்டார் பக்தர்.

ஒருவன் தனக்காக வாழ்வதில் தவறில்லை. ஆனால் தனக்காக மட்டுமே வாழ்வதுதான் தப்பு. ஆலமரம்போல் இருந்து பிறருக்கு நிழல் தரவேண்டுமே தவிர பனைமரம்போல் இருக்கக்கூடாது.

**-சுவாமி விவேகானந்தர்-**

*நன்றியுள்ள மனிதனுக்குக் கேட்டதைவிட அதிகம் கொடு.*

# அபரக் கிரியைகள்

– திரு இ. சரவணபவன் அவர்கள் –

மானிடப் பிறவியின் பயன் இம்மையில் உலகவாழ்வு மாத்திரமன்று. நிலையான பேரின்ப வாழ்வுக்கு ஏற்ற நிலையில் உரிய கிரியைகளைச் செய்வதற்கும் ஏற்றதாகும். நிலையான பேரின்ப வாழ்வுக்கு நாம் வாழும் பொழுதே ஏற்று அதன்படி ஒழுகுவதற்கு பூர்வக் கிரியைகளில் பல எமக்கு உதவுகின்றன. ஆன்மீக ஈடேற்றத்திற்கு உரியவாறு எமது வாழ்வைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவும் ஆத்ம சாதனையில் ஈடுபடவும் எமக்கு இக்கிரியைகளின் மூலம் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஒருவன் தன்னைப் பக்குவப்படுத்த இக்கிரியைகளே மூல காரணமாக உள்ளன. எனவே அவற்றின் பொருள் உணர்ந்து நாம் அவற்றில் ஈடுபடுதல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற படிமுறையில் மனிதனது உயர் இலட்சியங்களை அடைய இவை வழி வகுக்கின்றன.

ஆத்மாத்தக் கிரியைகளில் அபரக் கிரியைகள் ஒருவனுடைய ஆன்ம சாந்தியாகும். ஈடேற்றத்திற்கும் பெரிதும் துணை புரிவன. ஒருவன் இறந்தபின் அவனது நன்மை கருதி அவனது வழித்தோன்றலாகிய பிள்ளைகள் முதலியோரால் செய்யப்படுபவையே அபரக் கிரியைகள் ஆகும். "அபரம்" என்றால் "பிந்தியது" என்று பொருள் கொள்ளலாம். இவ் அபரக்கிரியைகளைச் செய்வதனால் இறந்தவரது ஆன்மா பாசங்களிலிருந்து நீங்கி சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கையாகும். இறந்த பின்பும் அந்தியேஷ்டிவரை இறந்தவர் தான் விட்ட உடலின் தொடர்பு நீங்காமல் அருவமாய் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் இக்கிரியைகள் இடம்பெறுகின்றன. அந்நிலையில் உடலைத் தொடர்பு படுத்திச் செய்யும் கிரியைகளின் பலனை அவர் பெறுகிறார். அந்தியேட்டியின் பின்னர் நடைபெறும் கிரியைகளின் பலனை மேல் உலகத்துப் பிதிரர் தேவர்கள் ஏற்று அவர்கள் எங்கிருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கின்றனர் என்ற நம்பிக்கை உள்ளது. அபரக் கிரியை உயிர்க்காகவே நிகழ்வன. அந்தியேட்டிவரை உடல் தொடர்பில் வைத்து அதனை அடுத்து உயிரைக் கருதியும் இவை நிகழ்த்தப்படுகின்றன. உடலை விட்டு நீங்கிய உயிர் அதன் பின்னர் பெறவேண்டிய அனுபவங்களுக்கு உபகரிப்பதற்காகவும் படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவதற்காகவும் இத்தகைய கிரியைகளினால் உயிருக்கு நன்மை ஏற்படுகின்றது. இதுவே உயிருக்குக் கிட்டும் ஆன்மீக ஈடேற்றம் எனலாம். அபரக்கிரியைகளின் வழி உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிவுறுகின்றன என்றும் இதன்மூலம் உயிரைப் பற்றியுள்ள மலங்கள் நீங்கும் வாய்ப்புக்கிட்டுவதாகவும் நம்பிக்கை நிலவுகின்றது. உரிய காலம் வாய்க்கும்போது உயிர் ஆன்ம ஈடேற்றம் பெறும். உயிர் பிரிந்தவுடன் ஒருவர் சிவபதம் அடைந்து விட்டார் எனக் கூறுவது அவரது சுற்றத்தாருடைய நல்நோக்கத்தினை வெளிக்காட்டுவதாகவும் உபசார வழக்காகவும் அமையினும் இக்கிரியைகள் சிரத்தையோடு செய்யப்படுவதன்மூலம் இறந்தவர் உயர் நிலைக்குச் செல்ல வழியேற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அபரக்கிரியைகளில் உக்கிராந்திக் கிரியை, பிரேதக்

*நல்லொழுக்கம் மட்டுமே புயலுக்கும் அசையாமல் உறுதியாக நிற்கும்.*

கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிஷ்டம், பஞ்ஞசதமாசிகம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம், மாசிகங்கள், ஆப்திகம், வருட சிரார்த்தம், மகாளயம், அமாவாசை, தர்ப்பணம் ஆகியவை குறிப்பிடத் தக்கன.

உடலைவிட்டு உயிர் நீங்கும்போது மேற்கொள்ளப்படுகின்ற கிரியை உக்கிராந்திக்கிரியை எனப்படும். அவ்வேளை புண்ணிய தலங்களின் சிவப்பிரசாதங்கள் அணிதல், கோதானம் செய்தல், திருஅருட்பாக்களை ஓதுதல், பஞ்சாட்சர ஜெபம் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். அடுத்து நிகழ்வது பிரேதக் கிரியைகளாகும். பிரேதத்தை நீராட்டுவதற்கும் மற்றும் இறந்தவரது குறைபாடுகள் நீங்குவதற்கும் செய்யப்படுவது இக்கிரியையாகும். கும்பங்களைப் பூசிப்பதனால் அதில் உள்ள நீருக்கு சிவத்தன்மை உண்டாகி அதனால் இறந்த உடலுக்கு நீராட்டுவதனால் நீரில் உள்ள சிவத்தன்மை உடலிற் சொரியும் என்பது சமய நம்பிக்கை. அக்கினி சிவமாகப் பூசிக்கப்படுவதனால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மை அந்த அக்கினியினால் உடலைத் தகனம் செய்யும்போது அதன் சிவத் தன்மையை அதிகரிக்க உதவும். உயிருக்கும் சிவத்தன்மை பதியும். சரீரசுத்தி, ஆன்ம சுத்தி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டே இக்கிரியைகள் நிகழ்வதை நாம் அவதானிக்கலாம்.

ஆன்ம சுத்திக்காகவும், உடல், உயிர் தொடர்பு நீக்கப்படுவதற்காகவும் இடம் பெறுவது அந்தியேஷ்டிக் கிரியைகள் ஆகும். "அந்திய" என்றால் "இறுதியான" என்ற பொருளிலும் "இஷ்டி" என்பது "யாகம்" என்ற பொருளிலும் வரும். எனவே இறந்தவர்களுக்காகச் செய்யும் "இறுதி யாகம்" என்று இதனைக் கூறலாம். இக்கிரியையின் மூலம் சமய அனுட்டானங்களில் நேர்ந்த குறைகள் தீரும். அந்தியேஷ்டியின் போது பொற்சுண்ணம் இடித்தல் மூலம் உயிர், உடல் தொடர்பு நீக்கம் பெறுகிறது என்பது நம்பிக்கையாகும். இறந்தவருடைய தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை இடித்து நொறுக்கி இல்லாமல் செய்தல் என்ற நோக்கில் இக்கிரியை இடம் பெறுகிறது எனக்கொள்ளலாம்.

அந்தியேஷ்டி முடிவில் வீட்டுக்கிரியைகள் என்ற முறையில் நக்னதானம், ஏகோதிஷ்டம், தசதானம், சபிண்டீகரணம் போன்ற பல கிரியைகள் ஆன்மீக ஈடேற்றம் கருதி நிகழ்வன. அந்தியேஷ்டியின் மூலம் உடற்தொடர்பு நீங்கியவர் தனக்குரிய கதியில் செல்வார். அவ்வாறு செல்லும் அவரது பாதை தனிமையானது; இருளானது; இடர்மிக்கது. ஆதலால் இவற்றிலிருந்து அவர் உயிர் விடுபடும் பாங்கில் இக்கிரியையின்போது உபசாரப் பொருள்களாகிய குடை, பாதரட்சை, விளக்கு, செம்பு, நீர், பாய், தலையணை முதலியன தானமாக வழங்கப்படுகின்றன. இவற்றின் உதவி அவ்வுயிருக்குக் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். இக்கிரியைகளில் சபிண்டீகரணம் முக்கியத்துவமுடையது. இறந்தவர் உரிய கதியை அடைவதற்கு பிதிர்களின் உதவி தேவையாகும். அதற்கு அவர் பிதிரர்களோடு சேர்க்கப்படல் வேண்டும். பிதிரர்களின் சின்னமாக பிண்டங்களை வைத்து அவற்றுக்கு எதிராக இறந்தவரின் சின்னமாக ஒரு பிண்டமிட்டு அப்பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபிண்டீகரணம் எனப் பெயர் பெற்றது. இறந்தவர் பேரில் பிதிரர்கள் குறித்து செய்யப்படும் எள்ளும் தண்ணீரும் கொண்ட தர்ப்பணம் என்ற கிரியையினால் அவர்கள் திருப்தியுற்று இறந்தவரை மட்டும் குறித்துச் செய்யும் நற்கிரியா

*பணத்தால் பசியைப் போக்க முடியும். துக்கத்தைப் போக்க முடியாது.*

பலன்களையும் அவர்கள் ஏற்று அவற்றின் மூலம் அவருக்கு நன்மை விளைவிப்பர் என்பது நம்பிக்கை. எனவே இதனை பிதிர் கடன் என வழங்குவர். ஒருவரது ஆன்மீக வாழ்க்கைக்கு பிதிர்கடன் மிகவும் இன்றியமையாதது என மரபு வழியாக ஏற்கப்படுகிறது.

ஆசௌசம் முடிந்த அடுத்தநாள் வீடு முதலியவற்றைச் சுத்தம் செய்து, புண்ணியாகம் செய்து இடபதானம் செய்வதுபற்றி குறிப்பிடப்படுகிறது. இடபதானம் செய்வதன் நோக்கம் இறந்தவரது தான தர்மபலன்களே தரும வடிவான இடபத்தின்மூலம் சிவபெருமானிடத்தில் சேர்த்து ஆன்மாவை இறைவனது திருவருளுக்கு பாத்திரராகும் வண்ணம் செய்தலாகும். மீளப்பிறவி உண்டாகாதவாறு பாதுகாப்பதற்கு இத்தானம் உதவுகிறது. ஆன்மாவின் உலக வாழ்க்கையில் திருப்தி கொள்ளச் செய்யும் வகையில் நிகழ்வது ஏகோதிஷ்டம் கிரியையாகும். இறந்த திதிக்குரிய மாசிகமே ஏகோதிஷ்டம் எனப்படும். அது தவிர்ந்த இரண்டாம் மாதத் திதி முதலிய பதினொரு மாதத் திதிகளும் இருபத்தேழாம், முப்பதாம் நாட்களுக்கிடையே செய்யப்படும் ஊனமாசிகமும், நாற்பதாம், நாற்பத்தைந்தாம் நாட்களுக்கிடையே செய்யப்படும் ஊனதிரிபட்ச மாசிகமும், நூற்றியெழுபதாம், நூற்றெண்பதாம் நாடகளுக்கிடையில் செய்யப்படும் ஊனசண் மாசிகமும், முன்னூற்றைம்பதாம், முன்னூற்றறுபத்தைந்தாம் நாட்களுக்கிடையில் செய்யப்படும் ஊன ஆப்திக மாசிகமும் ஆகிய பதினைந்து மாசியங்களையும் அவற்றுக்குரிய காலங்களில் செய்து வருட முடிவில் சபிண்டீகரணம் செய்வதே முறையாயினும் கர்த்தாவினுடைய அநித்தியம் மற்றும் இடையூறுகள் காரணமாக அவர் தொடங்கிய கிரியைகளுக்கு இடர் ஏற்படும் என்ற காரணத்தினால் பதினைந்து மாசிகங்களையும் ஒன்று சேர்த்து ஏகோதிஷ்ட முடிவில் செய்வது முறையாகும். இவைகள் இறந்தவரைக் குறித்துச் செய்யப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். இக்கிரியை இறந்தவரது உலகப் பற்றை நீக்கிவிடும் என்பது சமய நம்பிக்கை. ஆன்மா தாகம் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு சபிண்டிக்கு முன் செய்து முடிக்கும் கிரியை சோதகும்ப சிரார்த்தமாகும். இக்கிரியையின்போது நீர் நிறைந்த பாத்திர தானம் முக்கியமானதாகும். ஆப்திகம் என்பது வருட முடிவில் இறந்த திதியில் செய்யப்படும் விரிவான கிரியையாகும். முதல் வருட சிரார்த்தம் என இதனை அழைப்பர். அமரத்துவம் அடைந்த பெற்றோரின் ஞாபகர்த்தமாகவும் நன்றி மறவாமைக்காகவும் நல்லாசி பெறவும் வருடந்தோறும் இறந்த மாதத்திதியில் செய்யப்படுவது வருட சிரார்த்தமாகும். இவற்றைவிட புரட்டாதி மாதத்தில் மகாளய பட்சத்தில் இறந்த தந்தை, தாயார் ஆகியோருக்கு சிரார்த்தம் செய்வதும் விஷேடமாகும். இறந்த முன்னோர்க்காக பிள்ளைகள் சிரத்தையோடு செய்யும் காரணத்தினால் இக்கிரியை சிரார்த்தம் எனப் பெயர் பெறலாயிற்று. பிதிரரின் வழிபாட்டில் மங்களகரமான திக்குகள் மாறி வலப்புறத்தால் அமையும் விடயம் இடப்புறத்தால் அமையும். பிதிரர்களுக்குரிய திக்கு தெற்கு, எனவே அவர்களுக்குரிய கிரியைகள் தெற்குப்புறம் நோக்கியே செய்யப்படுகின்றது. இவ்வாறாக பூர்வ அபரக்கிரியைகள் மனிதனது ஆத்மீக சாதனைக்கும், ஈடேற்றத்திற்கும் உரியவையாக விளங்குகின்றன. சிறப்பாக மறுமையில் உயிரின் ஈடேற்றத்திற்கு அவை வழி வகுக்கும் முறை பற்றி ஒரு சில கிரியைகளின் விளக்கத்தின்மூலம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மனிதன் சமய நிலையில் எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் ஆத்மீக

*துன்பமான நேரத்தில் மனம் நம்பிக்கையை இழக்காதிருக்க வேண்டும்.*

சாதனையின் பாற்படும். எனவே வாழும் பொழுதே இம்மைக்கும், மறுமைக்கும் பயன் தரவல்ல ஆத்மீக சாதனைகள் பற்றி மனிதன் தனது வாழ்க்கையில் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டவனாகிறான். ஆத்மீக சாதனைக்குத் தடையாக அமைவது அறியாமையே ஆகும். அதனைத் திருத்தி சமயக் கிரியைகளின் உயர்நோக்கங்களை அறிந்து குருவின் வழிகாட்டலில் ஆன்ம ஈடேற்றத்திற்கு என நாம் அவற்றின் வழி நிற்பது சமயக் கடமையாகும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சிவத்திரு வ. குமாரசாமி ஐயா



ஆச்சிரம சுவாமிகளும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும்.

ஐயா அவர்கள் வலி. தெற்கு பிரதேச கலாச் சாரப்பேரவை நடாத்திய கலாச்சார விழாவில் (23.12.2016) "ஞான ஏந்தல்" எனும் விருதினைப் பெற்றுக்கொண்டமைக்காகவும், இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் "கலாபூஷணம்" விருதினைப் பெற்றுக்கொள்வதையிட்டும் சந்நிதியான் ஆச்சிரம சமூகம் பேருவகை கொள்கிறது.

ஐயா அவர்கள் நீடுழி காலம் வாழ்ந்து எமது சமயத்திற்கும் - தமிழுக்கும் பெரும் பணியாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல சந்நிதி வேற்பெருமானை வேண்டுதல் செய்து, ஐயா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## ஆன்மிகச் சிந்தனை

தீவிரமாகத் தியானம் செய்து, அல்லும் பகலும் அது குறித்து சிந்தனையில் மனம் ஈடுபாடு கொண்டிருந்தால் அவருக்கு அருளுவதற்காக தியான நிலையில் இறைவன் அவர் முன் தோன்றலாம். அதனால் அவருக்கு மனநிறைவு ஏற்படலாம். அவருக்குக் கடவுள் தரிசனம் கிடைத்ததா இல்லையா என்பதைப் பிறரால் சொல்லவோ, புரிந்துகொள்ளவோ முடியாது. ஆனால் தியானம் முடிந்தபிறகு அவர் நடந்துகொள்ளும் முறையிலிருந்து மற்றவர்களுக்கு ஒருவாறு புரியலாம். அவர் கண்டது, தான் கற்பனை செய்துகொண்ட கடவுள் உருவமே. ஆனாலும் அதனாலேயே அவருடைய சித்தத்தின் தன்மை மாறிவிடும். கடவுளின் தரிசனம் கிடைத்ததனால் அவருடைய பண்புகளே மாறி இருக்கும். அவருடைய வாழ்க்கையில் அன்பும் கருணையும் நிறைந்து விளங்கும். அந்தப் பண்பட்ட நிலையிலிருந்தே தெய்வீக சாந்நித்தியத்தை நாம் அவரிடம் புரிந்து கொள்ளலாம்.

*கர்வம் கொண்டிருப்பவனைக் கண்டு வெற்றித் திருமகள் விலகி விடுவாள்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. வேலாயுதம் குடும்பம் | வரணி | 5000. 00 |
| அ. சாம்பவமூர்த்தி | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் | 1மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| ப. லக்சுமிதேவி | நீர்வேலி | 2000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 1000. 00 |
| க. ரவீந்திரன் குடும்பம் | ஜேர்மன் | 10000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| திரு வர்ணநாதன் | கோப்பாய் | 1000. 00 |
| சி. குகதாசன் | ஆவரங்கால் | 2000. 00 |
| வ.க. சாம்பசிவம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| M. திலகநாதன் | சுவிஸ்லன்ட் | 10000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 3புட்டி பருப்பு |
| மு. மாலதி | கோப்பாய் | 10000. 00 |
| இ. குகதாஸ் | இருபாலை | 10000. 00 |
| மதனதீபன் ரிதுஷன் | லண்டன் (தோப்பு) | 5000. 00 |
| S. ராஜேஸ்வரி | பத்தமேனி | 1000. 00 |
| S. கோபிகா | புலோலி | 500. 00 |
| ச. செல்லப்பா | சிறுப்பிட்டி | 2000. 00 |
| ச. யோகாம்பிகை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| R. மணிவாசகம் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| A. கிருஸ்ணானந்தன் குடும்பம் | சுதுமலை | 2000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுண்ணாகம் | 1000. 00 |
| செ. செல்வரட்ணம் | சுழிபுரம் மேற்கு | 1000. 00 |
| சி. ஐங்கரன் | கொக்குவில் | 10000. 00 |
| T. கைலநாதன் | கனடா | 3000. 00 |
| S. பிரகாஷ் | கனடா | 5000. 00 |
| க. சிவராணி<br>லோ. பரணி<br>லோ. மங்களேஸ்வரர் | கோண்டாவில் | 2000. 00 |
| ப. சறோஜினிதேவி | கோண்டாவில் | 500. 00 |
| வே. இரத்தினசிங்கம் | மந்துவில் மேற்கு | 5000. 00 |
| ஏ. சுரேஸ் | புனிதநகர் | 1000. 00 |
| S. நடேசன் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |

*முயற்சி செய்துகொண்டே இருந்தால் வெற்றி ஒருநாள் நிச்சயம் கிடைக்கும்.*

| | | |
|---|---|---|
| க. சுந்தரேஸ்வரன் | பருத்தித்துறை | 5000. 00 |
| ச. ஆகாஷ் | கனடா | 10000. 00 |
| ப. விசயேந்திரன் | நோர்வே | 5000. 00 |
| சு. ஸ்ரீரஞ்சன் | நல்லூர் | 2000. 00 |
| பொ. பெரியசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பா. ராசலிங்கம் | இருபாலை | 2000. 00 |
| K. சுதாகரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ந. செல்லத்துரை | அளவெட்டி | 1000. 00 |
| அ. நிமலேந்திரன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| பா. தவனேஸ்வரி | கொழும்பு- 05 | 15000. 00 |
| திருமதி ஜனகா | கொழும்பு- 05 | 10000. 00 |
| சி. கானவி | கொழும்பு | 10000. 00 |
| M. சுந்தரலிங்கம் | சாவகச்சேரி | 5000. 00 |
| ந. சண்முகரட்ணம் | வல்வெட்டி | 5000. 00 |
| திருமதி சோதிராணி | பிரான்ஸ் (பத்தமேனி) | 5000. 00 |
| சன் கந்தையா குடும்பம் | கந்தரோடை 4மூடை நெல் | 5000. 00 |
| P. நாகநாதர் குடும்பம் | சிங்கப்பூர் | 10000. 00 |
| சி. சிவஞானப்பிள்ளை | லண்டன் | 10000. 00 |
| வே. தயாபரன் | அச்சுவேலி | 5000. 00 |
| பா. மயூரன் | காரைநகர் | 3000. 00 |
| சா. ரஜீபன் | கொடிகாமம் | 1000. 00 |
| செல்வி பா. ரதிவதனி | பருத்தித்துறை | 5000. 00 |
| ச. அஜந்தன் | அரியாலை | 5000. 00 |
| இ. சந்திரகோபன் கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கோ. பத்மநாதபிள்ளை | கொழும்பு | 1000. 00 |
| ச. தேனுஷா | சாவகச்சேரி | 5000. 00 |
| சந்நிதியான் அடியான் | அரியாலை | 5000. 00 |
| க. மகேந்திரன் | சாவகச்சேரி | 10k அரிசி |
| வ. சஹானா | கைதடி | 1000. 00 |
| ஸ்ரீ வினோதன் | ஊர்காவற்துறை | 10000. 00 |
| சீதா ரீச்சர் தாயார் நினைவு | உடுப்பிட்டி (கனடா) | 10000. 00 |
| கிரிதரன் நந்தினி | கனடா | 5000. 00 |
| திருமதி K. வேப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 100000. 00 |
| கா. தயாபரன் | கோண்டாவில் | 3மூடை அரிசி |
| பேராசிரியர் சிவசாமிமூலம் அ. சண்முகராஜா | லண்டன் | 20000. 00 |
| S. மிகுந்தலா (மருந்தாளர்) | கரவெட்டி | 2000. 00 |
| பா. தினேஷ் | உடுப்பிட்டி | 10000. 00 |

(தொடரும்...

*நாம் நம் செயல்களால் வாழ்கின்றோம். ஆண்டுகளால் அல்ல.*

# சந்நிதியான் ஆச்சிரமமும் சுவாமிகளும்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினதும் அதன் ஸ்தாபகர் "மோகனதாஸ்" சுவாமிகளினதும் சமய சமுதாய சேவைகள் பற்றிய ஒரு கண்ணோட்டம். சுவாமிகளின் அளப்பரிய தொண்டு முழுவதையும் அளவிட முடியாவிட்டாலும் ஒரு சிறு பங்கினையாவது அளக்கும் ஆசை. இது பாற்சமுத்திரம் முழுவதையும் பருக எண்ணிய பூனைக்குத் தோன்றிய ஆசையேயாம்.

செல்வச்சந்நிதி கோயிலைச் சூழ இடம்பிடித்திருந்த மடங்கள் பல பசிப்பிணியோடு வரும் அடியவர்களுக்கு அன்னதானப் பணியை மேற்கொண்டு வந்த நிலையில் யுத்தகால நெருக்கடியில் அழிக்கப்பட்டன. சந்நிதிக் கந்தன் உலாவரும் சித்திரத்தேரும் எரிக்கப்பட்டது. தென்மேற்கு மூலையில் தென்னைமரச் சோலையில் மயில்வாகன சுவாமிகள் அமைத்திருந்த ஆனந்தாச்சிரமமும் அழிக்கப்பட்டது. அதன் பின்னரே அவரது பிரதம சிஷ்யனான மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தை ஸ்தாபித்தார்கள். அங்கு தன் அன்னப்பணியுடன் நின்றுவிடாமல் கல்விப்பணி, மருத்துவப்பணி, முதியோர் பராமரிப்பு, சிறுவர் கல்விக்கு உபகரணங்கள், புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள் வழங்கல் என்றவாறு தொடர்கின்றன. மலையகப் பகுதி எங்கும் ஏறி இறங்கி மண்சரிவு அபாயத்தில் அகப்பட்ட மக்களுக்கு உதவியும் கல்விச்சாலைகளில் சைவமும் தமிழும் வளர உதவியும் உபகரணங்கள் வழங்கியும் இலவச சீருடைகள் கிடைக்கச் செய்தும் அறநெறிப்பாடசாலைகளை ஆலயம் சார்ந்து அமைத்து உதவியும் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கியும் பண்ணுடன் திருமுறைகளை ஓதப் பயிற்சி பெற்ற ஓதுவார்களை நியமித்தும் அவர்களது வேதனம் வழங்கலுக்கு வேண்டிய ஏற்பாடுகளிலும் சுவாமிகள் ஈடுபட்டிருப்பதுவும் கண்கூடு. இது பிற மதத்தினர் இலவசங்கள்மூலம் உடனடி வேலைவாய்ப்பு என்னும் பசப்பு மொழி மூலமும் மக்களை ஏமாற்றி மதமாற்றமும் மொழி மாற்றமும் செய்ய விரும்பும் மாயவலை விரிப்போரைத் தகர்த்தெறியும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா அவர்களது சமூக நலப்பணிகட்கு நிகரானது எனலாம். சிறிய வித்தியாசம் உளது. அஃது யாதெனில் நாவலர் பெருமான் "பேர்சுவல்" என்னும் கிறிஸ்தவ பாதிரியாரிடம் தொடர்பு உடையவராகவிருந்து விவிலிய வேதநூலாகிய பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்து உதவினார். ஆனால் எமது சுவாமிகளோ மனம், மொழி, மெய்யினால் அப்பழுக்கற்ற சைவராகவே வாழ்ந்து வருபவர். சைவம் சிவசம்பந்தமுடையது.

சைவ கலை கலாசாரம் சமயம் கல்வி என்பவற்றை விளக்கும் வகையில் 1998ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் "ஞானச்சுடர்" என்னும் சஞ்சிகையை ஆரம்பித்தார். அதன் முதற்பிரதி சிவகுரு கணேசலிங்கம் அவர்களது நெல்லியடி தமிழ்ப் பூங்கா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்

பட்டது. எழுதும் தாளின் தட்டுப்பாடு போன்ற குறைபாடுகளின் மத்தியிலும் மாதம் தவறாது 'ஞானச்சுடர்' மலரை வெளிக்கொணர்ந்த பெருமை மோகனதாஸ் சுவாமிகளுக்கே உரியதாகும். ஆச்சிரம சுவாமிகளின் சமுதாயப் பணிகளுள் மருத்துவசேவைப் பணியும் அன்னதானப்பணியும் மிகச்சிறந்த பணிகளாகும். சுவாமிகள் அரசியல் ஈடுபாடு அற்றவராக தூய சமூக சேவையாளராக திகழ்ந்து வருபவர்.

முதுபெரும் புலவர்களை மதித்து அவர்கள் சந்நிதியான்மீது பாடும் பாடல்களை ஞானச்சுடர் மலரில் பதிவு செய்து அவர்களைக் கௌரவித்து வந்துள்ளார். இவ்வகையில் முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் ஐயா அவர்கள் 101 அகவை பூவுலகில் வாழ்ந்து அமரத்துவம் பெற்ற புலவருக்கும் மோகனதாஸ் சுவாமிகளுக்குமிடையே ஏற்பட்ட தொடர்பு தெய்வீகமானதாகும்.

சுவாமிகள் பிறருக்கு உதவுதலும் சமுதாய சேவையே எனக் கருதுபவர். ஒருநாள் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கவென ஆசிரியர் ஒருவரது அழைப்பின் பேரில் பணிப்பாளரின் வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். பணிப்பாளர் வீட்டில் இருந்தும் மனைவிமூலம் "கந்தோருக்குப் போய்விட்டார்" என்று கூறிவிட்டார். கல்விப்பணிப்பாளர் உள்ளே இருப்பதை உணர்ந்துகொண்ட சுவாமிகளும் ஆசிரியரும் பக்கத்தில் இருந்த ஒழுங்கையில் நின்றார்கள். அப்போது குறித்த பணிப்பாளர் தமது வீட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வதைப் பார்த்துவிட்டு வீட்டுக்குச் சென்று மனைவியிடம் வினவ "அவர் போய்விட்டார் என்றல்லவா கூறினேன்" என்றார். "ஓம்! அம்மணி அவர் இங்கிருந்து இப்போதுதான் புறப்பட்டுச் சென்றதைப் பார்த்து விட்டுத்தான் வருகிறோம். நாங்கள் சென்று வருகிறோம்" என்று கூறிச் சென்றனர். அம்மணி வாய் அடைத்து நின்றார். ஆசிரியரின் பிரச்சினை கல்விப் பணிப்பாளர் இல்லாமலே தீர்க்கப்பட்டு விட்டது. பிறிதொருநாள் அதே கல்விப் பணிப்பாளர் தமது தேவை ஒன்றின்பொருட்டு மோகனதாஸ் சுவாமிகளை நாடி வந்தார். சுவாமிகள் இன்முகம் காட்டி தேநீர் வழங்கி அவரது பிரச்சினையையும் சுமூகமாக முடித்து வழியனுப்பி வைத்தார்கள்.

சுவாமிகளுக்குக் கோபம் வந்து நாம் பார்த்தது கிடையாது. தம்மை எப்போதும் செல்வச்சந்நிதியான் வழிநடத்துகிறார் என்பார். ஒருமுறை கதிர்காம பாதயாத்திரையாளர் வேல்சாமி தலைமையில் செல்பவர்களுக்கு வழிச்செலவுக்கு வழங்க பணம் இல்லாது கலங்கியபோது எதிர்பாராமற் கிடைத்த ஒரு அன்பளிப்பு பாதயாத்திரைக் குழுவினருக்குப் பேருதவியாக இருந்ததுடன் சுவாமிகளின் கலக்கமும் தீர்ந்தது.

முன்பு சுவாமிகள் சிவ மகாலிங்கம் போன்ற விரிவுரையாளர்களைத் தேடி ஓடிச் சென்று கட்டுரைகள் பெற்று வந்து பிரசுரித்த நிலையில் தற்போது கட்டுரையாளர்களும் வாசகர்களும் பெருகியுள்ளமை சுவாமிகளின் சமுதாய மனப்பாங்கை படம்பிடித்துக் காட்டுகிறது. இந்நிலையில் 1998ஆம் ஆண்டு தைமாதம் வெளிவந்த முதல் பிரதியில் பல்மொழி வித்தகர் சிவ மகாலிங்கம் ஐயா அவர்களின் "திருமுறைச் செல்வம்" என்னும் தொடர் வாசகர்களின் பொக்கிஷம் எனலாம்.

பதுளையிலே மண்சரிவில் மக்கள் உயிரிழந்தமை கேட்டு ஓடிச்சென்று அஞ்சலி செய்து தம்மாலான உதவிகள் பலவற்றையும் ஆற்றியதுடன் நின்றுவிடாமல் மாதந்தவறாத தனது மலையகப் பயணத்தின்மூலம் பல்வேறு நலத் திட்டங்களையும் சுவாமிகள் செய்து வருவது அனைவரும் அறிந்ததொன்று.

வெள்ளிக்கிழமை மாத்திரமன்றி மற்ற நாட்களில் தரவு பார்த்தல், விலாசமிடுதல்,

தபாலில் சேர்த்தல் ஆகிய பணிகளையும் சுவாமிகளே செய்துவருவது கண்கூடு. மோகன தாஸ் சுவாமிகளின் சமுதாய சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக வட இலங்கை சுதேச வைத்திய சபையினரால் "லங்கா இரத்தின ஜோதி" என்னும் விருதுக்குரிய பத்திரத்தை இலங்கைப் பாராளுமன்றத்தின் பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்கா ஆச்சிரமத்துக்கே வருகை தந்து கையளித்துக் கௌரவித்தமை மோகனதாஸ் சுவாமிகளின் சமூகநலத் தொண்டிற்குக் கிடைத்த மிக உயரிய சான்றாகும்.

மனதினால்கூட நினைக்கமுடியாத வட இந்திய யாத்திரைக்கு எம்மையெல்லாம் அழைத்துச் சென்று படகில் ஏறமுடியாது தவித்த முதியவர்களாகிய எம்மைப் போன்ற பாட்டியர், பாட்டன்மாரை கடல் அலையில் கொந்தளிக்கும் கடலூடு கைலாகு கொடுத்துத் தூக்கிப் படகில் ஏற்றி அழைத்துச் சென்று பஞ்சலிங்க தரிசனம் காட்டியதோடு அதன் அதிசய நிலையையும் கண்டின்புற வைத்தார்கள். அதாவது பகல் ஒரு மணி வரை வெட்ட வெளியாய் சமதரையாயிருக்கும் வழியாக நடந்து சென்று பூசை வழிபாடாற்றிய பூசகர்களுக்குத் தட்சணை தான தர்மம் பிதிர்க்கடன்கள் செய்து பூசகர்களும் பக்தர்களும் வெளியேறியதும் கடல்நீர் பெருகிப் பஞ்சலிங்கத்தை மூடிக் கூம்பு மாத்திரம் தெரியும் அதிசயம் அளவிடற்பால தொன்றே.

எமது குழுவினர் சற்றுத் தாமதப் பட்டதால் அவசர அவசரமாக பூசை வழிபாட்டினை முடித்துக்கொண்டு திரும்பவே கடல்நீர் உயரத் தொடங்கிவிட்டது. கரையேறும் போது கடல் நீர் தொடையளவு உயர்ந்து விட்டது. வயது போனவர்களின் கைகளைப் பிடித்து அணைத்தபடி ஒருவாறு கரை சேர முடிந்தது. பகல் ஒரு மணிவரை சமதரையாகவும் அதன்பின்பு திடீரெனக் கடல்நீர் உயர்வதான அதிசயமான சம்பவமும் இன்று வரை விடுவிக்கமுடியாத புதிராகவே உள்ளமை கண்கூடு.

இவற்றில் இருந்து ஒருவாறு விடுபட்டு விடுதிக்கு வந்து சிரம பரிகாரம் செய்து உணவுண்டு உறங்கி மறுநாட்காலையில் "மிலிற்றரி" ஆஞ்சநேயரைத் தரிசிக்க இருந்தோம். அ∴தென்ன மிலிற்றரி ஆஞ்சநேயர் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? அல்லது ஆஞ்சநேயர் மிலிற்றரியில் சேர்ந்து விட்டார் என்று கருதுகின்றீர்களா? இவையெல்லாம் தவறாகும். இராணுவ காவலரணுக்குள் இருந்ததினால் மிலிற்றரி ஆஞ்சநேயர் என்று பெயர் பெற்றார். அவரையே வழிபடுவதற்காகச் சென்றோம். வழிபாட்டிற்காகச் சென்றிருந்தவர்களுக்கும் சகல வசதிகளையும் செய்துகொடுத்திருந்தனர். நடக்கமுடியாத முதியவர்களுக்கு இலவசமாகப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்துகொடுத்திருந்தார்கள். அவ்வழிபாட்டினை இனிது முடித்துக் கொண்டு அடுத்து வீர பராக்கிரம பைரவரையும் வழிபாடு செய்து விடுதிக்கு வந்து சேர்ந்து சிரம பரிகாரம் மேற்கொண்டு உணவு உண்டு உறங்கி எழுந்து மறுநாள் அருள் தரும் ஆனந்த மனோகரியம்மன் ஆலய வழிபாட்டுக்குச் சென்றிருந்தோம். அங்கு அடியவர் யாவரும் அர்ச்சனையுடன் வரிசையில் காத்திருந்தனர். வழிபாட்டாளர்களை நெறிப்படுத்தும் குழுவினர் வழிபாட்டாளர்களை மூன்று வரிசையாக ஒழுங்கு செய்தனர். அதில் மத்திய வரிசையில் மோகனதாஸ் சுவாமிகள் வெறுங்கையராய் நின்றாராம். நின்றவர் அம்பிகையிடம் "எனக்கு என்ன தரப்போகிறாய்" என்று மனதில் நினைத்தபடி நின்றாராம். சிறிது நேரம் கழியப் பூஷகர் ஒருவர் ஆவேசம் கொண்டு எழுந்து அம்பாளுக்கு அருகே சென்று-

*நன்றாகப் பேசுவது நல்லது. நன்றாக செயற்படுவது அதனிலும் நல்லது.*

பெற்றுவந்த பொருளை சுவாமிகள் வாங்கிப் பார்த்து அதிசயித்தாராம். அவருக்கு அம்மன் பட்டும் அதனால் சுற்றப்பட்ட வெள்ளிக் கிரீடமும் கிடைத்ததாம். அதனைச் சுவாமிகள் கொண்டுவந்து ஆச்சிரம அம்பிகையின் முடிமீது சாத்தி வழிபாடாற்றி வருகிறார்கள்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினதும் மோகனதாஸ் சுவாமிகளினதும் சமய சமூக கல்வி கலாசார சேவைகளோ பரந்த பாற் சமுத்திரம். அதில் நான் கிள்ளியதோ சிறு துளியாகும்.

அன்னதானமுடன் ஆதார வைத்தியமும்
சந்நிதியான் கருணை யுடன் சைவமும் செந்தமிழும்
சொன்னபடியே மோகன தாஸ் சுவாமிகளின் சமுதாய சேவையதன்
கன்னல் கனிகலந்த தொண்டுநிறை பாயாசம்.

## நல்லைநகர் நாவலர்

செந்தமிழோ டாதிச் சிவநெறியின் சீர்பரப்ப
முந்தையோர் செய்தவத்தால் நம்நிலத்தில் - எந்தையே
வந்துதித்தாய் நாவலனாய்... வந்தமதத் தார்தளர்ந்து
சிந்தை மயங்கச் சினந்து.

செந்தமிழோ டாதிச் சிவநெறியின் சீர்பரப்ப
உந்தனுத்தி யோகம் முதல்அத்த னையும்விட்(டு)
இந்தவுல கில்வந்தே யின்னொருவர் செய்யாத
விந்தை புரிந்தாய் மகிழ்ந்து.

செந்தமிழோ டாதிச் சிவநெறியின் சீர்பரப்ப
செந்தமிழ்மண் தாய்நாட்டிற் பட்டகடன் - வந்தவர்
எந்தநாள் செய்யினும் எள்ளளவே யாகுமா(று)
எந்தையே செய்தாய் பிறந்து.

செந்தமிழோ டாதிச் சிவநெறியின் சீர்பரப்ப
நந்தா விளக்கனைய நாயகனே - சொந்தநலன்
விட்டிங்கு நீசெய்த துங்கமான சேவைநீ
துஞ்சினும் செய்யு துயர்வு.

செந்தமிழோ டாதிச் சிவநெறியின் சீர்பரப்ப
அந்தநாள் நீயிருந்தாய் நல்லையில் - இந்தநாள்
உந்தன் உயர்வுபெற் றேஉயர்ந்தோர் இல்லையே
எந்தநாள் நீவருவாய் யிங்கு.

-நா. நவராஜ்-

*இளமையில் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வையும் முதுமையில் சோகத்தைத் துடைக்கும்.*

(கட்டுரைத்தொடர் - 26

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் திருமூலர் - பாகம்- 03

மனிதனை மனிதனாக்குவதற்குச் சில அடிப்படையான மனப் பயிற்சிகள் இன்றி யமையாதவையாக உள்ளன. அந்தப் பயிற்சி களை மனித சமுதாயத்திற்கு வழங்கி, மனிதர்களை மனிதர்களாக்கிப் பின் அவர் களை வானவர்களாகவும் உயர்த்துகின்ற உயர்ந்த நோக்கத்திலே எழுந்த பேர் இலக் கியங்களே தமிழ் மொழியில் உள்ள சித்தர் நூல்கள். சித்தர் இலக்கியங்கள் மனித உடலோடு வாழுகின்ற மாக்களை மனிதப் பண்புள்ள மக்களாக மாற்றி, பின்னர் அவர் களுக்கு அமரநிலை தரவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் எழுந்தவையாகும்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்று தவயோகி திருமூலர் பரந்த நோக்கத்துடன் பாடுகின்றார். மனித உடம் புக்குள்ளே இறையருளை நுகர்ந்துகொண்ட ஒரு சித்தர் தான் அனுபவத்தில் உணர்ந்த அந்தப் பேரின்பப் பேருண்மையை உலகம் முழுவதும் காணவேண்டும் என்று விரும்பி னார். அந்த ஆசையாகிய தெய்வப் பெருங் கருணையில் இருந்து எழுந்ததே திருமூல ருடைய திருமந்திர நூல். சித்தர் இலக்கியங் களிலே ஒரு கலங்கரை விளக்கமாக உயர்ந்து நிற்பது திருமந்திரம் என்பது அறிஞர் பெருமக்கள் அனைவரினதும் ஏகோபித்த முடிபாகும்.

பாரத நாட்டிலே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மலைகளிலும், வனங்களிலும், குகைகளிலும் தவம் செய்து ஆன்மநேயம் கூடி, அரிய சமாதி நிலையிலே இருந்து, எல்லையற்ற பரம்பொருளின் பேரின்ப அமுதை உண்டு, அமரர்களாக வெளிவந்து மக்களைத் தெய்வ நெறியிலே வழிப்படுத்திய வர்களே சித்தர்கள். இமயமலையிலும் பொதிகை மலையிலும் இன்றைக்கும் அந்த மரபு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அஃது அணையாத தீபம். நந்தாவிளக்கு, புயலும், மழையும், வெயிலும், பனியும் அந்த ஒளி யைத் தொடுவதில்லை. அது காலனைக் காலால் உதைத்து, கடவுட் தன்மையோடு நிலையாக ஒளிவீசி நமது சமுதாயத்தைப் பாதுகாத்து வருகிறது. அந்த ஒளிவீச்சே சித்தர்களின் இலக்கியமாகும்.

உடம்பின்மூலம் இறைவனை வழி படுகின்ற ஞானநெறிக்கு நம்மை அழைத்துச் செல்வதற்கு ஆரம்பப் பயிற்சி தருவதற் காகவே நம்முடைய முன்னோர்கள், நம் நாட்டு ஞானிகள் நாடெங்கும் கோயில்களை நிறுவி அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்ப தெய்வத்தை வழிபடும் முறைகளையும் வகுத்துத் தந்தார்கள். தமிழ் நாட்டில் எழுந் துள்ள பெரும் கோயில்கள் எல்லாம் மகான் களும் சித்தர்களும் நமக்காக நிறுவித்தந்த ஆன்ம விடுதிகள், தெய்வ நிலையங்கள். கலையழகும் தெய்வ சாந்நித்தியமும் இரண் டறக் கலந்த தபோவனங்கள்.

நமது நாட்டுச் சித்தர்கள் எல்லோரும் ஆழ்ந்த தெய்வ பக்தி நிரம்பியவர்கள். இவர் கள் பொது மக்களுக்காகத் தெய்வ சாந்நித் தியத்தைப் புறவடிவிலே காட்டி இயங்கச் செய்த புற அமைப்புக்களே நம் நாட்டுக்

*கட்டுப்பாடான சீரான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும்.*

கோயில்கள். இவை அனைத்தும் சீராக ஓங்கித் தவறாது வளர்ந்தால்த்தான் சமுதாயத்தின் ஆன்மா செம்மைப்படும் என்ற இரகசியத்தை உணர்ந்திருந்தார்கள். கோயில்களில் பூசனை முறைகள் தவறாமல் நடாத்தப்பட வேண்டும் என்பதில் திருமூலர் போன்ற மகான்களுக்கு அளவில்லாத கவலையும் ஆர்வமும் இருந்துள்ளது என்பதை அவருடைய பாடல்களில் இருந்து அறியமுடிகிறது.

சிவாலயங்களில் நித்திய நைமித்திக கிரியைகளுக்கு முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டிற்கும் மக்களுக்கும் பல தீமைகள் ஏற்படும். நாட்டை ஆளும் அரசனுக்குத் தீங்குகள் ஏற்படுவதோடு மழைவளமும் குறையத் திருட்டுக்களும் நாட்டில் அதிகரிக்கும் எனத் தனது குருநாதராகிய திருநந்திதேவர் தனக்கு எடுத்துரைத்தார் என்கிறார் திருமூலர்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே.

ஆன்மாக்கள் தானாக எதையும் அறியும் தன்மையில்லாதவை. பொறிகளின் துணையினாலேயே அறிவைப் பெறுகின்றன. பொறிகளின் துணையில்லாமல் அறிவைப் பெறும் ஆன்மாவை அறிவான பொருள் என்று கூறுவது பொருந்தாது என்பதைப்

"பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர் நன்றற"

எனத் திருவருட்பயன் விளக்குகிறது. பொறிகளின் துணையினால் ஆன்மா பெறும் அறிவினைத் தர்ம பூத ஞானம் என இராமானுஜ வேதாந்தி குறிப்பிடுகின்றார். குறை அறிவு என்பது இதன் பொருளாகும். ஆனால் இந்தக் குறை அறிவின் துணையோடு ஆன்மா பூரண ஞானத்தைப் பெற முயற்சி செய்யலாம் என்கிறார் இராமானுஜர்.

அறிவற்ற மூடர்கள் புலன்களை அடக்குங்கள் என்று ஓயாது கூறுவார்கள். வானுலகத் தேவர்களால் கூட ஐம்புலன்களையும் அடக்கமுடியாது. ஐம்புலன்களையும் அடக்கிவிட்டால் உடம்பு உணர்வேதும் இல்லாத உணர்ச்சியற்ற மரக்கட்டைபோலச் சடம் ஆகிவிடும். ஐம்புலன்களையும் சிவ சிந்தனையிலே செலுத்தியே ஞானத்தைப் பெறவேண்டும். அறிவற்ற கல், மரம்போலச் சடமாகிவிடுவதே அசேதனமாகும். புலன்களை அடக்காமல் அறிவு வழியிற் செலுத்தி இறையருளைப் பெறுதல் வேண்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

அஞ்சுமடக் கடக்கென்பர் அறிவிலார்
அஞ்சுமடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சுமடக்கில் அசேதன மாமென்றிட்டு
அஞ்சு மடக்கா அறிவறிந்தேனே.

புலனடக்கம் என்பது அவற்றைத் தீயவழியிற் செலுத்தாது தூய வழியிற் செலுத்துதலே ஆகும். இவ் உண்மை திருவருள் வயப்பட்டவர்களுக்கே தெரியவரும். ஏனையோர் பொறி புலன்களைச் செயலறச் செய்தலே அடக்குதல் என்பர். இறை சிந்தனையோடு வாழ்பவர்களுக்கு ஐந்து புலன்களும் ஞானத்தை உணர்த்தும் கருவிகளாகச்

*நீங்கள் நம்பிக்கையோடு உழையுங்கள். உங்கள் ஆசைகள் நிறைவேறக் காண்பீர்கள்.*

செயற்படுகின்றன. பிரபஞ்ச வாழ்விலே அழுந்தி வாழ்பவர்களுக்கு இந்த ஐந்து புலன்களும் கள்ளப்புலன்களாகவே காணப்படுகின்றன.

உடம்போடு பொருந்தியிருக்கும் ஐம்பொறிகளையும் ஐந்து சிங்கங்களாகத் திருமூலர் உருவகிக்கின்றார். இந்த ஐந்து சிங்கங்களும் தமது விருப்பத்திற்கு ஏற்ப வெளியிலே போய் இரை தேடிவிட்டுப் பின் தமது இருப்பிடம் வந்து சேர்ந்துவிடும். இந்த ஐந்து சிங்கங்களின் பற்களையும் நகங்களையும் அறுத்து எறிந்துவிட்டால் அவை தனது பலத்தை இழந்துவிடும். அதேபோல மனிதனின் ஆசைவயப்படுத்தும் பொறிகளை அடக்கிவிட்டால் அவை இறையருளைப் பெற்றுவிடும்.

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும் போய் மேய்ந்து தம் அஞ்சு அகமே புகும்
அஞ்சின் உகிரும் எயிரும் அறுத்திட்டால்
எஞ்சாதிறை வனை எய்தலுமாமே.

ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப இறைவன் வினைப் போகத்தைத் தந்தருளுவான். வருந்தி அழைத்தாலும் நமக்கு வந்துசேர முடியாதன நம்மை வந்து அடைய முடியாது. வந்துசேர வேண்டிய பொருள்களை நாம் எவ்வாறு வெறுத்து ஒதுக்கினாலும் அவை நம்மைவிட்டுப் போகாது. இவ் உண்மையை உணராமல் மாந்தர்கள் ஏக்கமுற்றுக் கவலைப் பட்டு உள்ளம் புண்பட்டு மடிகிறார்கள் என்பதைத் தமிழ்மூதாட்டி ஔவையார் நல்வழிப் பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா - இருந்து ஓங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

இன்பப் பொருள்களின் சேர்க்கையும் நீக்கமும் ஆவன அழிவன என்றும், வினைகளின் சேர்க்கையும் நீக்கமும் புகுவன போவன என்றும் திருமந்திரம் குறிப்பிடுகிறது. ஆகவேண்டியன ஆகும்; போகவேண்டியன போகும்; வரவேண்டியவை வரும். இறைவன் ஆன்மாக்களுக்கு இவை எல்லாவற்றையும் கூட்டி வைத்துவிட்டுத் தான் சாட்சியாக மட்டும் நிற்பான். ஒவ்வொரு வரின் ஆன்ம பக்குவத்திற்கும் ஏற்பக் கருணையைப் பொழிந்தருளும் பேரருளாளனாக இறைவன் திகழ்கின்றார்.

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலின் பேர் நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளையோனே.

மானுடப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரிடமும் தெய்வீக இயல்பும், மிருக இயல்பும் இணைந்தே காணப்படுகின்றன. சிறிய வயதிலிருந்து தெய்வீக இயல்புகளை நாம் நமது அகத்திலே வளர்த்து வருவோம். அதனால் நம்மிடம் சிவம் பிரகாசிக்கும். மிருக இயல்பு களுக்குத் தீனிபோட்டு வளர்த்தால் அகம் குப்பைத்தொட்டி ஆகிவிடும். நமது செயல்கள் அனைத்தும் விபரீதமாகவே முடியும். மானுடச் சட்டைபோட்ட மிருகங்களாக நாம் மாறி விடுவோம்.

*உனது விடுதலைக்கு வழி பிறரிடம் இல்லை. அது உன்னிடந்தான் உள்ளது.*

ஒவ்வொருவருடைய வாழ்வின் உயர்விற்கும் தாழ்விற்கும் அவரவரே காரணமாக அமைகின்றார்கள் என்பதைத் "தீதும் நன்றும் பிறர்தர வாரா" எனப் புறநானூறு கூறுகிறது.

"தன்னைச் சிறுவனாகச் செய்வானும் தானே
தன்னை இறைவனாகச் செய்வானுந் தானே"

என அறநெறிச் சாரம் என்ற நூல் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவரும் செய்த வினையை அவரவரே நுகரவேண்டும். செய்த வினை பிறர்க்கும் போகாது; பிறவற்றாலும் கழியாது; ஒவ்வொருவருடைய நாளாந்தச் செய்கையும் நித்திய தெய்வீகத் துலாக்கோலில் நிறுத்தப்படுகிறது என்றே இந்து சமயத்தின் கர்மநியதிக் கோட்பாடு கூறுகிறது.

தனக்கான விரோதியும் உற்ற சிநேகிதனும் தானே ஆவான். தனக்கு உரிய மறுமைப் பயனும் இம்மைப் பயனும் தன்னாலேதான் தமக்கு ஏற்படுகிறது. தான் செய்த புண்ணிய பாவச் செயல்களின் பயனை அனுபவிப்பவனும் தானே ஆவான். தன்னுடைய தலைவிதியை நிர்ணயிக்கும் தலைவனும் தானே ஆவான் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தனக்கு வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே"

பிரபஞ்ச வாழ்க்கையில் மயக்கம் கொண்டு அலையும் ஆன்மா பிறவிப்பிணியாகிய சுழியில் அகப்பட்டு அல்லற்படுகிறது. தனு, கரண, புவன, போகங்களால் ஏற்படும் பாசமே மயக்க அறிவினால் மெய்ப்பொருளாகத் தோன்றுகிறது. என் இயல்பை விசாரித்து நன்கு அறிந்தபின் மெய்யாகத் தோன்றிய பாசவினைகள் எல்லாம் பொய்யாகத் தெரிகிறது. ஞானா சக்தியின் துணையினால் என் இயல்பை அறியும் அறிவை அறிந்தபின் எல்லாம் நின் செயலாகவே தெரிகிறது எனத் திருமூலர் கூறுகின்றார்.

என்னை அறிந்திலன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலன்
என்னை அறியும் அறிவை அறிந்தபின்
என்னை விட்டு உன்னை உசாவுகின்றேனே.

ஆசைதான் உலகில் மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம். உலக வாழ்க்கையில் ஆசையின் வசமாகிப் பல மனிதர்கள் துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள். புலன்களின் வழியே மனத்தை ஓடவிட்டு இன்னல்போலத் தோன்றி இன்பம் விளைவிக்கும் சிற்றின்பக் கேளிக்கைகளிலே ஈடுபடுகிறார்கள். பிறப்பு இறப்பு ஆகிய சுழற்சியில் இருந்து இவர்களால் விடுபட முடிவதில்லை. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப் பஞ்சப் புலன்களில் இருந்து தோற்றம்பெறும் தன்மாத்திரைகளின் கவர்ச்சிக்கு உட்பட்டு அல்லற்படுகின்றார்கள். தன்மாத்திரையாகிய கவர்ச்சியை விளாங்கனி என்று உருவகம் செய்வது சித்தர்களின் மரபாகும். புற இச்சைகளின் வழியே ஐம்புலன்களின் பிடியில் ஆன்மா அகப்படுவதைக் கள்ளவழி எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

கள்ள வழியில் விழுந்த விளாங்கனி
கொள்ளச் சென்றனவர் குழியில் விழுந்தனர்

தெள்ளிய ஞானி தெளிவுறக் கண்டபின்
பிள்ளைகள் ஐவர் பிதற்றொழிந்தாரே.

விலங்குகளையும் பறவைகளையும் உருவகமாகக் கொண்டு தத்துவக் கருத்துக்கள் பலவற்றைத் திருமந்திரம் விளக்குகிறது. கூகை, (ஆந்தை) பாம்பு, கிளி, பூஞை, (பூனை) நாகை, பூழ் (கானாங்கோழி) என்பன உருவகமாகக் கூறப்படுகின்றன. ஒருகால் அறிவு விளங்காமையும் ஒருகால் அறிவு விளங்கலும் பெற்றிருப்பதால் ஆன்மாவைக் கூகை (ஆந்தை) எனக் குறிப்பிடுகின்றார். விடமுண்டவன் மயங்கி ஒன்றும் தோன்றாமல் கிடத்தல் போல ஆணவ மலத்தில் அழுந்தி ஆன்மா மயங்கிக் கிடத்தலால் ஆணவத்தைப் பாம்பு எனவும் மகிழ்ச்சியூட்டுதலால் நல்வினையைக் கிளி எனவும், அருவருப்பு முதலிய குணங்கள் உள்ளமையால் பூஞை (பூனை) எனவும், அற்ப உணவை விரும்புவதனால் சிற்றறிவை நாகை எனவும், பயன் உள்ள இடத்திலே அதனை நுகரச் செல்வதினால் அந்தக்கரணத்தைப் பூழ் எனவும் திருமந்திரம் குறிப்பிடுகிறது. இருட்டை விரும்புகிற பறவை ஆந்தை அல்லது கூகை. ஆகையால் சித்தர்கள் அஞ்ஞானத்தைக் கூகை என்று அழைப்பார்கள். காமமாகிய பாம்பும், தர்மமாகிய கிளியும், அதர்மமாகிய பூனையும், சிற்றறிவாகிய நாகணவாய்ப் பறவையும், குரோதியாகிய பூழும் (கானாங்கோழி) உடம்பைச் சுற்றியுள்ள மனமண்டலமாகிய இடத்தில் வாழ்கின்றன. நாகையாகிய சிற்றறிவைக் கூகையாகிய ஆன்மா சேர்வதால் கூகையைக் கண்டு நடுநடுங்கி எலி கதறுவதைப் போலச் சீவான்மா துன்பத்தில் புலம்புகிறது.

கூகையும் பாம்புங் கிளியொடு பூஞையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுகலுறுதலுங்
கூகையைச் சுண்டெலி கூப்பிடுமாறே.

மானுடச் சட்டை தாங்கி வாழ்கின்ற மனிதருடைய வாழ்வு எல்லைப்படுத்தப்பட்டது. இந்த மண்ணில் வாழக் கிடைத்த காலத்தை மனிதர்கள் அனைவரும் சரியாகப் பயன்படுத்த வேண்டும். எடுத்த உடலில் உயிருள்ளபோதே உடல் நிலையாமையை உணர்ந்து உயிர்க்கு உறுதிபயக்கும் இறைவனின் ஞானத்தைப்பெற முயற்சி செய்தல் அவசியமாகும் என்கிறார் திருமூலர். இறைவனின் திருவருள் கிடைத்துவிட்டால் பாவங்கள் நீங்கிவிடும். சொல்லில் வழுவின்றி இறைவனை ஏத்துங்கள். அவ்வாறு ஏத்தினால் ஒப்பிட்டுக் கூறமுடியாத சிவன் சுயசோதியாக அகத்திலே பிரகாசிப்பான் எனத் திருமந்திரம் கூறுகிறது.

நிற்கின்ற போதே நிலையுடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழித்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன்றிலாத மணிவிளக்காமே.

இமயமலையிலிருந்து பொதிகை மலைவரை பல நூறு ஆண்டுகளாக எத்தனையோ பல சித்தர்கள் வனங்களிலும் குகைகளிலும் மலை முகடுகளிலும் அலைந்து திரிந்து தவம் செய்து பல பேருண்மைகளைக் கண்டு, மாணவர்களுக்குக் கற்பித்தார்கள். இவை குரு சிஷ்ய பாரம்பரியத்தில் செவிவழியாகப் பேணப்பட்டு பின்பு ஏடுகளிலே எழுதப்பெற்றுச் சித்தர் இலக்கியமாக நமக்குக் கிடைத்திருக்கிறது.

*இச்சையும் விருப்பமும் அறிவின் எதிரிகள்.*

இந்தச் சித்தர் பரம்பரையிலே தவயோகி திருமூல நாயனார் மிகவும் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளார். சித்தர் பரம்பரையின் மூலவராகத் திருமூலரையே தாயுமான சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இவரைப் போலவே அகத்தியர் போன்ற வேறு பல சித்தர்களும் தாங்கள் வாழ்ந்து கண்ட அனுபவங்களை எல்லாம் தமது மாணவர்களுக்கு உணர்த்தி வைத்துள்ளார்கள். திருமூலரும் தாம் இயற்றிய திருமந்திரத் தொடக்கத்திலே நந்தியெம் பெருமானிடமிருந்து தாம் ஞானம் பெற்றதையும் தம்மோடு மாணவர்களாக வேறு சிலர் ஞானம் பயின்றதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடெண் மருமாமே.

எனத் திருமந்திரம் இதனைக் குறிப்பிடுகிறது.

(தொடரும்...

# குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 17 | தை | 04 | செவ்வாய் | சண்டேசுரர் |
| ஜனவரி | 21 | தை | 08 | சனி | தாயுமான சுவாமி<br>திருநீலகண்டர் |
| ஜனவரி | 26 | தை | 13 | வியாழன் | நயினாதீவு முத்துக்குமாரசாமி |

## ஞானச்சுடர்
## சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2017ஆம் ஆண்டுக்கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

*புத்தகங்களின் தோற்றம் உள்ளத்திலிருந்து கவலைகளைப் போக்குகிறது.*

**தமிழகத் திருக்கோயில் வரிசை:**

# காஞ்சி - குமரகோட்டம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

– வல்வையூர் அப்பாண்ணா –

*"கோவில் நகரம்" என வர்ணிக்கப்படுகின்ற "காஞ்சிபுரம்" எண்ணற்ற கோவில்களைக் கொண்ட அழகிய நகரமாகும். இந்நகரில் ஒன்பது பெரிய கோவில்களும், எண்ணற்ற சிறிய கோவில்களும் உள்ளன. பல்லவர் ஆட்சிக்காலம் தொடங்கி ஒவ்வொரு நூற்றாண்டிலும் கட்டப்பட்ட பல கோவில்களையும் நகர எல்லைக்குள்ளேயே தரிசிக்க முடிகின்ற வாய்ப்பானது கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். காஞ்சிக் கோவில்கள் பல நூற்றாண்டுகளின் தொழில்நுட்பம், கட்டிடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றினை இன்றும் பறைசாற்றி நிற்கின்றன.*

*காஞ்சி "குமர கோட்டம்" திருக்கோவிலானது அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு மேற்குத் திசையிலும்- சங்கர மடத்திற்குத் தெற்குத் திசையிலும் அமைந்துள்ளது. ராஜகோபுரத்துடனான நுழைவுவாசல் கொண்ட இக்கோவில் சந்நிதியானது மேற்கு நோக்கியபடி உள்ளது.*

*"ஓம்" எனும் பிரணவத்தின் பொருளுரைக்க முடியாத பிரம்மனைச் சிறையிட்டான் முருகன். பின்னர், நான்முகனைப் போன்று உருத்திராட்ச மாலை- கமண்டலம் கொண்டு படைப்புத் தொழிலைத் தானே பார்த்து வந்த முருகப்பெருமான், அதே தோற்றத்திலேயே மூலவராக அமர்ந்திருக்கும் திருக்கோவில்தான் காஞ்சியின் "குமரகோட்டம்". இது தொடர்பாக மாதவச் சிவஞான முனிவர் அருளிச் செய்த காஞ்சி புராணப் பாடல் இது:*

குன்ற வில்லிஅரு ளாற் கலை எல்லாங் கோதறத் தெளித லுற்றனை அன்றே,
ஒன்றும் அக்கலைகள் முன்னுற என்னே ஓதும் அக்கரம் அதன் பொருள் யாதோ,
இன்றெ னக்கீது விளம்புதி என்றான் ஏட விளங்கும்மல ராளி இறைஞ்சி

மேலும்,

புன்னிலையன் சிறிதேனும் உணர்ந்திலான் தருக்குமிகப் பூண்டான் கண்டீர்
துன்னரிய சிறையின்கண் மற்றிவனைப் புகுத்தும் என வெகுண்டு சொல்லி
தன் வரைப்பில அலரோனைச் சிறைப் படுத்தித் துலகமெலாந் தானே தோற்றும்
இந் நிலைமைத் தலை நின்றான்.....

-குமரகோட்டப் படலம்-

*18 புராணங்களில் ஒன்றான "கந்தபுராணம்" இங்குதான் அரங்கேற்றப்பட்டது. இக் கோவிலில் பணிபுரிந்து வந்த கச்சியப்பச் சிவாச்சாரியார் அவர்களைக் கொண்டு, "திகட சக்கரம்" என அடியெடுத்துக் கொடுத்து, கந்தபுராணத்தை அரங்கேற்றியவேளை எழுந்த சந்தேகங்களையும் முருகனே தீர்த்தும் வைத்தான். கந்தபுராணம் அரங்கேறிய குமரகோட்டத்து மண்டபம் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாயினும் இன்றும் இம் மண்டபம் நல்ல நிலைமையில் உள்ளமையை நாம் நேரில் காண முடிகிறது.*

*மனிதனுக்குத் துணிச்சலைப்போல உலகில் உண்மையான நண்பன் வேறு யாருமில்லை.*

காஞ்சி குமரக்கோட்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிமீது அருணகிரிநாதர் 44 திருப்புகழ் பாடியுள்ளார். "கச்சிபதி சொக்கப் பெருமாளே", கச்சியில் நிற்கும் பெருமாளே", கச்சிக் குமரப் பெருமாளே" என ஒவ்வொரு திருப்புகழின் இறுதி வரியிலும் பல்வேறு விதமாகவும் அருணகிரிநாதர் குறிப்பிடும் "கச்சி" என்பது காஞ்சிபுரத்தையே குறிக்கிறது. மேலும் 43ஆவது திருப்புகழ் "காஞ்சிப் பதி மேவிய பெருமாளே" என்றும், "அறிவிலாப் பித்தர் உன்றனடி தொழாக் கெட்ட வஞ்சர்..." எனத் தொடங்கும் 44ஆவது திருப்புகழ் "குமரகோட்டத் தமர்ந்த பெருமாளே" என்றும் காஞ்சித் திருப்புகழ் நிறைவெய்தும் சிறப்பினையும் நாம் கண்டு மகிழலாம்.

காஞ்சி குமரகோட்டம் இருக்கும் இடம் தெரியாமல் இடம் மாறிச் சென்ற பாம்பன் சுவாமிகளைச் சிறுவனாகச் சென்று வழிகாட்டி அழைத்து வந்து - தரிசனம் செய்வித்து - பாடலையும் பெற்றான் குமரகோட்டத்து முருகன்.

கோபுர வாசலின் உட்புறச் சுவர்களின் இரு பக்கங்களிலும் "பாம்பன் சுவாமிகள் ஜவுளிக்கடை சத்திரம் வருதல்", பாம்பன் சுவாமிகளுக்கு சிறுவனாக வந்த முருகன் குமரகோட்டம் காண்பித்தல்", "கச்சியப்பரின் கந்தபுராண அரங்கேற்றம்" போன்ற குமரகோட்டத்து வரலாறுகள் அனைத்தும் அழகிய ஓவியமாக வரையப்பட்டுள்ளது. கோபுரவாசல் தாண்டி உள்ளே சென்றால் (நந்திக்குப் பதிலாக உள்ள) மயில், பெரிய தம்பம், பலிபீடம் ஆகியவை கடந்ததும் 16 தூண்களுடனான அகன்ற மண்டபம் காணப்படுகிறது. மண்டபத்தை அடுத்து நேராக உள்ள கருவறையில்- உருத்திராட்சம் கமண்டலம் ஆகியவற்றுடன் மூலவராக முருகப்பெருமான் அருள்பாலிக்கிறார்.

கருவறைக்கு எதிரே- அதாவது 16கால் மண்டபத்தின் வடக்காக- தனிச் சந்நிதியில் அருள்மிகு "தேவசேனாபதீச்சுவரர்" லிங்க வடிவில் கிழக்கு நோக்கிய வண்ணம் உள்ளார். முருகன் பிரம்மனைச் சிறையிட்டதுபற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. பிரம்மனுடன் வந்த முனிவர்கள் நடந்தவற்றைச் சிவபெருமானிடம் கூறுகிறார்கள். இறைவனும் பிரம்மனை மீட்டுவர நந்திதேவரை அனுப்பினார். "பிரம்மனைச் சிறையிலிருந்து விடுவிக்க முடியாது" என முருகன் பிடிவாதமாகக் கூறியதை நந்திதேவர் இறைவனிடம் கூற, அம்மையும் அப்பனும் முருகன் இருப்பிடம் சென்றனர்.

முருகனை நோக்கி இறைவன் புன்சிரிப்புடன், "நீ, என் கட்டளையை மீறியதற்குப் பிராயச்சித்தமாக காஞ்சியை அடைந்து, "தேவசேனாபதீச்சுவரர்" எனும் பெயருடன் ஓர் இலிங்கம் அமைத்து- பூசித்து வழிபட்டு இருப்பாயாக" எனக் கூறினார்.

தந்தையின் விருப்பப்படியே முருகப்பெருமான் பிரம்மனை விடுதலை செய்து, அம்மை அப்பனை வணங்கி விடைபெற்று காஞ்சியை அடைந்து "மாகாளம்" என்ற திருத்தலம் அருகே "தேவசேனாபதீச்சுவரர்" எனும் லிங்கத்தை அமைத்து வழிபட்டதாக காஞ்சிப் புராணம் கூறுகிறது.

"திசை முகனைக் கணங்களாற் சிவபெருமான் திருமுன்னர்ச் செலுத்தி உள்ளப்
பசையின் இருமுதுகுரவர் அடி வணங்கி விடை கொண்டு பழனக் காஞ்சி
வசை கடந்த நகர் எய்தி உலகாணித் தடமேல்சார் மாகா ளப்பால்
இசை விளங்கு தேவசேனாபதிச் சர இலிங்கம் இருத்திப் போற்றி"

**உன்னை உண்மையிலே புரிந்துகொண்டிருக்கும் நண்பன்தான் உன்னையே உருவாக்குகின்றான்.**

மேற்கு நோக்கிய திருக்கோவிலின் உட்பிரகாரத்தை வலம் வந்தால் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் கணபதியை வணங்கி - வட சுற்றில் திரும்பினால் பழனி ஆண்டவர், வள்ளி - தெய்வானை சமேத முருகப்பெருமானின் உற்சவ மூர்த்தத்தினைத் தரிசிக்கின்றோம். வள்ளி- தெய்வானை மூல விக்கிரகங்களாக இல்லாமல் உற்சவ மூர்த்தங்களாக இச் சந்நிதியில் அமர்ந்திருப்பது குறிப்பிடவேண்டிய அம்சமாகும். பைரவர், பள்ளியறை, கிருஷ்ணர் மூல மூர்த்தமும் - உற்சவரும், சோமஸ்கந்தர், முத்துக்குமரர், நவ வீரர்கள், ஸ்ரீ கஜலெட்சுமி என வட சுற்றில் வரிசையாக மூர்த்தங்கள் உள்ளன. தென்கிழக்கு மூலையில் நவக்கிரக சந்நிதி உண்டு. தெற்குச் சுற்றில் அருணகிரிநாதர், இராமலிங்க அடிகளார் என முருகன் அருள்பெற்ற அடியார்களின் சந்நிதிகள் அடுத்தடுத்துக் காணப்படுகின்றன.

பிரம்மாவின் வடிவில் முருகன் மூலவராக அமர்ந்திருக்கும் திருத்தலம்.
அருணகிரிநாதர் அழகிய சந்தத் தமிழில் 44 திருப்புகழைப் பாமாலையாக்கி சுப்பிரமணியருக்குச் சூட்டி மகிழ்ந்த புண்ணிய பூமி.
கச்சியப்பரின் "கந்தபுராணம்" அரங்கேறிய அற்புதமான இடம்.
முருகன் வணங்கிய லிங்க வடிவ "தேவசேனாபதீச்சுவரர்" அருள்பாலிக்கும் திருக்கோவில்.

மேற்குறித்த காரணங்களினால் காஞ்சியின் குமரகோட்டம் தனித்துவமான மகிமைபெற்று விளங்குகிறது. காஞ்சிபுரம் செல்ல வாய்ப்புக் கிடைக்கும் ஒவ்வொருவரும் காஞ்சியின் குமரகோட்டம் உட்பட காஞ்சி காமாட்சி, ஏகம்பேஸ்வரர், கைலாசநாதர் போன்ற முக்கிய திருத்தலங்களையும் தரிசித்து உய்வுபெற வேண்டும் என்பதுவே இந்தத் தொண்டனின் பேரவாவாகும்.




# தைமாத வாராந்த நிகழ்வுகள்

06.01.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "மங்கள இசை"

வழங்குபவர்கள் :- மறவனூர் T.M. வாசகர் குழுவினர்

---

13.01.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- திரு நயினை ப. சிவமைந்தன் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

20.01.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

27.01.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் தைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ஆறு. திருமுருகன் அவர்கள்

[தலைவர்- துர்க்காதேவி தேவஸ்தானம்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[அதிபர்- புட்டளை மகா வித்தியாலயம்]

229ஆவது மலர்

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

